# பொன் விழா

## மலர்



### ஸ்ரீ சரஸ்வதி சங்கம்

புதுவயல்.

உள்ளது

உள்ளபடியே

எடுத்துக்

காண்பிக்க



LIPI

லிபி

போட்டோகிராபிக்

பேப்பர்களே!

(இந்தியாவிலேயே முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம்)

லிப்ரா போட்டோகிராபிக் இண்டஸ்ட்ரீஸ்

(போத்தனூர் - தென் இந்தியா)

# பொன் விழா மலர்.



## ஸ்ரீ சரசுவதி சங்கம்,

புதுவயல்.

தோற்றம்: 24—7—1922.

நாள்: 22—5—1972.

# பொன் விழாக் குழு.

**தலைவர்:**

பெரி. சித. இராமசாமி செட்டியார்.

செயலாளர்: பழ. ஏகப்பன்.

**உதவிச் செயலாளர்கள்:**

பெரி. வீரப்பன். இராம. வீரப்பன்.

**செயற் குழு உறுப்பினர்கள்:**

1 சே. பழனியப்ப செட்டியார்.
2 மெ. சிதம்பரம் செட்டியார்.
3 வீர. சோலையப்ப செட்டியார்.
4 வீர. இராமனுதன் செட்டியார்.
5 சித. அரு. வீரப்ப செட்டியார்.
6 சி. வீர. சி. வீரப்ப செட்டியார்.
7 வெ. சோமையா செட்டியார்.
8 அரு. சோமசுந்தரன்.
9 நா. வயி. ரெங்கனுதன்.
10 வீர. வீர. சோலையப்பன்.
11 பெரி. சிவனடியான்.
12 பழ. சம்பந்தம்.
13 வீர. பழமலை.
14 இராம. உடையப்பன்.
15 சித. வயி. வீரப்ப செட்டியார்.
16 சோம. சுப்பிரமணியன் செட்டியார்.
17 குழ. உடையப்ப செட்டியார்.
18 ரெ. சிங்கார வடிவேலன்.
19 வி. பழனியப்பன்.
20 வீர. மெய்யப்பன்.
21 சித. வினைதீர்த்தான்.

## பதிப்புரை.

"வெள்ளி பெரிதன்று, விளங்கும் அறிவு தரும்
பள்ளி பெரிதென்று படைத்த கலைக்கோயில்"

என்று போற்றுமாறு சிறப்புப் பெற்றது ஸ்ரீ சரஸ்வதி சங்கம். சங்கம் தோன்றி இற்றைக்கு 50 ஆண்டுகள் நிறைவுஎய்துகின்றன. ஆலவாய் அண்ணல்குடிகொண்ட மதுரை மாநகரில் தோன்றிய முச்சங்கங்களின் பின் தொடர்ச்சியாய்-முத்தமிழ் காக்கும் சரசுவதி சங்கம் இன்று பொன்விழாக் காணுகிறது. சங்கம்தன் வாழ்க்கைப் பாதையில் ஆண்டுக்காண்டு வளமும் பொலிவும் பெற்றுப் பல்லோர் போற்றும் வண்ணம் வளர்ந்து இன்று அரை நூற்றுண்டை அடைந்திருக்கிறது. அத்தகைய பொன் ஞளைக் குறிக்கும் வண்ணம் இம்மலரை உங்கள் முன் படைத்திருக்கின்றோம்.

சங்கம் தோன்றிய காலமுதல் "ஆண்டுஅறிக்கைகள்' பல வெளியிடப் பெற்று இருக்கின்றன. அவை அனைத்தும் சங்கத்தின் வளர்ச்சியையும் சங்கம் தோற்றிய பள்ளியின் உயர்வையும் காட்டுவனவாக அமைந்துள்ளன. எனவே சங்கத்தின் பொன்விழாவில் அவ்வறிக்கை — ஒரு சிறப்பு மலராக வெளிவரவேண்டும் என எண்ணத்தோடு இம் மலர் உருவாக்கப் பெற்று இருக்கிறது.

மலரில் சங்கம், பள்ளியின் வளர்ச்சியைக் குறிக்கும் கட்டுரைகளோடு பல புலவர் பெருமக்களின் கருத்து வண்ணங்கள் கட்டுரைகளாகத் தரப்பட்டு உள்ளன. பாவாணர்களின் சிந்தனைக் களஞ்சியங்கள் பாக்களாக மிளிர்கின்றன.

இது ஒரு சிறு முயற்சி இம்முயற்சிக்குப் பெரிதும் உதவிய கட்டுரையாளர்களுக்கும், கவிஞர்களுக்கும், வாழ்த்துரை தந்த பெருமக்களுக்கும், விளம்பரம் தந்து உதவிய நிறுவனங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மலரைச் சிறந்த முறையில் அழகுற அச்சிட்டு அளித்த புதுவயல் ஜி. டி. நாயுடு அறிவுக்கூடத் தலைவர் திரு. V. வீரப்பன் அவர்கட்கு எங்கள் நன்றியை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க கலை!

மலர்க்குழுவினர்.

# கலைமகள் வணக்கம்.

ஆய கலைக ளறுபத்து நான்கினையும்
ஏய வுணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந்—துடியிடையும்
அல்லும் பகலும் அனவரத முந்துதித்தால்
கல்லுஞ்சொல் லாதோ கவி.

—சரசுவதியந்தாதி.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீலஸ்ரீ. சுந்தரசுவாமிகள்
ஆதீனகர்த்தர்
கௌமாரமடாலயம்
சிரவணபுரம்
சின்னவேடம்பட்டி (அஞ்சல்)
கோவை.

வாழ்த்து வெண்பா

—*—

பொங்கும் வளமார் புதுவயல் நன்நகரில்
தங்கும் புகழார் சரஸ்வதி சங்கமணிப்
பொன்விழாக் கொண்டு பொலிவுடனே வாழியவே
நன்முருக வேளருளி னால்.

Dr. Rajah,
Sir Muthiah Chettiar of Chettinad.

Chettinad House Adyar,
Rajah Annamalaipuram P.O.
Madras-28.
7—2—72

திரு.பெரி.சித.ராமசாமி செட்டியார் அவர்கள்,
ஸ்ரீ சரஸ்வதி சங்கம்,
புதுவயல்.

அன்புள்ள ஐயா,

தங்கள் அன்புள்ள 24-3-72உ கடிதம் கிடைத்தது

ஸ்ரீ சரஸ்வதிசங்கத்தின் பொன்விழாவும் வித்தியாசாலை 40ஆம் ஆண்டுவிழாவும் நடைபெற இருப்பது அறிந்து மகிழ்ந்தேன். நல்ல ஆக்கப்பணிகளைச் செய்து வரும் தங்கள்சங்கம் மேன்மேலும் நற்பணிகளைப் பல செய்து வைர விழா போன்ற பல விழாக்களைக் கொண்டாடி மேலும் சிறப்புக்கள் பல பெற வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். என் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

(ஒப்பம்)

University of Madras

N. D. Sundaravadivelu,
Vice-Chancellor,

University Buldings,
Triplicane.
Madras-5.
ஏப்ரல் 20, 1972.

அன்புடையீர்,

ஸ்ரீ சரஸ்வதி சங்கத்தின் பொன் விழாவும் சரசுவதிவித்தியாசாலே உயர்துவக்கப்பள்ளியின் நாற்பதாம் ஆண்டு விழாவும் மே திங்களில் கொண்டாடவிருப்பது அறிய மிக்க மகிழ்ச்சி. தங்கள் சங்கத்தின்ஐம்பதாண்டுப் பணி போற்று தற்குரியது. தங்கள் தமிழ்ப்பணி வளர்க.

விழா நன்முறையில் அமைய வாழ்த்துகிறேன்.

அன்புள்ள,
(ஒப்பம்)

செயலாளர்,
ஸ்ரீ சரஸ்வதி சங்கம்,
புதுவயல்.
இராமநாதபுரம் மாவட்டம்.

His Holiness Thiruvarul Thavayoga

*Sri la Sri Somasundara Sri Gnanasambanda*
*Desika Paramachariya Swamigal*

MADURAI AADHEENAM

*70, South Avani Moola Street.*
Madurai.
17-4-72

திரு. பழ. முத்தப்பன்,
செயலாளர்,
ஸ்ரீ சரஸ்வதி சங்கம் புதுவயல்
இராமநாதபுரம் மாவட்டம்.

10,ம் தேதி எழுதிய கடிதம் கிடைத்து, தங்களது சங்கம் செய்துவரும் பணிகளை அறிந்து மகிழ்கின்றோம். கடந்த 50, ஆண்டு காலமாக அதனைத் தோற்றி, போற்றிவளர்த்து வந்த அனைவரையும் பாராட்டுகிறோம்.

பொன்விழா மலரில் வெளியிட்டுக் கொள்ள "யாவரும் ஆராய்ந்து தெளியவேண்டிய உண்மைகள்" என்னும் கட்டுரை ஒன்று இத்துடன் வைத்து வருகிறது.

பொன்விழா,யாதொரு விக்கினமுமின்றி வெகு விமரிசையாக நடைபெறவும்சங்கம்மேன் மேலும் சிறந்தோங்கி வளர்ந்து பல்லாண்டு வாழ்ந்து பல நற்பணிகள் செய்து மேன்மை கொள் சைவநீதி உலகெலாம் பரவச்செய்யவும் அதில் பங்கு கொள்வோர் அனைவரும் எல்லா நலங்களும் பெற்றுத்திகழவும், திருவருள்பாலிக்குமாறு எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கரும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றோம்.

ஒப்பம்:

சா. கணேசன்,
SAW. GANESAN

Karpaka Nilayam
Karaikudi-1.

புதுவயல் சரஸ்வதி சங்கம் தோன்றி ஐம்பது ஆண்டுகள் நிறைந்தன. தான் பிறந்த பத்தாண்டு நிறைவில் தொடங்கிய சரஸ்வதி வித்தியாசாலை நாற்பது ஆண்டுகள் நிறைந்து மிளிர்கிறது.

இவ்விரண்டின் பணியால் எண்ணற்ற இளைஞர்கள் எழுச்சி பெற்றனர். கல்லாதார்யாவரும் இல்லை எனக்கூறும் வண்ணம் செயலாற்றித் திகழும் சங்கத்தையும், வித்தியா சாலையையும் எத்துணைப்புகழினும் தகும்.

நாடு, மொழி, தெய்வம் மூன்றும் மறவாத நெஞ்சினராய்மக்களை உருவாக்கிய இவ்விரண்டு நிறுவனங்களையும் புதுவயல் பெருமக்கள் இரு கண் எனப்போற்றிக் காத்து புரந்து வருகின்றனர்

முழு முதல் இறைவன் திருவருளால் சங்கமும்-வித்தியாசாலையும், சிவமும்சக்தியும் போல், கதிரும் ஒளியும் போல் என்றும் நின்று நிலவி நன்று பயன்சுரக்க மனமார-வாய்மணக்க வாழ்த்தி மகிழ்வோமாக!

அன்பன்

சம்பன் அடிப்பொடி
(ஒப்பம்)

அனுப்புநர்

திரு எஸ். ராஜா, பி. ஏ., பி. டி.,
மாவட்டக் கல்வி அலுவலர்,
தேவகோட்டை. 26-4-1972

பெறுநர்

திரு பழ. முத்தப்பன்,
செயலாளர்,
ஸ்ரீ சரசுவதி சங்கம் புதுவயல்.

அன்புடையீர்,

புதுவயல் சரசுவதி சங்கத்தின் பொன் விழாவும் சரசுவதிவித்யாசாலையின் 40ம் ஆண்டு விழாவும் நடைபெற இருப்பது பற்றியும் அதை யொட்டி மலர் வெளியிடுவதையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். உங்கள் பள்ளியில் எட்டாவது வகுப்பு மாணவன் தேசிய படிப்புதவி பெற்றிருப்பதும் மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும். ஆசிரியர்களுக்கு எனது பாராட்டுதலை தெரிவித்துக்கொள்கிறேன். மாணவர்கள் அறிவிலும் பண்பிலும் சிறந்து விளங்க தொடர்ந்து பணி புரிய விரும்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(ஒப்பம்)

ராய. சொக்கலிங்கன்,
இயக்குனர், தமிழ் ஆராய்ச்சித்துறை,
அழகப்பா கல்லூரி,

அழகப்பாபுரம்,
காரைக்குடி-3.
நாள்: 29...4...72

அன்புடையிர்,

தங்கள் மடல் கிடைத்தது. தங்கள் சங்கம் பொன்விழா கொண்டாடுவது குறித்து மிக்க மகிழ்ச்சி விழாவை ஒட்டி மலர் வெளியிடுவதை வரவேற்கின்றேன்.

தங்கள் சங்கத்திற்குப் பல ஆண்டுகட்கு முன் நான் வந்திருந்ததும், திரு. வி. க. போன்ற பெரியோர்கள் வந்து கலந்துகொண்டதும் நினைவிருக்கிறது.

பொன்விழா, சிறப்பாக நடைபெறவும், மலர் பொலிவுபெற்று உயரவும், சங்கம் மேலும் பல நல்லபணிகள் ஆற்றவும் கூத்தப் பெருமான் அருள்வாஞக.

அன்புள்ள,
(ஒப்பம்)

# வாழ்த்து!

பொன்னும் கலையும் பொதுநலமும்
பொங்கிப் பொலியும் புதுவயலில்
அன்னை தேவி சரசுவதி பேர்
அமைந்த சங்கம் அழகாக
வன்னத் தோகை மயில் மீது
வருமா முருகன் திருவருளால்
மன்னும் உலகில் நீடூழி
வாழ்க வாழ்க வாழ்கவே.

தாலம் புகழ்வித்யா சாலை புதுவயலில்
சாலச் சிறந்து தழைக்குமே - சீலமிகு
தக்கார் பெரியார் சரசுவதி சங்கத்தார்
எக்காலும் போற்ற இனிது.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

★

தங்கத் தணல்போலச் சக்தியுடன் பொலியும்
சங்கர னருளாற் சந்ததமும்-மங்கலம்
பொங்கும் புதுவயலிற் போந்த சரசுவதி
சங்கம் வளர்க தழைத்து.

—சுத்தானந்த பாரதியார்.

# ஸ்ரீ சரசுவதி சங்கம் தோற்று வித்த சிறப்புடை மூவர்.



திரு சா. சிதம்பரம் செட்டியார் அவர்கள்

திரு பெரி. சித. இராமசாமி செட்டியார் அவர்கள்

திரு பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள்

உ

முத்தமிழ் முழங்குக!

## பொன் விழாக் காணும் பொலிவுடைச் சங்கம்.

பொன்னுங்கலையும், பொதுநலமும் பொங்கிப் பொலியும் புதுவயலில் இன்னருஞ் செல்வி **கலைமகளின்** இனியபெயரால் அமைந்திட்ட **சரசுவதி சங்கம்**, முடியுடை மூவேந்தர் வளர்த்த முத்தமிழைக் காக்கும் முகத்தான் எழுந்த முதல் முயற்சி. முச்சங்கப் பணியின் பின் தொடர்ச்சி. ஐம்பது ஆண்டுகட்கு முன்னர் தமிழ் வளர்க்கும் உள்ளத்தால் கடமை செய்யும் ஆர்வத்தால், சாலிவாகன சகம் 1845 கலி 5024 துந்துபி ஆண்டு ஆடித் திங்கள் 9ஆம் நாள் (22-7-1922) திங்கட்கிழமை அமாவாசை திதி பூசநட்சத்திரம் அமிர்த சித்தயோகம் கூடிய மாலை நல்வேளையில் திரு. **அ.மு.வீர. கட்டிடக் கோட்டில்** திருவருட் பொலிவும், தமிழன்னையின் தண்ணளியும் துணைசெய்ய இந்நகர்ப் பேரன்பர்கள் திரு. **சா. சிதம்பரம் செட்டியார்** அவர்கள், திரு. **பெரி, சித. இராமசாமி செட்டியார்** அவர்கள், திரு. **பெரி. அரு பெரியகருப்பன் செட்டியார்** அவர்கள் ஆகிய மூவர்களின் நன்முயற்சியால் **ஸ்ரீ சரசுவதி சங்கம்** நிறுவப்பெற்றது.

சங்கத்தின் கால்கோள் விழாவிற்கு கோட்டையூர் திரு. **அ. ராம. அ. கருப்பஞ் செட்டியார்** அவர்கள் (A.K. செட்டியார், ஆசிரியர், குமரிமலர்) தலைமைதாங்க,

அறிஞர் பலர் சொற்பொழிவாற்றினர். அன்றைய சங்கத்தின் அங்கத்தினர் எண்ணிக்கை 9 ஆகும். ஆரம்பச் சந்தா வருடம் ஒன்றுக்கு ரூ 0. 12. 0. ஆகும்.

திரு A. K. செட்டியார் அவர்கள் தோற்றி வைத்த சங்கம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இன்று உலகோர் புகழ, உயர் தமிழறிஞர்கள் வாழ்த்துரைக்க பொன் விழாக் காண்கிறது. சரசுவதி சங்கத்தைத் தோற்றுவித்த பெருமகனார் A.K. செட்டியார் அவர்கள் இன்றைய பொன்விழாவில் கலந்து கொள்வது சங்கத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டுகிறது.

**வளர்ச்சி:-** திரு. அ. மு. வீர. அவர்கள் கட்டிடக் கேட்டில் பிறந்த சங்கம் திரு. அ. ப சி. மு சி. அவர்கள் கட்டிடக் கேட்டிலும் திரு. பெ ப. வி சித. பங்களா மேமாடியிலும், திரு பெரி. சித ராம. அவர்கள் கட்டிடக் கேட்டிலும் சிறுநடையிட்டுத் தவழ்ந்தும், திரு. பெ. பெரி. அவர்கள் பங்களாக் கேட்டில் இளமையின் வளர்வு எய்தி இன்று தன் சார்பிலுள்ள **ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலையின்** கவின்மிகு கட்டிடத்தில் அழகு நடையிட்டு அருங்கலைகளை வளர்த்து வருகிறது. 9 அங்கத்தினர்களுடன் தோன்றிய சங்கம் இன்று 83 அங்கத்தினர்களால் பேணி வளர்க்கப்பெறுகிறது.

**குறிக்கோள்:-** சங்கம் தோன்றிய இந்நூற்றுண்டின் தொடக்க காலத்தில் தமிழகத்துள் கழகங்கள் என இருந்தவை பல. அவற்றுள் **"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்பதைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டு இது காறும் தமிழ்த் தொண்டும், கல்வித் தொண்டும் ஒருசேரச் செய்து தந்நிலை குன்றாது நின்றிலங்குவது இச் சங்கமே எனின் அது மிகையாகாது.

சங்கம் தமிழ்பரப்ப மேற்கொண்ட முதல் வழி மாதக்கூட்டங்கள், பெரியார் விழாக்கள் முதலியவற்றைத் தமிழறிஞர்களைக் கொண்டு நடத்தித் தமிழ் விருந்து படைத்மையாகும். அடுத்து மேற்கொண்ட வழி பழஞ்சுவடிகளில் பழுதடைந்து கிடக்கும் தமிழ்க் களஞ்சியங்களைத் தமிழுலகத்திற்கு எடுத்துத் தருவது. அந்நிலையில் வெளிவந்ததுதான் **''உமையாம்பிகை நவரெத்தின ஆசிரியம்''** என்ற அரிய நூல். அதோடு வள்ளுவப் பெருமானால் பெரிதும் வலியுறுத்தப் பெற்ற கொல்லாமையைப் புலப்படுத்தும் **1. உய்யவந்த அம்மனின் உத்தரவு 2. சைவம் பிடிக்கக்கூடாதா 3. என்ன செய்யப் போகிறீர்கள்** என்பன போன்ற நூல்களை வெளியிட்டதும் குறிப்பிடத்தக்கதாம். தன் தொண்டின் மறுபாதியாம் கல்வித் தொண்டைச் செய்யும் முகத்தான் சங்கம் தான் தோன்றிய பத்து ஆண்டுகள் கழித்து **ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலையைத்** தோற்றி இதுகாறும் பல்லாயிரக் கணக்கான இள உள்ளங்களின் கல்விக்கண்களைத் திறந்தும்,வரப்போகும் சமுதாயத்திற்கு தொண்டாற்றியும் வருகிறது.

**விழாக்கள்:-** கலைமகள் மீது கொண்ட கழிபெருங்காதலால் புதுவயல் வாழ் தன வணிகப்பெருமக்கள் கலை அன்னைக்கு வெண் பொன்னால் உருவச்சிலையமைத்து ஆண்டுதோறும் கலைமகள் விழாவன்று அழகு ரதத்தில் அன்னையைக் கொலு வீற்றிருக்கச் செய்து நகர்வலம் செய்வது குறிப்பிடத்தக்கதாகும்; அவ்விழாவைத் தவிர தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பு பிள்ளையார் சதுர்த்தி, கிலுக்கி எடுத்தல், விசயதசமி, பொங்கற் புதுநாள், அண்ணல் காந்தி விழா போன்ற விழாக்களும் கொண்டாடப்பெறுகின்றன.

**நூல்நிலையம்:** சங்கத்தின் சார்பில் நடைபெறும் வாசக சாலையில் தமிழறிஞர் பலராலும், தமிழக ஆதீனங்களாலும் வழங்கப்பெற்ற இலக்கிய ஏடுகளும் மற்றும் பலபேரறிஞர்களால் அளிக்கப்பெற்ற பல புத்தகங்களும் சங்கத்தினரால் வாங்கப்பெற்றநூல்களும் சேர்ந்து 776 புத்தகங்கள் உள்ளன.

இவ்வாறு தமிழ்ப் பயிர், கல்விப் பயிர் வளர இடையருது தொண்டாற்றி வரும் சங்கத்தைத் தோற்றுவித்த பெருமக்கள் மூவரையும் போற்றி வணங்குவதோடு சங்கம் வளர, சங்கம் கண்ட பள்ளி வளர ஐம்பது ஆண்டுகளாக பல்லாற்ருனும் துணை செய்பவர்களுக்கும் ஆக்கம் தருபவர்கட்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

சங்கத்தின் தொண்டின்பயனை உய்த்துணரும் இந்தப் பொன் விழாவில் சங்கம் மேன்மேலும் வளர்ந்து வைர விழா, நூற்ருண்டு விழா முதலியன கண்டு சிறப்புற எல்லாம் வல்ல இறையருளை இறைஞ்சுகிருேம்.

சங்கத்தலைவர் :

திரு. பெரி. சித. இராமசாமி செட்டியார்

செயலாளர் :

திரு பெ. ப. வி. அரு. ராம. முத்தப்பன்

துணைச்செயலாளர்:

திரு பழ. முத்தப்பன்

—★—

## சங்க உறுப்பினர்கள்

1. திரு. பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள்
2. ,, பெரி. சித. இராமசாமி செட்டியார் ,,
3. ,, பெ. ப வி. அரு. ராம. முத்தப்ப செட்டியார் ,,
4. ,, எ. பெரி. வீர. பழனியப்ப செட்டியார் ,,
5. ,, வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் ,,
6. ,, எ. பெரி. வீர. சோலையப்ப செட்டியார் ,,
7. ,, பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் ,,
8. ,, மெ. சிதம்பரம் செட்டியார் ,,
9. ,, மு. வினைதீர்த்தான் செட்டியார் ,,
10. ,, சுப. நாராயணன் செட்டியார் ,,
11. ,, சித. அரு. வீரப்ப செட்டியார் ,,
12. ,, சோம. இராமனுதன் செட்டியார் ,,
13. ,, சே. பழனியப்ப செட்டியார் ,,
14. ,, பழ. ப. ப. வீர. வீரப்ப செட்டியார் ,,
15. ,, அ. அழ. அண்ணாமலை செட்டியார் ,,
16. ,, சித. வயி. வயிரவன் செட்டியார் ,,
17. ,, பெ. ப. வி பழ. இராமசாமி செட்டியார் ,,
18. ,, அள. குப. சுப வீரப்ப செட்டியார் ,,
19. ,, பழ. ராம. அருணாசலம் செட்டியார் ,,
20. ,, வீர. பழ. விருத்தகிரி செட்டியார் ,,
21. ,, மெ. கரு. அண்ணாமலை செட்டியார் ,,
22. ,, எ. அ. ப. வீர. பழனியப்ப செட்டியார் ,,
23. ,, கா. அருணாசலம் செட்டியார் ,,
24. ,, நா. வயி. ரெங்கநாதன் செட்டியார் ,,
25. ,, சு. பழ. ராம. சுப்பிரமணியன் செட்டியார் ,,
26. ,, சித. வயி. சிதம்பரம் செட்டியார் ,,
27. ,, டாக்டர் வீர. இராமநாதன் செட்டியார் ,,
28. ,, வீர. வீர. சோலையப்ப செட்டியார் ,,
29. ,, பெரி. அரு. நா. வீரப்ப செட்டியார் ,,
30. ,, V. இராமசாமி செட்டியார் ,,

31 திரு சித. வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள்
32 ,, ந. சுப. செல்லப்ப செட்டியார் ,,
33 ,, அள. குப. கும. ராம. குமரப்ப செட்டியார் ,,
34 ,, கா. விரப்ப செட்டியார் ,,
35 ,, சித. வயி, விரப்ப செட்டியார் ,,
36 ,, மு. ரெங்கநாதன் ,,
37 ,, பெரி. சிவனடியான் ,,
38 ,, விர. நாராயணன் ,,
39 ,, மு. சொக்கலிங்கம் கடியாபட்டி ,,
40 ,, சித. நல்லபெருமாள் ,,
41 ,, இராம. விரப்பன் ,,
42 ,, அரு. நா. நா. நாராயணன், காரைக்குடி
43 ,, விர. பழமலை ,,
44 ,, ராம. சித. ராமசாமி செட்டியார் ,,
45 ,, பெரி. வடு. விர. வடுகநாதன் செட்டியார் ,,
46 ,, அ. அருணாசலம் செட்டியார் ,,
47 ,, பெ. ராம. முத்துக்கருப்பன் செட்டியார் ,,
48 ,, பெரி. சித. ராம. சிதம்பரம் ,,
49 ,, V. பழனியப்பன் ,,
50 ,, பெரி. விரப்பன் ,,
51 ,, ரெ. சிங்காரவடிவேலன், கண்டனூர் ,,
52 ,, விர. கதிரேசன் ,,
53 ,, அழகு. நாகப்பன் ,,
54 ,, பழ. ஏகப்பன் ,,
55 ,, மு. பெரி. சின்னக்கருப்பன் ,,
56 ,, சா. சித, திருநாவுக்கரசு ,,
57 ,, கு. ராம. விர. ராமசாமி ,,
58 ,, பெரி. சித. ராம. ராமநாதன் ,,
59 ,, சோம. சுப்பிரமணியன் செட்டியார் ,,
60 ,, சுப. இராமநாதன் ,,
61 ,, விர. அருணாசலம் ,,
62 ,, சுப. வேலப்பன் ,,

| | | | |
|---|---|---|---|
| 63 | திரு | பெரி. அழகப்பன் | அவர்கள் |
| 64 | ,, | லெ. ராம. லெ, லெ. லெட்சுமணன் | ,, |
| 65 | ,, | வெ. சித. வெங்கிடாசலம் | ,, |
| 66 | ,, | ராம. சிதம்பரம் | ,, |
| 67 | ,, | அழ. மு. முத்து | ,, |
| 68 | ,, | பெரி. சிதம்பரம் | ,, |
| 69 | ,, | பழ, ரெங்கநாதன் | ,, |
| 70 | ,, | சுப. வீர. சுப்பிரமணியன் | ,, |
| 71 | ,, | அ. மு. வீர. சா, வீர. வீரப்பன் | ,, |
| 72 | ,, | பழ. முத்துபழனியப்பன் | ,, |
| 73 | ,, | குழ. உடையப்பன் | ,, |
| 74 | ,, | பெ, ப. வி. அரு. ராம வினைதீர்த்தான் | ,, |
| 75 | ,, | அ. குப்பான் | ,, |
| 76 | ,, | பழ. முத்தப்பன் | ,, |
| 77 | ,, | ப. செ. பழ. வீர. வெங்கிடாசலம் | ,, |
| 78 | ,, | மெ. சித, மெய்யப்பன் | ,, |
| 79 | ,, | ப. செ. பள. வீர. நாச்சியப்பன் | ,, |
| 80 | ,, | ப. செ. பள. வி. சேதுராமன் | ,, |
| 81 | ,, | இராம. சோமசுந்தரம் | ,, |
| 82 | ,, | கவிஞர் அரு. சோமசுந்தரம், தேவகோட்டை | ,, |
| 83 | ,, | பழ. கோவிந்தன் | ,, |

மின்னியல் விளக்கு விரும்பந்தக்கதுதான்; ஆனால், அதை எப்பொழுதும் நம்பியிருக்க முடியவில்லை. வேறு வழி? மின் விளக்குக்கு ஒப்பாக ஒளி தருவதும், விலை மலிவானதுமாகிய

# "நடராஜா"

கண்ணாடி (சிம்னி) பொருத்தியுள்ள விளக்கு, கிரௌன் கார்க் சோடா பாட்டில்கள், மற்றும் பலவிதமான பாட்டில்கள், தம்ளர்கள், ஜாடிகள் உற்பத்தியாளர்:

**ATTUR GLASS INDUSTRIES [P] LTD.,**

P. B. NO. 3.

ATTUR (Salem District)

ௐ

உ

புதுவயல்

**ஸ்ரீ சரஸ்வதி சங்க**

பொன் விழா வைபவத்திற்கு

எங்கள் நல் வாழ்த்துக்கள்

# ராஜராஜேஸ்வரி பிக்சர்ஸ்,

B-7. தெற்கு தில்லை நகர்,

**திருச்சி-18.**

## முன்னாள் சங்க நிர்வாகிகள்.

### தலைவர்களாக

திரு. சா. சிதம்பரம் அவர்கள்
,, வடு. மு. ராம. பழ. இராமநாதன் அவர்கள்
,, வீர. பழ. வினைதீர்த்தான் ,,
,, வீர. பழநியப்பன் ,,
,, வீர. சோலையப்பன் ,,
,, பழ. முத்துவள்ளியப்பன் ,,
,, மெ. சிதம்பரம் ,,
,, சே. பழநியப்பன் ,,
,, சித. அரு. வீரப்பன் ,,

*

### செயலாளர்களாக

திரு. பெரி. அரு. பெரியகருப்பன் அவர்கள்
,, சா. சிதம்பரம் ,,
,, வடு. மு. ராம. பழ. இராமநாதன் ,,
,, பெரி. சித. இராமசாமி ,,
,, மெ. சிதம்பரம் ,,
,, சே. பழநியப்பன் ,,
,, அ. ராமசாமி ,,
,, அழகு. உலகப்பன் ,,
,, நா. வயி. ரெங்கநாதன் ,,
,, சித. நல்லபெருமாள் ,,
,, சித.ராம.சிதம்பரம் B.E , ,,
,, வி. பழநியப்பன் M.A., ,,
,, வீர. சோலையப்பன் ,,

*

### துணைச் செயலாளர்களாக

திரு. சித. இராமசாமி அவர்கள்
,, பெரி. அரு. பெரியகருப்பன் ,,
,, வடு. மு. ராம. பழ. இராமநாதன் ,,
,, சே. பழநியப்பன் ,,
,, சா. சிதம்பரம் ,,
,, வீர. சோலையப்பன் ,,
,, பழ. வீரப்பன் ,,
,, நா. செல்லப்பன் ,,
,, பழ. ஏகப்பன் B.Com, ,,

*

உ

முத்தமிழ் முழங்குக.


# சங்கம் தோற்றிய பள்ளி.

''யாவினும் புண்ணியங்கோடி-ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தல்''

என்ற பாரதியின் வாக்குப்படி ஸ்ரீ சரசுவதி சங்கம் தன் தலையாய கொள்கைகளுள் ஒன்முன கல்விப்பணியைச் செயலாக்கும் முகத்தான் ஸ்ரீ சரசுவதி வித்தியா சாலையை ஆங்கிரச ஆண்டு தைத்திங்கள் 4-ஆம் நாள் (16-1-1933) தோற்றுவித்தது. சங்கத்தின் அங்கத்தினர்களின் அரும் முயற்சியால் அன்று காலை 9-30 மணிக்கு திரு பெரி. சித. ராம அவர்கள் கட்டிடக் கேட்டில் காரைக்குடி திரு. ஆ. வி லெ. அருணாசலம் செட்டியார் அவர்கள் பள்ளியைத் துவக்கி வைத்தார்கள். அப்பொழுது இரு ஆசிரியப் பெருமக்களால் 14 மாணவிகளுக்கும் 6 மாணவர்கட்கும் 4 வகுப்புகளாகப் பிரித்து கல்வி புகட்டப் பெற்றது.

பின் சங்கத்தைத் தோற்றுவித்த அன்பர்கள் பயின்ற அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற இந்நகர்ப் பங்களாப் பள்ளியின் நிர்வாகத்தை 1-7-1938 முதல் சங்க அங்கத்தினர்கள் ஒப்புக் கொண்டு, அத்துடன் வித்தியாசாலையை இணைத்து இன்று அரசாங்கத்தின் அங்கிகாரம் பெற்றதுடன் அரசாங்கத்தின் பொருளுதவியும் பெற்று சிறப்புடன் வித்தியாசாலையை நடத்திவருகின்றனர்.

திருவாளர் அள.பெரி.வீர.ராம. அவர்கள் குடும்பத்தார் மனமுவந்து நன்கொடையாக அளித்த இடத்தில் வெகுதான்யஆண்டு சித்திரைத் திங்கள் 31ம்



ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலைக் கட்டிடம்.

நாள் பள்ளிக்கென ஏற்படுத்தப்பெற்ற புதிய கட்டிடத்திற்கு தென் ஆற்காடு மாவட்டக் கல்வி அதிகாரி(D.E.O) திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை பி.ஏ.எல்.டி அவர்கள் கல்நாட்டுவிழாச் செய்தார்கள். திரு. வெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் அவர்களின் பெரும் பொருள் உதவியைக் கொண்டும், பல அன்பர்களின் பொருளுதவியைக் கொண்டும் பல பெரியார்களின் உழைப்பினலும், கட்டிடவேலைகள் இனிதே நிறைவுற்று பிரமாதி ஆண்டு சித்திரைத் திங்கள் 11-ம் நாள் (24-4-1939) காலையில் செட்டிநாட்டரசர் திரு. சா. ராம.மு.அ. அண்ணாமலை செட்டியார் KtL. LD அவர்கள் புதிய கட்டிடத்தைத் திறத்து வைத்தார்கள்.

தொடக்க காலத்தில் திரு. வெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் அவர்கள் பள்ளியின் செயலாளராகவும், இந்நகர் தனவணிகப் பெருமக்கள் பலர் புரவலர்களாகவும் இருந்து பள்ளியைப் பேணி வளர்த்து வந்தனர். இன்று திரு. வெ. ப. வி. அரு. இராம. முத்தப்பன் அவர்கள், மானேஜராகவும், திரு. மெ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் கரஸ்பாண்டெண்டாகவும், திரு. வெ. பெரி. வீர. பழனியப்ப செட்டியார் அவர்கள் துணைக் கரஸ்பாண்டெண்டாகவும் இருந்து வித்தியாசாலையைப் பேணிக் காத்து வருகின்றனர். இப்பள்ளியில் பயின்ற மாணவர்கள் இன்று பல துறையிலும் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாம். பள்ளியில் ஏட்டுக் கல்வி மட்டுமின்றி முத்தமிழும் கற்பிக்க பெறுகிறது. இன்றைய இலக்கிய உலகில் முன்னணியாக விளங்கும் பேச்சாளர் பலர், கவிஞர் பலர், நாடகக்கலைஞர் பலர் இக்கலைக்கழகத்தால் தோற்றுவிக்கப்பெற்றவர்களே. பயிலும் இள உள்ளங்களில் தமிழ் உணர்வை ஏற்படுத்தும் வண்ணம், திருக்குறள், சிலப்திகாரம், கம்ப இராமாயணம், திருவாசகம், கொடைவிளக்கு போன்ற தமிழ் இலக்கியப் போட்டிகள், நடுவர்களின் முன்னிலையில் நடத்தப் பெறுகின்றன. பள்ளி ஆண்டு விழாக்

களில் கலைநிகழ்ச்சிகளில் சிறப்புறும் மாணவ மாணவி களுக்கு பரிசுகள் வழங்கி அவர்தம் உள்ளங்களில் நாடகக் கலைக்கு வித்திடப்பெறுகிறது. அதோடுமட்டுமல்லாமல் விளையாட்டுப்போட்டிகளும் நடத்தி உடல்நலம் பேணப் படுகிறது. இவற்றிற்கும் மேலாக தமிழ்ப் பாடத்தில் முதன்மை பெறும் மாணவ மாணவிகளுக்கு, பொன்னால், வெள்ளியால் பதக்கங்கள் வழங்கப்பெறுகின்றன.

இப்பள்ளியின்பால் பயின்ற மாணவர்தம் திறம் எடுத்துக் கூறின் விரியும். பல ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டில் காகிதப் பற்றுக்குறை ஏற்பட்டபோது இப்பள்ளி மாணவ மாணவிகளால் காகித உற்பத்தி செய்யப்பெற் றது குறிப்பிடத்தக்கதாம். இப்பள்ளியில் பணியாற்றும்— பணியாற்றிய ஆசிரியர்கள் கடமை உணர்வோடு பணி புரிந்தவர்கள்ஆவார்கள். இப்பள்ளியில் தமிழுலகம் போற்றி வணங்கக்கூடிய திரு. ஆ. முத்துசிவனார் தலைமையாசிரியராக இருந்து பணிபுரிந்திருக்கிறார்கள்.

இப்பள்ளியின் சிறப்பிற்கோர் எடுத்துக்காட்டு இவ்வாண்டு மாநில அரசு, எட்டாவது வகுப்புக் கல்வி யில் சிறந்த மாணவராக இப்பள்ளியில் பயின்ற M. K. அடைக்கன் என்ற மாணவரைத் தேர்ந்தெடுத்திருப்பது இப்பள்ளியின் கல்வித்திறத்தை பறை சாற்றுகிறது.

தொடக்கத்தில் 14 மாணவியர், 6 மாணவர், 4 வகுப்புகள், இரு ஆசிரியர்களோடு தொடங்கிய இப்பள்ளி இன்று 11 ஆசிரியர், 182 மாணவர், 127 மாணவியர் ஆகியவர்களோடு எட்டாம் வகுப்பு வரை சீரும் சிறப்பு மாக நடைபெற்று வருகிறது. பள்ளி தோன்றிய இவ்வாண் டோடு 39 ஆண்டு நிறைவுற்று நாற்பதாம் ஆண்டு துவங்குகிறது. இத்துணை ஆண்டுகளாகப் பள்ளி தோன்ற வும் வளரவும் பெருந்துணையாயிருந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வித்தியாசாலைக் கட்டிடம் எழுப்ப

கடமையாற்றிய

கருணை வள்ளல்கள்.



திரு யெ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் அவர்கள்

திரு பெரி. வீர. ராம. பெரியணன் செட்டியார் அவர்கள்,

திரு பெ. ப. வி. அரு. இராமசாமி செட்டியார் அவர்கள்

## பள்ளி நிர்வாகக் குழு

தலைவர்: திரு. பெ.ப.வி.அரு. முத்தப்பன் அவர்கள்
செயலாளர்: திரு. மெ.சிதம்பரஞ் செட்டியார் அவர்கள்
துணைச் செயலாளர்: திரு. மெ.பெரி விர. பழனியப்ப செட்டியார் அவர்கள்

## உறுப்பினர்கள்

திரு. பெரி.விர.ராம. பெரியண்ணன் செட்டியார்
திரு. மு.வினைதீர்த்தான் செட்டியார்
திரு. பெரி.சித. இராமசாமி செட்டியார்
திரு. மெ.பெரி.விர. விர. சோலையப்ப செட்டியார்

★


தரமான மளிகைச் சாமான்களும்,
ஸ்டேஷனரி சாமான்களும் மொத்தமாகவும்,
சில்லரையாகவும் நியாய விலையில்
கிடைக்குமிடம்

**ஸ்ரீ மகாலிங்கம் & கோ.,**
மளிகை,
புதுவயல்.

வளம் பெருக்க நட்சத்திரமார்க் கலப்பு
உரங்களுக்கும், பூச்சி மருந்துகளுக்கும்
இன்றே எங்களிடம் விஜயம்
செய்யுங்கள்.

ஏஜண்ட்:
**ஸ்ரீ மகாலிங்கம் & கோ.**

| விழாக்கள். | பொருளுதவுகின்றவர்கள். |
|---|---|
| தமிழ்ப் புத்தாண்டுப் பிறப்பு ... | வித்தியாசாலை. |
| பிள்ளையார் சதுர்த்தி ... | வித்தியாசாலை. திருவாளர்கள் மெ. சிதம்பரம்செட்டியார் அவர்கள். ராம. வீரப்பசெட்டியார் அவர்கள். |
| கிலுக்கி எடுத்தல் ... | திரு. எ. பெரி. வீர. பழநியப்ப செட்டியார் அவர்கள். |
| காந்தி ஜெயந்தி விழா, கலைமகள் விழா ... | திருவாளர்கள்:<br>வீர. பழ. வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள்.<br>சோம, இராமநாதன் செட்டியார் அவர்கள்,<br>யெ பெரி. வீர. சோலையப்ப செட்டியார் அவர்கள்.<br>பெரி. சித. இராமசாமி செட்டியார் அவர்கள்.<br>பெரி. அரு. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள்.<br>சா. சித. திருநாவுக்கரசு அவர்கள். |
| விஜயதசமி ... | திருவாளர்கள்:<br>கதி. வீர. கதிரேசன் அவர்கள்.<br>சே. பழநியப்ப செட்டியார் அவர்கள்.<br>கா. அருணாசலம் செட்டியார் அவர்கள். |
| பொங்கற்புதுநாள் ... | வித்தியாசாலை. |

## ஆண்டு விழாக்களில்

## தலைமை தாங்கியவர்கள்.

★

1-வது ஆண்டு திரு. ஏ. வி. சேஷகிரி சாஸ்திரி அவர்கள். கண்டனூர்.
1 ,, தெ.அரு.சி.த.இராமநாதன் செட்டியார் அவர்கள், கண்டனூர்.
3 ,, சொ. முருகப்பா அவர்கள், குமரன் ஆசிரியர், அமராவதிபுதூர்.
4 ,, பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள், காரைக்குடி.
5 ,, சா. லெ. செட்டியப்ப செட்டியார் அவர்கள், காரைக்குடி,
6 ,, டி. கோமதி நாயகம் பிள்ளை அவர்கள். B.A., B.L. தேவகோட்டை
7 ,, பி.வி. சங்கரகாமேஸ்வர ஐயர் அவர்கள் B.A. புதுக்கோட்டை,
8 ,, பொ. திரிகூடசுந்தரம் பிள்ளை அவர்கள் M.A., B.L திருநெல்வேலி,
9 ,, ஆர். பி. சேதுப் பிள்ளை அவர்கள், B.A., B.L
10 ,, டி.எம். நாராயணசாமிபிள்ளை அவர்கள் M.A., B.L திருச்சி.
11 ,, எஸ், சோமசுந்தர பாரதி அவர்கள், M.A , B.L மதுரை.
12 ,, த. வே. உமாமகேஸ்வர பிள்ளை அவர்கள். B.A., B.L. தஞ்சை.
13 ,, தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், தூத்துக்குடி.
14 ,, டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், B A , B.L. திருநெல்வேலி,

15 வது ஆண்டு வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்,
"நவசக்தி" ஆசிரியர் சென்னை,
16 ,, எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்.
B.A., L.T., D.E.O. கூடலூர்.
17 ,, கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டிய
னார் அவர்கள், தூத்துக்குடி.
18 ,, கா சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்,
M.A., M.L. திருநெல்வேலி.
19 ,, அ. சீனிவாசராகவன் அவர்கள், M.A.
திருநெல்வேலி
20 ,, சுவாமி சித்பவானந்தா அவர்கள்
திருப்பராய்த்துறை
21 ,, கு. மதுரை முதலியார் அவர்கள்,
ராயவரம்.
22 ,, ம பாலசுப்பிரமணியமுதலியார் அவர்கள்
B.A., B.L. சென்னை.
23 ,, D. சாம்பசிவம் பிள்ளை அவர்கள்,
B.A., B L, D.E.O. இராமநாதபுரம்
ஜில்லா.
24 ,, தேசபக்தர் சா. கணேசன் அவர்கள்,
காரைக்குடி.
25 ,, டாக்டர் கே.எஸ்.கிருஷ்ணன் அவர்கள்
(வெள்ளிவிழா) Kt., D.Sc., F.R.S.
26 ,, தமிழ்க்கடல். ராயசொக்கலிங்கம்
அவர்கள், காரைக்குடி.
27 ,, பாலகவி வயிநாகரம் வே. இராமநாதன்
செட்டியார் அவர்கள், தேவகோட்டை.
28 ,, கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்,
திருச்சி.
29 ,, குன்றக்குடி திருப்பெருந்தறை திரு.
தெய்வசிகாமணி அருணாசல தேசிக
சுவாமிகள்.
30 ,, புர. சுவாமிநாதன் அவர்கள் M.A.,L.T.
அண்ணாமலைநகர்.

31 (வெள்ளிவிழா) சேவு. அ. அண்ணமலை செட்டியார், அவர்கள் B. Com. தேவகோட்டை.

32 ,, க.வி.அழ.மு.இராமநாதன் செட்டியார் அவர்கள், கோட்டையூர்.

33 ,, தி. சு. பழ. ப.சித. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள், தேவகோட்டை

34 ,, P. A. சுப்பிரமணியம் அவர்கள், புதுக்கோட்டை.

சங்கத்தின் 35வது ஆண்டு, வித்தியா சாலையின் 25வது ஆண்டு (வெள்ளிவிழா)

முதல் நாள் திரு. ந. சுப்புரெட்டியார், M.A., B.Sc., L.T., அவர்கள்.

இரண்டாம் நாள் திரு. கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கள், மதுரை.

36 ,, அரு. அருணசலம் செட்டியார் அவர்கள் காரைக்குடி.

37 ,, பி. துரைக்கண்ணு முதலியார், M.A., L.T. அவர்கள்.

38 ,, C. சுப்பிரமணியம் B.A., B.T. அவர்கள் புதுக்கோட்டை.

39 ,, ஆர். சீனிவாசராகவன் B.A., B.A., B.T. அவர்கள்

40 ,, R. நாட்டராயன் B.A., L.T. (முதல்நாள்) திரு V.S. சுப்பையா I.A.S. (தமிழக அரசு விவசாயத் துறைத் துணைச் செயலாளர்)

41 ,, கோ. வன்மீகநாதன் அவர்கள், திருச்சி.

42 ,, பழ. தெய்பரம் செட்டியார் அவர்கள், மேலைச்சிவபுரி.

43 ,, எம். இராமச்சந்திரன் B.A., B.T. காரைக்குடி.

44 ,, W. மாணிக்கம் B.A., B.T. காரைக்குடி.

45 ,, வித்துவான் பூ. அமிர்தலிங்கம் B.A. காரைக்குடி.

46 ,, சௌ. தோத்தாத்திரி M.A. B.Sc. B.T பள்ளத்தூர்.

47 ,, கவிஞர் அரு. சோமசுந்தரம் B.A. B.T, காரைக்குடி

48 ,, வயி. ராம. கி. இராமசாமி செட்டியார் B.A. அரியக்குடி

49 ,, சித. சிதம்பரம் M.L.A. காரைக்குடி

## ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பெறும் போட்டிகளும் போட்டிகளுக்குப் பொருளுதவி செய்வோர் பெயர்களும்.

1 தமிழ்ப்பாடத் தேர்வுப் பரிசு – பொற் பதக்கம் – மேல் வகுப்பு – டாக்டர் ராஜாசர் அண்ணாமலை செட்டியார்.
தமிழ்ப்பாடத் தேர்வுப் பரிசு – வெள்ளிப் பதக்கம் – கீழ் வகுப்பு – சுப. பழனியப்பன் நினைவாக திரு. சோம. சுப்பிரமணியன் செட்டியார் அவர்கள்-

2 வகுப்புத் தேர்ச்சிப் பரிசு – திரு. பெ. பெரி. வீர. வீரப்ப செட்டியார் நினைவாக திரு. வீர. வீர. சோலையப்பன் B.Sc. அவர்கள்

3 திருவாசகப் போட்டி – திரு. டாக்டர் வீர. இராமனுதன் M.Sc. அவர்கள்

4 திருக்குறள் போட்டி- தேவகோட்டை திரு. சேவு அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள்.

5 கம்பஇராமாயணப் போட்டி- கோட்டையூர் திரு. க.வி.அழ.மு. இராமநாதன் செட்டியார் அவர்கள்.

6 சிலப்பதிகாரப் போட்டி- திரு. பி ச. லெ. இலக்குமணன் செட்டியார் நினைவாக திரு. சித. இராம. சிதம்பரம் B.E அவர்கள்.

7 ஆங்கிலப் பாடப் போட்டி திரு.வி. பழனியப்பன் M.A

8 கொடை விளக்குப் பரிசு - திரு. டாக்டர் அழகப்பச் செட்டியார் நினைவாக திரு. மு. பெரி. சின்னக்கருப்பன் அவர்கள்.

9 விளையாட்டுப் போட்டிகள் - திரு. பழ. ஏகப்பன், அவர்கள், B. Com., இராம. இராமனுதன் அவர்கள்.

10. குழந்தைகள் நிகழ்ச்சிச் சிறப்புப் பரிசு - திரு. ப. வடு. பெரி. வீர. வீரப்ப செட்டியார் அவர்கள் நினைவாக வெள்ளிப் பதக்கம் - திரு V. இராமசாமி அவர்கள். திரு. பெ. ப. வி. சித. அவர்கள் நினைவாக திரு. சித. நல்லபெருமாள்.

11 ஆண்டுதோறும் சி. வீர. சி. அறப்பணியின் சார்பாக திரு. V. வீரப்பன் அவர்கள் பொருளுதவியால் மாணவர்களுக்கு இலவசமாக தமிழ்ப்பாடப் புத்தகங்கள் வழங்கப்பெறும்.

## விழாக்களில் பங்கேற்ற முக்கியப் பெரியார்கள்.

1. சுப்பிரமணிய பாரதியார், தமிழாசிரியர்.
2. சேட். மெ. மெய்யப்பச் செட்டியார், அவர்கள், காரைக்குடி.
3. ஆ.ந. ஆ. சொக்கலிங்க அய்யா அவர்கள், நடராஜபுரம்.
4. பெரியார் ஈ. வே. ரா. அவர்கள்.
5. கருமுத்து சிவலிங்கம் செட்டியார் அவர்கள்.
6. ப. மாசிலாமணி தேசிகர் அவர்கள்.
7. ப ஜீவானந்தம் அவர்கள்.
8 ராமசாமி நாயுடு அவர்கள்.
9. எல். நடேச முதலியார் அவர்கள்.
10. K. சுப்பிரமணியம் அவர்கள், ச. வ. தலைமை ஆசிரியர்

11. பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி
12. A.M.S. ராகவன் அவர்கள், B.A., L.T., பள்ளத்தூர்
13. S. சர்மா அவர்கள் ஆசிரியர் செட்டிநாடு காரைக்குடி.
14 VR. ராமனுதன் M Sc,
15 மறை திருநாவுக்கரசு அவர்கள் சென்னை
16 வி. சாரநாதன் M. A., முதல்வர் தேசியக்கல்லூரி திருச்சி
17 ஆ. முத்துசிவன் அவர்கள் B. A. Hons. ச. வி. தலைமை ஆசிரியர்
18 அ. மு. சரவண முதலியார் அவர்கள் லால்குடி
19 அ ச. ஞானசம்பந்தம் அவர்கள் ,,
20 மு. மரகதவல்லி அம்மையார் அவர்கள் அமராவதிபுதூர்
21 C. V. C. T. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள் கானுடுகாத்தான்
22 மு. வரதராசன் அவர்கள் B. O. L. பச்சையப்பன் கல்லூரி சென்னை
23 A. சிதம்பரனுதன்செட்டியார் அவர்கள் M. A. அண்ணுமலைப் பல்கலைக்கழகம்
24 B தாசனுச்சாரியார் அவர்கள் M. A. காசி பல்கலைக்கழகம்
25 D. R. அருணுசலம் அவர்கள் தேவகோட்டை
26 வித்வான் விசு. திருநாவுக்கரசு அவர்கள் கோனுபட்டு.
27 K. S. கிருஷ்ணன் அவர்கள் காசி பல்கலைக்கழகம்
28 ஐயன் பெருமாள் கோனர் தமிழாசிரியர் திருச்சி
29 வித்வான் வ. சுப. மணிக்கம் அவர்கள்
30 முத்துவெங்கடாசலமய்யர் அவர்கள் தமிழ்ப்பண்டிதர் பள்ளத்தூர்
31 ஜி. சுப்பிரமணியம் அவர்கள் M. A, B. L,
32 வித்வான் மெ. திருநாவுக்கரசு செட்டியார் M A.,

33 நாமக்கல் கவிஞர் வெ. ராமலிங்கம் பிள்ளை
34 S. ராமனுத ன்அவர்கள் விளம்பர இலாகா
அமைச்சர் சென்னை
35 சொ. முருகப்பா அவர்கள்
36 மு. அண்ணுமலை அவர்கள் கொத்தமங்கலம்
37 வே. தருமராசன் அவர்கள் புதுக்கோட்டை
38 தமிழண்ணல் அவர்கள் M. A. மதுரை
39 நெல்லை கரு. சிங்காரம்
40 சுப. அண்ணுமலை அவர்கள் M. A., மதுரை
41 மெ சுந்தரம் அவர்கள் M A Litt B O L
42 அரு இராமனுதன் ''காதல் ஆசிரியர்''
43 டாக்டர் எ. ஜோகராவ் MSc DSc F R I E M A
C E C R I
44 ஜெனுய் C E C R I செயலாளர் அவர்கள்
காரைக்குடி
45 T செங்கல்வராயன் அவர்கள் B A B L
46 பொன் குமாரசாமி அடிகளார் அவர்கள் காஞ்சி
47 அந்தோனிதுரை அவர்கள் B E
அழகப்பா பொறியியல் கல்லூரி காரைக்குடி
48 மெ சிதம்பரம் அவர்கள் ஆசிரியர் 'தமிழ் முரசு'
சிங்கப்பூர்
49 சொக்கு சுப்பிரமணியம் M A அவர்கள்
50 கு மாணிக்கம் பிள்ளை அவர்கள்
தமிழாசிரியர் பள்ளத்தூர்
51 ம. பொ. சிவஞானம் அவர்கள் சென்னை
52 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்கள்
53 டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள்
54 AN சிவராமன் அவர்கள் 'தினமணி ஆசிரியர்'
சென்னை

# ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலை

## பழைய மாணவர் ஆதரவாளர் கழகம்.

நாட்டுக்கு நன்மைசெயும் நாமகளின் சங்கமிது
ஏட்டுப் படிப்போடு நுண்கலைகள்-கூட்டுதற்கு
நன்மனத்தார் நாட்டியின்று பொன்விழாக் காணுகையில்
புன்னகையால் பூரித்தோம் நாம்.

அறிவும் பரிவும் கொண்ட பெரியோர்களே!
அன்பும் பண்பும் கொண்ட நண்பர்களே!!

நமது ஸ்ரீ சரசுவதி சங்கத்தின் பொன்விழாவில் மகிழ்ந்து, நெகிழ்ந்து, நிற்கும் உங்களிடம் பழைய மாணவர் ஆதரவாளர் கழகத்தைப் பற்றி சிறிது எடுத்துச் சொல்வது எங்கள் கடமை! உரிமை

எங்கள் கழகம் துன்முகி ஆண்டு ஆவணித்திங்கள் 4ஆம் நாள் (19-8-56) ஞாயிற்றுக்கிழமை காலை 10மணி அளவில் திரு. சித. நல்லபெருமாள் அவர்களின் சீரிய முயற்சியால் திரு. வி. முருகப்பன் B.A. அவர்களைத் தலைவராகவும், திரு. வி. பழனியப்பா M.A; B.T, திரு. வீர.கதிரேசன் ஆகிய இருவரையும் செயலாளர்களாகவும் கொண்டு ஏழு உறுப்பினர்களோடு தொடங்கப் பெற்றது. அவ்வாண்டு நடைபெற்ற பள்ளி வெள்ளி விழாவில் பள்ளி இருப்பு நிதியாக ரூ 501/-ம் பள்ளியின் நடப்புச் செலவுக்காக ரூ 251/=ம் ஆக ரூ 752/=யை பள்ளிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளோம் என்பதைப் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறோம்.

எங்கள் கழகத்துக்கு இன்று பதினாறு வயது நடக்கிறது. ஒவ்வொரு ஆண்டு விழாவின் தொடக்கத்தில் காலை நிகழ்ச்சியாகக் கவியரங்கம் அல்லது பட்டிமன்றம்

மிகச்சிறப்பாக நடத்தி வருகின்றேம், ஆண்டுவிழா முடிவில் (இரவில்) திரு நா.வயி. ரெங்கனுதன் அவர்களின் பொருளுதவியால் மாறுவேடப் போட்டி, கழக உறுப்பினர்களுக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும் நடத்தி வருகின்றேம். எல்லோரும் வெளியூர்களில் இருப்பதால் ஒவ்வொரு ஆண்டும் நாடகம் நடத்த இயலவில்லை. ஆனல் சிற்சில சமயங்களில் மிகச் சிறந்த நாடகங்களை எங்களின் நாடகக் குழுவினர் அளித்து வருவது எல்லோருக்கும் நன்கு தெரியும். நாடகக் குழுவினர் தங்களுக்கென்று ஒப்பனைப் பொருட்களும் உயர்ந்த சீன் செட்டிங்குகளும் சொந்தமாக செய்துவைத்திருப்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

எங்கள் கழகத்தினர்களில் எண்ணற்ற பட்டதாரிகளும், புலவர்களும் கவிஞர்களும், நாடக ஆசிரியர்களும், நாடெங்கும் நிறைந்திருக்கின்றனர். கல்வி, மருத்துவம், வணிகம், அரசியல்பணி, நீதித்துறை, பொறியியல் அனைத்திலும் உயர்ந்த பதவியேற்று ஒப்பாரும் மிக்காரும் இல்லை என்று சொல்லும் வண்ணம் பணிபுரிந்து வருகின்றனர். "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோமிந்த நாட்டிலே" என்ற பாரதியின் கனவை நினைவாக்க எங்கள் மாணவியரும் நல்ல முன்னேற்றம் கண்டிருக்கின்றனர். வழக்கறிஞராகக் கூட எங்கள் மாணவியர் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறுர்கள் என்பது உயர்வு நவிற்சியன்று.

## நோக்கங்கள்

1 பள்ளியின் நிதிநிலையைப் பெருக்குவது
2 பள்ளியின் நன்மைக்காகவும் அதையீன்ற சங்கத்தின் பெருமைக்காகவும் பாடுபடுவது
3 இக்கழகத்தினரை நல்லபேச்சாளராகவும் எழுத்தாளராகவும், கவிஞராகவும் ஆக்குவதற்கு பயிற்சிக்களமாக நமது கழகத்தை வளர்த்துக் கொள்வது

## நிதிநிலை

பழைய மாணவர்கள் பொருளீட்டும் காலத்தில் ஸ்ரீ சரசுவதி சங்க உறுப்பினராகி விடுவதால் சங்கத்திற்கு தங்கள் சந்தாத் தொகையினைச் செலுத்திவிடுகிறார்கள். எனவே நம்கழகத்திற்கு அவர்களிடம் வாங்க இயலவில்லை எல்லோரும் சங்க உறுப்பினர்களாகி விடுகிறார்களா? என்று கேட்காதீர்கள். கொடுக்கும் உள்ளம் ஒரு சில மனிதர்களுக்கே இயற்கையாக இறைவன் அமைத்திருக்கிறான்போலும். பள்ளியிலே படித்து முடித்து வெளியேறும் மாணவரிடம் கட்டாயப்படுத்தியோ அல்லது சான்றிதழைக் கொடுக்கமாட்டோம் என்று சொல்லியோ பணம் வசூலிக்கும் முறை அநாகரிகமானதென்று நாம் அதைச் செய்யவில்லை. எனவே இக் கழகத்திற்கு நிரந்தர வருவாய்க்கு வழியில்லை. ஆனாலும் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பான முறையில் விழாவை அந்தச் சமயத்தில் காண்பவர்களின் பொருளுதவியைக் கொண்டு நடத்தி வருகின்றோம். சங்கத்தாரும் பல உதவிகளைச் செய்து வருகிறார்கள். பொலிவும் வலிவுமிக்க நமது கழகம் ஏதேனும் ஒரு சிறந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டால் விழா நடத்துபவர்களுக்கு எளிமையாய் இருக்குமல்லவா? **"தட்டப்படாத காரணத்தால் திறக்கப்படாத கதவுகள் பல"** என்பதை நினைவு கூர்ந்து தான் உங்கள் நெஞ்சக் கதவுகளைத் தட்டி வைத்தோம்.

## நன்றி

மங்காப் புகழ்கொண்ட சங்கப் பெரியார்களுக்கும் அறிவுக்கண் திறந்த ஆசிரிய மேலோர்களுக்கும்! எமது விழாக்களில் பங்குகொண்டு சிறப்பித்தோர்க்கும்! பொன்விழா சிறக்க அள்ளிப் பொருளீந்த பழைய மாணவ–மாணவியர்க்கும் அன்பு கலந்த நன்றி.

| | |
|---|---|
| தலைவர்: | செயலர்கள்: |
| திரு. நா. வயி. ரெங்கநாதன் | பழ. சம்பந்தம். |
| | புலவர் இராம. வீரப்பன். |

# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை

கரஸ்பாண்டெண்டுகளாகப்
பணியாற்றியவர்கள்.

——※——

திரு. மெ. சிதம்பரம் செட்டியார் அவர்கள்
,, சே. பழனியப்ப ,, ,,
,, எ.பெரி.வீர.சோலையப்பன் ,,
,, வீர.பழ.வினைதீர்த்தான் ,,

துணைக்கரஸ்பாண்டெண்டுகளாகப்
பணியாற்றியவர்கள்.

—★—

திரு சித.அரு.வீரப்பசெட்டியார் அவர்கள்
,, சுப. நாராயணன் ,, ,,
,, பெரி.சித.இராமசாமி ,, ,,
,, யெ.பெரி.வீர.வீர.சோலையப்பன் ,,
,, பெ.ப.வி.சித.வினைதீர்த்தான் ,,
,, யெ.பெரி.வீர.பழ.ஏகப்பன் ,,

தற்காலகரஸ்பாண்டெண்ட்

திரு. மெ. சிதம்பரம் செட்டியார் அவர்கள்

தற்கால துணைக்கரஸ்பாண்டெண்ட்

திரு. யெ. பெரி.வீர. பழனியப்ப செட்டியார்
அவர்கள்

## பணிபுரியும் ஆசிரியர்கள்

—*—

1 திரு V. சாம்பசிவன், தலைமையாசிரியர்

2 திருமதி M. தெய்வானை, உதவி ஆசிரியை

3 திரு P. சண்முகசுந்தரம் அவர்கள்

4 திரு S. கிருஷ்ணமூர்த்தி ,,

5 திரு S. ஸ்ரீநிவாசன் ,,

6 திரு T. கிருஷ்ணய்யங்கார் ,,

7 திரு RM. பழனியப்பன் ,,

8 திருமதி K. முனியம்மாள் ,,

9 திரு S. கோவிந்தன் ,,


10 குமாரி KR. சத்தியபாமா
பகுதிநேர கைத்தொழில் ஆசிரியை.

11 திரு ஸ்ரீ ராமஜயங்கார் அவர்கள் கணக்கர்

கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை

ஆண் 182, பெண் 127, மொத்தம் 309.

எல்லா வகுப்புகளும் அரசினர் அங்கீகாரம் பெற்றவை.



ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலைக் கட்டிடத் திறப்பு விழாவின்
போது பங்கு கொண்டோர்.

# சரஸ்வதி சங்கம், புதுவயல்.

A. K. செட்டியார் ஆசிரியர் 'குமரி மலர்' சென்னை.

புதுவயல் சரஸ்வதி சங்கம் தோன்றி ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன என்பதை என்னால் சுலபமாக நம்பமுடியவில்லை.

பத்து அல்லது பதினொரு வயதுள்ள சுமார் ஐந்நூறு பள்ளிச்சிறுவர்கள் போதிய கல்வி அறிவோ அல்லது வசதியோ இல்லாமல், உற்சாகம் ஒன்றையே மூலதனமாகக் கொண்டு தொடங்கியது இச்சங்கம்.

அதிர்ஷ்ட வசமாக, சங்கம் தொடங்கிய சில ஆண்டுகளுக்குப் பின் கல்வித் தொண்டிலும் சங்கத்தினர் ஆர்வம் காட்டி சரஸ்வதி வித்தியாசாலையைத் தொடங்கினர்,

இன்றையப்புதுவயலின் முன்னேற்றத்திற்கு இவ்வித்தியாசாலைதான் ஆணிவேர் என்று கூறலாம்.

சங்கத்தினர் வித்தியாசாலையைத் தொடங்காமலிருந்திருந்தால் அச்சமயத்தில்தோன்றிய எண்ணற்ற சங்கங்களைப்போல இதுவும் மறைந்திருக்கும்

இச்சங்கம் தோன்றுவதற்கு முன் பத்தாண்டு காலந்தான் (1912—1922) செட்டிமார் நாட்டின் மறுமலர்ச்சி காலம் என்று கூறலாம்.

1912 ஆம் ஆண்டில் தேவகோட்டையில் "வைசிய மித்திரன்" என்றவாரப்பத்திரிகையை ஸ்ரீ ST. ராமனுதன் செட்டியார்தொடங்கினர்.

இரண்டாவது ஆறுமுகநாவலர் என்று புகழ்பெற்ற காரைக்குடி. சொக்கலிங்க ஐயா அவர்கள் தமிழும் சித்தாந்தமும் பாடம் சொல்ல ஆரம்பித்தார்கள்.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள் கலாசாலைகளாக மாறின. ஒவ்வொரு கலாசாலையிலும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் இருந்தார் நாளடைவில் இக்கலாசாலைகள் நவீன உயர்நிலைப் பள்ளிகளாக மாறின.

பண்டிதமணி கதிரேசச் செட்டியார் போன்ற பெரும் புலவர்கள் தோன்றினர்கள்.

மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையர், மறைமலையடிகள், மோ.வே. கோவிந்தராஜய்யங்கார், திரு.வி.க.போன்ற பெரும் புலவர்கள் சொன்மாரி பொழிந்தனர்.

1913ஆம் ஆண்டில் தென்னுப்பிரிக்காவில் காந்தியடிகள் தொடங்கிய அறப்போருக்கு இந்தியாவில் நாடெங்கும் நிதி சேர்த்தனர். ஆத்தங்குடி, சொககலிங்கம்புதூர் ஆகிய ஊர்களிலும் உள்ள நூற்றுக்கு மேற்பட்ட ஆச்சிமார்கள் உள்பட செட்டிமார் நாட்டில் பலர் நிதிக்கு உதவினர்.

கராச்சியில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டுக்கு, ராமனுதபுரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு ஜில்லாக்களுக்கும் ஸ்ரீ மு. சித. பெத்தாச்சி செட்டியார் ஏகபிரதிநிதியாகச் சென்று வந்தார்.

தேசபக்தர் ஸ்ரீ சுப்பிரமணிய சிவம் காரைக்குடியில் சில காலம் தங்கியிருந்தார். கவியரசர் பாரதியார், வ உ, சி. ராஜாஜி போன்ற பெருந்தலைவர்கள் விஜயம் செய்தனர்.

செட்டியார்களின் வட்டித்தொழில் பர்மா, மலேயா சிலோன், இந்தோசீனு, சுமத்திரா முதலிய நாடுகளில் செழிப்பாக வளர்ந்தது பர்மாவில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கம் தோன்றியது.

தென் ஆட்பிரிக்காவில் நெட்டாலில் 1913 ஆம் ஆண்டில் (வ.உ.சி.இந்தியாவில் சிறையிலிருந்ததால்) அவர் குடும்பத்துக்கு நிதி சேர்த்தனுப்பினர். பலரும் ஒரு ஷில்லிங், இரண்டு ஷில்லிங் கொடுத்தனர். நாட்டுக்கோட்டை சுப்பிரமணிய செட்டியார் கொடுத்தது பத்து ஷில்லிங்.

தொழில் துறையிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. செட்டியார்கள் பங்கு சேர்ந்து லிமிடெட் கம்பெனிகள் தொடங்கினர். பஞ்சாலைகளும் பஸ் போக்குவரத்துகளும், மின்சார நிலையங்களும் தோன்றின

கோயில் திருப்பணிகளில் செட்டியார்கள் முழு மூச்சுடன் ஈடுபட்டனர்.

அந்நாளில் இருந்த சங்கங்களில் சில:

| | |
|---|---|
| தேவகோட்டை: | வைசிய சிவானந்த சபை |
| | சிவாகம சித்தாந்த பரிபாலன சபை |
| | தர்ம வித்யா ஞானோதய சங்கம் |
| காரைக்குடி: | இந்துமதாபிமான சங்கம் |
| | ரீடிங் ரூம் அன் யூனியன் கிளப் |
| | தனவைசிய ஊழியர் சங்கம் |
| | காரைச்சிவனடியார் திருக்கூட்டம் |
| கடியாபட்டி: | கருணாநிதி சாது சங்க சபை |
| | சைவ சமய நவர்த்தினி சபை |
| புதுவயல்: | ஞானப்பிரகாச சபை |
| | லலிதா விலாஸ் ரீடிங் ரூம் & பாட்மிட்டன் கிளப் |
| பலவான் குடி | மணிவாசக மன்றம் |
| | ஜி. சுப்பிரமணியஐயர் பாட்மிட்டன் கிளப் |
| மேலைச்சிவபுரி; | சன்மார்க்கசபை |
| கண்டவராயன்பட்டி | கற்பக விநாயக ஞானபோதசபை |
| வலையப்பட்டி: | ஞான சம்பந்த சபை |
| கோநகர். | ஞான சம்பந்த நற்சபை |
| இராயவரம்; | சாரதா விலாஸ சபை |
| சிராவயல், | வித்யா விநோத சபை |
| அமராவதிபுதூர் | ஜீவகாருண்ணிய சபை |
| கண்டனூர் | மீனாட்சி சுந்தரேசுவராள் ரீடிங் ரூம் |
| கோட்டையூர் | லட்சுமி விலாஸ் ரீடிங் ரூம் |
| நாட்டரசன்கோட்டை | வித்யா பரிபாலன சங்கம் |

## புதுவயல் ஞானப்பிரகாச சபை.

ஸ்ரீ உமையாம்பாள் ஸமேத வீரசேகரப் பெருமான் திருவருளானே, சிறுற நடைபெற்று வரும் இச்சபையின் 2-ம் ஷூ 3ம் மீ க் கூட்டம் நாளது நள ஷூ (15—9—1916) சுக்கிரவாரம் பிற்பகல் 2½ மணிக்குக் கூடிற்று.

அப்போது ஷெ ஸபா காரியதரிசியவர்களாகிய நடராஜபுரம் ஸ்ரீமான் சோமசுந்தரச்செட்டியாரவர்களால் வரவேற்புக் கொண்டாடப்பெற்று, அனைவர்களின் வேண்டுகோட்கிணங்கி நாமக்கல் வித்வான் பிர்மஸ்ரீ மோ. வே. கோவிந்தராஜய்யங்காரவர்கள் அக்கிராஸனத்தமரவும், கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றுப் பிறகு அக்கிராசனாதிபதியவர்கள் முகவுரை கூறியவுடன் மேல்வருமாறு பல அரிய உபந்யாஸங்கள் நடைபெற்றன.

### உபந்யாச விபரம்.

பிர்ம ஸ்ரீ கேதாரேசுவரய்யரவர்கள் ‘கல்வி’
யாழ்ப்பானம் பிள்ளையவர்கள் ‘தவம்’
ஞானப்பிரகாச கலாசாலை மாணவன்
பெ. க.வீர. நாராயணன் —தந்தை ‘தாய்ப் பேண்’
பிர்மஸ்ரீ-மீனாட்சி சுந்தரமய்யரவர்கள்
—‘இந்து மதமும் அதனுயற்சியும்’
காஞ்சி ஸ்ரீ சுப்பராய முதலியாரவர்கள்
—‘ ஆசிரியர் வழிபாடு’
ஞா.க. மாணவன் S. கிருஷ்ணன்
—‘உயிர்கட்கிதஞ் செய்தல்’

**போஸ்டு மூலமாக வந்த ஆடு கோழி விண்ணப்பமும், ஸ்ரீ உய்யவந்தம்மையனுப்பிய உத்தரவும் வாசிக்கப் பெற்றது.**

**(இவ் விண்ணப்பமும் உத்தரவும் மித்திரனில் பிரசுரமானால் நலந்தரும். பத்திராதிபர்.)**

ஞா.க. மாணவன் N. பழனியப்பன் ‘அன்பு’
திருவாரூர் இலக்கண விளக்க நூலாசிரியர் பரம்பரை ஸ்ரீமத் துரைசாமி தேசிகரவர்கள் - ‘விக்ரஹாராதனம்’

**இம் முறையே உபந்யாஸங்கள் செய்யப் பெற்றவுடனேஷெ துரைசாமி தேசிகரவர்களால் புதுவயலைச் சிறப்பித்துப் பாடப் பெற்ற கவிகள்.**

**எண் சீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்**

கங்கைமதி முடியீச ரருளினுலே
கலைமகளுந் திருமகளுங் கலந்துமேவு
நங்கையுமை யாளடியார் நாடும் வைச்ய
நற்குலத்தோர் நயந்துறையுந் நகர்யாதென்னி
லங்கையினு லாதுலரை யாதரிப்பே
மனையுமென வழைப்பது போலவசையுங் கொடி
கடங்கையுறு மாடநிறைத் தாவில் விதித்
தவநிறையுந் தர்ம புதுவயலா நன்றே.

எனவுலகி னியல்புணர் வோரிசையைக் கூறு
மிந்நகரின் பெயர்ப்பொருளை யிதயத் தெண
ணினன வினிலுங் கனவினிலு ஞானப் பைங்கூழ்
நல்கோங்கி நற்பயனை நல்குமாறே
திவகரனை யேய்ப்ப மதி தெளிந்தோர் கூடுக
தேசுறுநற் கலாசாலைத் திரமா நண்ணி
யனக்கர்களா யகமகிழ்ந்தாங் கமர்ந்தேர் வாழ
வமைவிக்கு மருஞ்செயல் கொண்டறிதற் பாற்றே.

பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் இவ்வுபன்யாஸம் முதலியவற்றின் அரும் பொருள்களையெல்லாம் பல மேற்கோள்களால் நன்கு விளக்கி முடிப்புரை பொழிந்து, ஸ்ரீமான் காரியதரசியவர்கள் முற்கூறிய ஸ்ரீமத் துரைச்சாமி தேசியரவர்களைத் தெரிந்து ஞானப்பிரகாச கலாசாலைக்குத் தமிழ்ப் பண்டிதராக நியமித்திருந்தமைக் கேற்ப, அந்த நியமனத்தைப் பற்றித் தமது மனதார்ந்த நல்லபிப்பிராயத்தைப் பற்றியும் வியக்தமாக வெளியிட்டார்கள்.

இடையிடையே (முறையூர் மெய்ஞ்ஞான விளக்க ஸபா காரியதரிசி) ஸ்ரீ மான் சுப. குமரப்ப செட்டியார் அவர்களால் தேவாரம் முதலிய அருட்பாக்கங்கள் மிக்க இனிமையாக ஓதப்பெற்றன.

இவற்றை சபையில் இராமநாதபுரம் ஜில்லா ஸ்கூல் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரவர்களாகிய பிர்ம ஸ்ரீ T.A. ஸ்வாமிநாதய்யரவர்கள் தம்மைச்சார்ந்த உத்தியோகஸ்தர்களோடு விஜயம் செய்து சபையைக் கனப்படுத்தினார்கள்.

கடைசியாக ஸ்ரீமான் காரிய தரிசி அவர்கள அக்கிராஸனாதிபதி முதலியோரனைவர்க்கும் முறையாக வந்தனோபசாரமும், வாழ்த்துப்பாவும் கூற ஹாரசந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற்று மாலை 8 மணிக்கு மங்கள கர கோஷத்துடனே சபை நிறைவேறியது.

கண்டு களித்தோன்,
'வைசியமித்திரன்' வாரப்பத்திரிகை,
தேவகோட்டை. 2-10-1916. பக்கம். 6.

## 1917ஆம் ஆண்டில் புதுவயல் லலிதா விலாஸ் ரீடிங் ரூம் அன்ட் பாட்மின்டன் கிளப் முதலாவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம்.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் இவ் வாசகசாலையின் முதல் வருஷ நிறைவு விழாக் கொண்டாட்டம், நிகழும் பிங்கள ஸு சித்திரை மீ க-ம்உ உ-ம்வ இவ்விரு தினங்களிலும் 'வித்தியாபாநு' பத்திராதிபரும், கம்பராமாயணப் பிரசாரகருமாகிய காரைக்குடி பிர்மஸ்ரீ M. V. கோவிந்தராஜ அய்யங்காரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நன்கு நடைபெற்றது.

13-4-1917 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நகரத்தார்கள் தலைவரவர்களை ஞானப்பிரகாச கலாசாலையிலிருந்தும் மங்கள வாத்திய கோஷத்துடன் சபா மண்டபத்திற்கழைத்து வந்தார், ஞா.பி. கலாசாலை மாணவர்களால் கடவுள் வாழ்த்துக் கூறப்பட்டது.

பின்னர் இவ்வாசகசாலையில் அக்கிராசனுதிபதி ஸ்ரீமான் அ. ப. சி. சின்னையா செட்டியாரவர்களால் அக்கிராசனத்தமரும்படி பிரரேபிக்சப் பெற்றுச் சபையோர் களால் ஆமோதிக்கப்பட்டது.

சபாநாயகரவர்கள் அக்கிராசனத்தமர்ந்ததும், இனிய மொழிகளால் முன்னுரை கூறினார்கள். பின்னர் காரியதரிசி ஸ்ரீமான் அரு. உ. அருணாசலஞ்செட்டியார் அவர்களால் அறிக்கைப் பத்திரம் படிக்கப்பட்டது.

அதன் பின் பிர்மஸ்ரீ காட்டுப்புத்தூர் கிருஷ்ண சாஸ்திரியாரவர்கள் 'வாசகசாலை' என்பதுபற்றியும், வைசியமித்திரன் ரிப்போர்ட்டர் R. ராஜகோபாலருவ் அவர்கள் 'பத்திரிகையும் அதன் பிரயோஜனமும்' என்பது பற்றியும், ஸ்ரீமான் சுபி. ராம. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் 'ஒற்றுமை' என்பது பற்றியும், ஞா. பி. கலாசாலை ஆங்கில ஆசிரியர் பிரமஸ்ரீ மீனுட்சி சுந்தரமய்யர் அவர்கள் 'தேகப்பயிற்சி' என்பதுபற்றியும், கேட்டோர் யாவரும் பேருவகை அடையும் வண்ணம் நன்கு உபன்யசித்து முடிந்ததும், சபாநாயகர் மிக இனிமையாகவும், விரிவாகவும் முடிவுரை கூறினார்கள்.

பின்னர் வாசக சாலையின் தலைவர் ஸ்ரீமான் சின்னையா செட்டியாரவர்கள் அக்கிராசனுதிபதி அவர்கட்கும், உபந்யாசகர்கட்கும் நன்றியறிந்த வந்தனம் கூற ஹார சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பட்டும் 5 மணிக்கு சபை பூர்த்தியடைந்தது.

5-10 மணிக்கு நவீன முறையில் ஏற்படுத்தப் பட்டிருந்த தேநீர்ப்பானக் கச்சேரி (Tea Party) நன்கு நடந்தேறியது. அதற்குச் சுமார் 400 ஜனங்கள் வரை விஜயஞ் செய்து சிற்றுண்டி யருந்திய பின்னர், புஷ்ப, சந்தன தாம்பூலாதிகள் வழங்கப் பெற்றன.

அதன் பின்னர் பந்து விளையாடல் (Badminton) நடைபெற்றது.

இரவு 9 மணி முதல் 2 மணி வரை ஜலதரங்கக் கச்சேரி நிகழ்ந்தது

14 4-1917 காலை 9 மணிக்கு விகடக் கச்சேரியும், மாலை 3மணி முதல் இரவு 8மணி வரை குஞ்சர பாகவதர் அவர்கள் 'இராஜமோஹினி' என்னும் சரித்திரத்தை சபையோர் ஆனந்திக்கும் வண்ணம் மிகவும் அழகாகக் காலக்ஷேபம் செய்தார்கள்.. இத்துடன் அக்கொண்டாட்டமானது மங்களகரத்துடன் நிறைவேறியது.

கண்டு மகிழ்ந்தோன்

'கலைமகள்' - மாதப்பத்திரிகை.

(புதுவை கலைமகள் கழகத்தார் வெளியிட்டது)

1917 மார்ச், பக்கம், 63 - 64.

கல்வி, செல்வம், புகழ்மிக்க பெரியோர்களால் தொடங்கிய இரு சபைகளும் நாலைந்து ஆண்டுகள் கூடத் தொடர்ந்து நடைபெறவில்லை. அவை மறைந்து, சரித்திரப் பெருமையோடு திருப்தியடைந்து விட்டன.

ஆனால் துள்ளி விளையாடிய பள்ளிப் பிள்ளைகளால் தொடங்கிய இச்சரஸ்வதி சங்கம், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, புதுவையில் பொது வாழ்க்கையில் ஒரு நிரந்தர அங்கமாகிப் பொன் விழாக் கொண்டாடுகின்றது

இதற்குக் காரணம் தேவி உமையாம்பிகையின் திருவருளேயாகும்.

# சங்கமும்-பள்ளியும், உயிரும்-உடலும்.

V. சாம்பசிவன், தலைமை ஆசிரியர்.

ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலை புதுவயல்.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்."

என்ற அடிகளால் அறம் செய்யும் முறைமையை வள்ளுவர் விளக்குகின்றார். அறச் செயலை ஒல்லும் வகையான் செய்யுங்கள் என்றார். அடுத்து செல்லும் இடங்களிலெல்லாம் செய்க என்று கூறி இடை விடாமல் செய்க எனக் காலம் முழுமையும் அறம் செய்ய ஆணையிடுகின்றார்.

அதற்கொப்ப அறச் செயலை நம் செட்டிநாட்டுத் தனவணிகப் பெருமக்கள் பல்லாற்றானும் செய்து தமக்காக என்றில்லாமல் நாட்டுக்காக, நாட்டு மக்களின் நலனுக்காக என்று பல பெரிய அறநிறுவனங்களை ஆக்கி விட்டார்கள்.

அதன்வழித் தோன்றலில் ஒன்றே, நமது சரசுவதி சங்கம். சங்கமும் அதனைச் சார்ந்த சரசுவதி வித்தியாசாலையும் உயிரும் உடலும் போன்று ஒன்றை ஒன்று சார்ந்து பணி புரிந்து வருகிறது. துந்துபி ஆண்டு ஆடித் திங்கள் ஒன்பதாம் நாள் துவங்கப்பெற்ற இச்சங்கம் சீரும், சிறப்புமாக வளர்ந்தோங்கி இன்று ஐம்பதாம் ஆண்டு பொன் விழாக் காணும் பொலிவைப் பெற்று விளங்குகின்றது. இதனைக் கண்டு பூரிப்படைகின்றோம். ஆசிரியர்களுக்குத் தேவையுள்ள பொழுது

எம் குறைகள் நீங்க பல துறைகளிலும் உதவி வருவது குறிப்பிடத்தக்கது. மேலும் மேலும் வளர்ந்தோங்கி வைரவிழாக்காணும் பேற்றினை நல்க கலைமகளை வாழ்த்துவோமாக.

இருபது குழந்தைகளுடனும், இரு ஆசிரியர்களுடனும் நான்கு வகுப்புகளைக் கொண்டு துவக்கப்பட்ட இப்பள்ளி, இன்று எட்டு வகுப்புக்கள் கொண்டதாக விளங்குகின்றது. முந்நூறுக்கும் அதிகப்பட்ட மாணவர்கள் பயிலுகின்றனர். இப் பள்ளி எல்லா நிறைவுகளையும் பெற்று புதுவயல் வாழ் பெருமக்கள் அனைவரின் ஈடுபாட்டினையும், ஒத்துழைப்பையும் தன்னகத்தே பெற்றுத் திகழ்கின்றது.

அரசினர் பாடத் திட்டங்களோடு, இலக்கியப் போட்டிகளும் நடத்தப் பெற்று அதற்கெனத் தனிப் பயிற்சிகளும் ஆசிரியர்களால் அளிக்கப்பட்டு வருகின்றது. பல சான்றோர்கள் இலக்கியப் போட்டிகளுக்குப் பரிசு வழங்கி ஆதரவு காட்டி வருகின்றார்கள்,

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் ஒருங்கே இங்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது. இம் மேடையில் பயின்றோர், பல்லோர் தமிழகம் முழுவதும் அவர்கள் இன்று புலவர்களாய், கலைஞர்களாய், எழுத்தாளர்களாய், வண்மை மிகு பேச்சாளர்களாய், நாடக ஆசிரியர்களாய், மருத்துவ வல்லுநர்களாய், வங்கிப்பணி வல்லுநர்களாய், வழக்கறிஞர்களாய் இன்னும் பல வேறு பெருந்துறைகளின் மேதைகளாய்ப் பரவித் தொண்டாற்றுகின்றனர். மேற்கூறிய தக்கவர்கள் யாவரும் இப் பொன் விழாவின் கண்ணே செயலாற்றி வருவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சியளிக்கின்றது.

எல்லாம் கலைமகள் அருளே. நம் சங்கம் இன்று பொன் விழாக் காணுகின்றது. நம் நாடு விடுதலை பெற்று வெள்ளி விழாக் காணும் நிலையில் மகிழ்வெய்தி

நிற்கின்றது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் வெள்ளையரின் வெறியாட்டம் தலைவிரித்தாடியது. அந்நிய ஏகாதிபத்தியத்தினால் நாடு முழுவதும் இருள் சூழ்ந்திருந்தது. அதை எதிர்த்து முழக்கமிட்ட மேடை இச்சங்க மேடை. வ.உ.சி. போன்ற கப்பலோட்டிய தமிழர்களை வரவேற்ற மேடை. மூவண்ணக் கொடிபிடித்து ஊர்வலங்கள் சென்று விடுதலை வேட்கையை ஊர் முழுவதும் பரப்பியது இச் சங்கம்.

பள்ளியை அமைத்துச் செயல் புரிகின்ற இச் சங்கம் அன்று விடுதலைப் பணியிலும், சமூக சீர்திருத்தப் பணியிலும் ஈடுபட்டு முற்போக்குச் செயல்களை மிகத் தீவிரமாய்ச் செயல்புரிந்தது.

பல கலைஞர்களைப் பாராட்டியும், திரு. Dr. K.S **கிருஷ்ணன்** போன்ற உலக விஞ்ஞானிகளை வரவேற்றும் பெருமை கண்ட சங்கம் இது.

இச் சங்கம், இதனில் அடங்கிய கலைக்கூடம் இரண்டும் மேன் மேலும் ஒன்றி வளர்ந்து இந்த ஊருக்கும் நாட்டுக்கும், இவ்வுலகம் முழுமைக்கும் தொண்டாற்றி ஒப்பற்ற சிறப்பினை எய்த கலைமகளை வாழ்த்தி முடிக்கின்றேன். தொடர்க அறப்பணி! வாழ்க கலைக்கூடம்!

வணக்கம்.

# தேனியும் மானிடனும்.

(இராம. கன்னையா, B. A.)

ஓரறிவே பெற்றிட்ட தேனி வாழ்வை
  ஒப்பிட்டால் மனிதனுடை தலையே தாழும்.
பேரறிவு கொண்டுள்ள மனிதன் வாழ்வில்
  பெருமைமிகு காரியங்கள் பலவும்கண்டான்
சிரதனைத் தனக்கேதான் ஆக்கி விட்டான்
  சீலத்தை ஏனோதான் நீக்கி விட்டான்.
பாரதிரப் பலசெயல்கள் செய்தான்; ஆனால்
  பண்பதனை ஒருசிறிதும் எண்ணான் ஆனான்

காட்டிலுள்ள மலர்த்தேனை உறிஞ்சி வந்து
  கனிவுடனே கக்கியதைக் கூட்டில் சேர்த்து
பாட்டாலே பலதேனி வாழச் செய்யும்
  பான்மையினைப் பார்த்திட்டால் வியந்தே
                                        போவோம்!
தேட்டைமிகச் சேர்த்துள்ள மக்கள் தாமும்
  தேசத்தில் பிறர்வாழக் கொடுப்ப துண்டோ?
நாட்டினிலே பகுத்தறியும் தன்மை பெற்ற
  நம்மைவிடத் தேனிக்கள் உயர்ந்த தன்றோ

கூட்டுறவுக் கொள்கைகள் பற்றிப் பேசி
  கூடுவிட்டுக் கூடுபாய்ந்து நாசம் செய்து
நாட்டுநலம் கெடுத்துவரும் மனிதர் போல
  நயவஞ்சம் ஒருசிறிதும் இன்றித் தேனி
காட்டிடுமே கண்ணியத்தை வாழ்வில்; என்றும்
  கருத்தினிலே ஒன்றுபட்டே வாழும்;
                                        நம்போல்
நாட்டத்தைத் தன்னலத்தில் வைத்துப்போற்றி
  நானிலத்தில் மிகஉயர்ந்த படைப்பென்
                                        றெண்ணு!

கடமைதனைக் கருத்தினிலே கொண்டு தீய
 கயமைதனைக் காணாத கூட்டம்; நம்போல்
மடமைதனை மனத்தினிலே கொண்டு தாமே
 மகிழ்ச்சியுடன் வாழுவழி காணாக் கூட்டம்
உடமைதனை எல்லோர்க்கும் உரிமை யாக்கி
 உளமதிலே நலமதனை எண்ணும் கூட்டம்
உடலோய்ந்தே உயிர்பிரியும் காலம் மட்டும்
 உழைப்பதனைப் பிறருக்கே நல்கும் கூட்டம்

ஒருவருக்கும் பயனின்றிச் சோம்பி வாழ்வில்
 உண்பதுவும் உறங்குவதும் தொழிலாய்க்
 கொண்டு
பொறுப்பின்றி வாழ்ந்துவரும் ஆணைப்
 பெண் ஈ
 பொதுஉடமை காத்திடவே கொன்றே
 போடும்
திருவளர் எனப்போற்றித் தீயோர் தம்மை
 தேன்பொழியும் மலர்ச்சோலை என்றே ஏத்தி
உருவுடனே உலவிவரும் மடமைச் செய்கை
 ஒருபோதும் இல்லையந்தத் தேனீ வாழ்வில்.

தம்கடமை யில்லாவின் காரியத்தில்
 தலையிடுதல் அங்கில்லை; வீண்பேச் சில்லை
நம்போன்று சோம்பியங்கே இருத்தல் இல்லை
 நடுத்தெருவில் நாகூசாச் சண்டை இல்லை
தெம்புடனே தேன்கொள்ளச் செல்லல் இன்றி
 தேவையிலாக் காரியங்கள் இல்லை யங்கே
தம்மாலே இயன்றமட்டும் பாடு பட்டு
 தம்மினத்தைக் காத்தலின்றிப் பிறிதே
 இல்லை

மானிடனே உனதுசெய்கை எண்ணிப் பாராய்
மதிப்பற்ற தெனநினைக்கும் பிறஉயிர்கள்
தேனீக்கள் எறும்புகளின் செயலைக் கண்டும்
தேயத்தில் நீயுயர் வேண்டு மன்றோ!
மானம்தான் உனக்குண்டோ மானைப் போல
மற்றெதிலே நீயுயர்ந்தாய்? சொல்லு
பார்ப்போம்!
தானங்கள் தருமங்கள் பற்றிப் பேசி
தன்னிலையில் ஒருசிறிதும் மாறாய் வெட்கம்.

With The Best
Compliments Of

M/S. VALAROLI PICTURES.
MADRAS-34.

# ஸ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையில் நான்.

சித. சிதம்பரம், பழைய மாணவன்.

ஸ்ரீ சரசுவதி வித்தியாசாலையானது புதுவயலிருந்து கல்லூர் செல்லும் வழியில் காண்போர் நெஞ்சம் கவரும் கவின்மிகு கட்டிடமாகத் திகழா நிற்கிறது இப்பள்ளி கலைமகளின் திருப்பெயரைக் கொண்டு மிளிர்கின்றது. இக்கல்விக்கூடமானது ஸ்ரீ சரசுவதிசங்கத்தின் பொற்புறு உதவியினால் கண்கவர் கட்டிடமாகத் எழுப்பப்பட்டது. இச்சங்கம் விழாவினை வெற்றிப் புன்னகையுடன் வரவேற்றுத் தாங்கி, இன்று பொன்விழாவினை வரவேற்று பூரிப்பாய் இலங்குகிறது. இப் பொன் விழாவில் பழைய மாணக்கனாகிய எனக்கும் கட்டுரையினை எழுத வாய்ப்பு ஈந்ததை எண்ணி இறும்பூதடைகிறேன்

இப்பள்ளியில் நான்பயின்றது இறுதி மூவாண்டுகளே அதனால் யான் அடைந்த நன்மைகள் அளப்பரியன. அனுபவமோ சிற்சிலவேயாம். அறிவு என்னும் நீரை அறியாமை எனும் மண் மூடியிருக்கிறது. அந்த அறியாமையாகிய மண்ணை நீக்கி, மாணாக்கர்களின் நல்வாழ்வு என்ற நல்வாழ்வு என்ற பைங்கூழுக்கு நீர்பாய்ச்ச முயலா நிற்கும் கல்விக்கூடங்களிலே எழில்மிகு வித்தியாசாலை முதலிடத்தைப் பெற்றுள்ளதென்றால் மிகையாகாது. மிகப்பெரிய மேகக்கூட்டங்களால் அலர்கதிர் ஞாயிற்றின் ஒளியை மறைக்க இயலாது. அங்ஙனமே வளர்ந்து வரும் இப்பள்ளியின் முன்னேற்றத்தையும் தடுக்க முடியாது என்பது திண்ணம்! டாக்டர் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கிறார். ஆசிரியரோ மாணாக்கனுக்கு அறிவைப் புகட்டுகிறார். நோயாளி டாக்டர் கொடுத்த மருந்தினால் சுகமடைவது போல, மாணவர்கள் ஆசிரியரின் நற்பணியால் அறிவைப்பெற

ஸ்ரீ சரஸ்சுவதி சங்கம் உதவுகிறது. இச்சங்கம் இன்று பொன்விழாக்கொண்டாடும் சிறப்பைப்பெற்றுள்ளது என்றால் இதை வியத்தலும் இயலுமோ?

மாணவ, மாணவியர் குறுகிய அறிவுடன் பள்ளியில் நுழைந்து, சில ஆண்டுகளில் விரிந்த அறிவுடன் வெளியேறுகின்றனர். "வெறும் எழுத்தறிவு மட்டும் கல்வியறிவு ஆகாது. நம் ஒழுக்கத்தை விருத்தி செய்து கொள்வதே உண்மையான கல்வியாகும்" என்பது காந்தியடிகளின் கூற்று. அதற்கு இலக்காக இப்பள்ளி திகழாநிற்கின்றது. பள்ளி ஆசிரியப் பெருந்தகைகளோ "பள்ளி நமக்கு என்ன செய்தது என்று எண்ணாது, பள்ளிக்கு நாம் என்ன செய்தோம்" என்ற உயரிய தியாக மனப்பான்மை கொண்டவர்களாவார்கள். ஆசிரியர்கள் கற்பிப்பதோடு மட்டும் நில்லாது, மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இடையே ஒரு நெருங்கிய பிணைப்பு ஏற்படவேண்டும். அப்பொழுதுதான் மாணவர்களின் உள்ளங்களை, ஆசிரியர்கள் புரிந்துகொண்டு அவர்களின் பிற்கால வாழ்க்கையிலே ஒளிவீசச் செய்யமுடியும் என்பது எனது உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி. அசையாத நம்பிக்கை!

இவ்வாறு பள்ளியின் சேவையைப் பாராட்ட இந்தப் பொன்விழா நேரத்தில், மணித்துளிகள் போதா! நாட்கள் போதா! ஏன்? ஆண்டுகள் பல உருண்டோடும் என்றே கூறலாம்! ஆம்! இப் பள்ளி மாணவர்கள் எத்துறையிலும்-எப்பள்ளியிலும் முதன்மைபெற-பள்ளியின் பெயரை நிலை நாட்டக் காரணம்? மாணவர்கள் நாட்டுப்பற்று உடையவர்களாக விளங்க – மொழிப்பற்றுடையவர்களாகத் திகழ-சுதந்திரதினம் – குடியரசுதினம் – நாட்டைக்காக்க உயிரைத் தஞ்சம் என நினையாது போராடி உயிர் துறந்த தியாகிகளின் நினைவுத்தினம் ஆகியவற்றை விழாக்களாக நடத்தி, அத்தினங்களிலே மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி போன்ற போட்டிகளை ஏற்படுத்தி, அதில் வெற்றி பெற்ற நாவன்மை மிக்க மாணவர்களுக்குப் பரிசுநல்கி ஊக்குவித்தல், இன்னும்

கதை, கட்டுரை-இலக்கியம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தி முதன்மை பெற்றவர்களுக்குப் பரிசு நல்குதல். ஆங்கில அறிவு பெற அதற்கும் பரிசு. தாய்மொழியாம் தண்டமிழ் மொழியில் தன்னிறைவு பெற வெள்ளி, பொன் பதக்கம் வழங்குதல் முதலியவற்றையும் இப்பள்ளி நடத்துகிறது.

ஒன்றுமட்டும் என்றால் கூறாது விடமுடியாது. இப்பள்ளியில் இறுதியாண்டில் மாணவர்களின் பிற்கால வாழ்வில் நோக்கம் கொண்டு, தாயினும் சாலப்பரிந்து, என் போன்ற மாணவர்களை ஆளாக்கிட்ட, ஆசிரியப் பெருந்தகைகளுக்கு பிரிவு உபசாரவிழா நடத்தும் நாள். ஆம்! அவர்களின் இறுதி அறிவுரையை நாங்கள் கேட்க எதிர் நோக்கும் நாள். மூவாண்டுகள் பயின்ற எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி அளவில்லை என்றால் எட்டாண்டுகள் பயின்ற மாணவர்களின் கதி? தலைமையாசிரியர் அறிவுறை கூறுகின்றார், "மாணவர்களே. சூரியன் ஒளியைத் தருகின்றான். விதைப்பவன் விதைத்துக் கொள்ள வேண்டும். மருத்துவன் மருந்தைக் கொடுக்கிறான். நோயாளி அதைப் பயன் படுத்த வேண்டும். நாங்கள் இது போன்ற அறிவுறைகளைத்தான் கூறமுடியும். அதன்படி ஒழுகல் உங்களது கடமையாகும்." என்று கூற, மற்ற ஆசிரியர்களும் கருத்து மாரி பொழிந்தனர். அந்தப் பெருந்தகைகளின் கண்மணிகளில் நீர்த்துளி ததும்பியது! ஒரு துளி—இரு துளிகள் அல்ல. தொடர்ந்து கொட்டுகிறது. தண்ணீரல்ல! அவை பெறும் கனியினின்று கொட்டும் அறிவுரை முத்துக்கள்! அன்றுதான் ஆசிரியர்கள் ஊதியத்திற்கு மட்டும் உழைப்பவர்கள் அல்ல; மாணவர்களின் நல்வாழ்வை உயர்த்த வேண்டும் என்னும் உயரிய கொள்கையுடையவர்கள் என்பதை அறிந்தோம்.

அந்த ஆனந்தக் கண்ணீரைக் கண்டு, கலைமகள் புன்முறுவல் பூத்தனள். கதிரவன் தன் அனற்பிழம்பைத் தன்னகத்தே அடக்கிக் கொண்டு, மேற்றிசையில் மெதுவாய் மறைய நிலவழகி தன் மஞ்சள் முகத்தை வானில் காட்டி புன்முறுவல் கூட்டித் தோன்றினள். மூவாண்டுகள் பயின்ற யான் "இப் பள்ளியிலே அனைவரும் பயில இயலாது, அது கலைமகள்

அருள் பெற்றார்க்கே கிடைக்கும்'' என்று முணுமுணுத்தேன். இன்றைக்கு யான் திருவரங்கம் ஆடவர் பள்ளியில் பயின்று கொண்டிருந்தாலும் என் மனம் மட்டும் இப்பள்ளியை விட்டு அகலவில்லை! இதைச் சுற்றியே வட்டமிடுகிறது.

வாழ்க பொன் விழா! வளர்க பள்ளியின் தொண்டு!

### பள்ளி வாழ்த்து.

நெடுநாளாய்ப் புகழோடு நிலைத்து நின்று
நெஞ்சுருகும் கலைமகளின் பெயரைத் தாங்கி
வடிவோடு விளங்கும்நல் வித்தியா சாலை
வளர்பிறையாய்த் தேனிலவாய் வாழ்க! வாழ்க!

# தீரா நோய் தீர்த்தருள வல்லான்.

தவத்திரு சுந்தர சுவாமிகள்.
கௌமார மடாலயம்,
சிரவணபுரம்-கோயமுத்தூர்:

உலகத்திற் பிறந்த உயிர்களுக்கு வருகின்ற தொல்லைகள் பல. அந்தத் தொல்லை விரைவில் மறைந்து விடுமானால் அதற்குத் 'துன்பம்' என்று பெயர். அது மறக்க முடியாமல் துன்புறுத்திக் கொண்டிருந்தால், அதற்குப் 'பிணி' என்று பெயர். மனத்திற்குத் தொல்லை தரும் துன்பங்களை, வேறு நல்ல எண்ணங்களை எண்ணுவதால் மாற்றிக்கொள்ள முடியும். ஆனால் உடலுக்கு வருகின்ற துன்பங்களை எண்ணத்தால் மாற்ற முடியாது. அது, உடலோடு பிணித்துக் கொண்டிருப்பதால் 'பிணி' என்று அதனைச் சொல்லுகிறோம். பிணித்தல்—கட்டுதல்.

உடலுக்கு வரும் பிணிகள் பல. உரிய நேரத்தில் உணவு உண்ணுவிட்டால் பசிப்பிணி வருகிறது. தட்ப, வெப்ப நிலை மாறுபட்டால் அதற்கு ஏற்ப உடற் பிணி வருகிறது. இவ்வாறு பல வகையாக வரும் நோய்களுக்கெல்லாம், தக்க மருந்துகள் கொடுத்து நிவர்த்தி செய்ய வேண்டும். தகுதியில்லாத மருந்துகள் கொடுத்தால், நோய் தீராது. மிகையானலும் ஆகலாம். உதாரணமாக பசி நோய் வந்தது என்றால், அதற்குரிய மருந்தாகிய உணவை உண்டால் பசிநோய் நீங்குகிறது. ஆனல் அவ்வுணவு, பொருத்தமற்றதாய், உடலுக்கு ஒவ்வாததாய் இருந்தால், பசி நோய் நீங்கி உடல் நோய் உண்டாகும். அதுபோல உடற் பிணிக்கும் அதற்குத் தகுந்த மருந்தை நல்ல மருத்துவர்களிடம் பெற்று, உண்டு, நோய் நீக்கம் பெறவேண்டும் நமது உடலுக்குச், 'சளி' உண்டாகித் தாகம் அதிகமானல், அதற்குரிய சாந்தி செய்ய வேண்டுமேயன்றித் தண்ணீர் குடித்தே தாகத்தை நீக்க முடியாது. இப்படி உடலுக்குவரும் பல நோய்களையும் அவ்வவற்றிற்குரிய மருந்துகளாலேயே நீக்கம் பெற வேண்டும்.

நமது உடம்பை நல்ல முறையில் காப்பாற்றி வைத்துக் கொண்டிருப்பது 'உயிர்'. பிணி ஏதும் இன்றி, அழகாயும், இளமையாயும் உள்ள உடம்பு எனினும், உள்ளே இருக்கின்ற உயிர் பிரிந்துவிடுமானல், இந்த உடம்புக்கு 'உடம்பு' என்ற பெயர்போய் வேறு பெயர் ஏற்பட்டுவிடும். பின்பு அதை ஒரு நாள்கூட வைத்திருக்க முடியாது. உடம்பை உடம்பாக வைத்திருப்பது உள்ளே உள்ள 'உயிர்' அத்தகைய உயர்வுள்ள உயிருக்கும் ஒரு பிணி இருக்கிறது. அது 'தீராப்பிணி' 'பிறவி' என்னும் பிணி. உயிரானது மாறி மாறிப் 'புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப் பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய் வல்லசுரராகி முனிவராய்த் தேவராய், வினைக்கு ஏற்பப் பல தேகங்களை எடுத்துக்

கொண்டே இருக்கிறது. அது பிறவிப் பிணி. அப்பிணியை நீக்கும் நல்ல மருந்தினை, நமது முன்னோர்கள் கண்டு, அதனை உண்டு, அதன் பயனாகப் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற்றார்கள். அன்றியும், உலக பாசபந்தத்தில் அழுந்தும் நிலையைப் 'பித்தம்' என்பது ஆன்றோர் கொள்கை. அதைத் தீர்ப்பது இறைவன் அருளே ஆகும். அது பற்றியே, 'பித்தம் தெளிய மருந்தொன்றிருக்குது பேரின்பமன்றுள்ளே' என்றார்கள். 'நல்ல மருந்திம் மருந்து—சுகம்-நல்கும் வைத்தியநாத மருந்து' என்று இறைவனைக் கூறுகின்றார், இராமலிங்க அடிகளார். மேலும், உயிர்களை அநாதியாகப் பற்றியுள்ளது. ஆணவ மலம். இறைவன் அருளாலேயே அது நீங்கும், எல்லா நோயினும் கொடிய நோய் இது. 'தீராத பிணி' அறுமுகக் குருநாதன் தாள் நயந்தவர்க்கல்லது அப் பெரும் பிணி தீராது என்கிறார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்;

பிறவிப் பெருங்கடலாகிய தீராப் பிணியைத் தீர்க்கும் மருந்தாகிய உபதேச மந்திரத்தைத் தமக்கு அருளும்படி, 'அருணகிரிநாத சுவாமிகள்' முருகப் பெருமானை வேண்டுகிறார். 'தீராப் பிணி தீரச்-சிவாத்து மஞான-ஊராட்சிபதான - ஓர்வாக்கருள்வாயே' என்பது பேரூர்த் திருப்புகழ். 'பிறவிப் பெரும் பிணிக்கோர்—மருந்தேவருக' என்கிறார் 'குமர குருபர சுவாமிகள்'. தீராத நோய் ஆதலால் பிறவியைப் பெரும் பிணி என்கிறார். தீர்க்கவல்ல மருந்தாக உள்ளான் இறைவன். 'விண்ணுக்கு ஒரு மருந்தை' என்பது 'திருவாசகம்'

தீராப் பிணியாகிய பிறவிப்பிணிக்கு மருந்தாக உள்ள கடவுள், விண்ணுக்கு ஒரு மருந்தாக இருந்தால் அந்த மருந்து, நமக்கு எப்படிப் பயன்படும் என்பதைத் 'திருநாவுக்கரசர் பெருமான்' விளக்குகின்றார்....'பிரிவிலா

அடியார்க் கென்றும், வாராத செல்வம் வருவிப்பானை, மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்-தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை'...என்பது அவர் திருவாக்கு.

தன்னைப் பிரியாத அன்பர்களுக்கு இறைவன்- மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருளுகிறான். ஒரு நோய் வந்தால் அதை மணி, மந்திரம், ஔஷதம் என்ற மூன்றால் நீக்க வேண்டும். மணிமந்திரங்களால் நீங்கும் நோய்களும், மருந்து ஒன்றாலேயே நீங்கும் நோய்களும் உண்டு. பிறவியாகிய நோய், இந்த மூன்றாலும் நீங்க வேண்டும். இறைவன் இந்த மூன்றாகவும் இருந்து பிறவிநோயை நீக்குகின்றான், 'மணி' என்பது 'அக்கமணி' 'மந்திரம்' அவனுடைய திருவைந்தெழுத்து. 'மருந்து' என்பது 'திவவெண்ணீறு' ஆகிய இம் மூன்றாகவும் இறைவன் இருந்து தன்னை அடைந்த பிரிவிலா அடியார்களுக்கு அருளுகிறான். திருஞானசம்பந்தர் திருநெல்வேலித் தேவாரத்தில் சிவபெருமானை 'மருந்தவை' என்று கூறுகிறார். வைணவர் களுக்கு-மணி 'துளசிமாலை' மந்திரம் 'அட்டாக்கரம்' மருந்து 'திருமண்' ஆகும்.

திருவெண்ணீரும் அக்கமணியும் அணிந்து வைராட்சியதான உபதேசமந்திரப் பொருளாலே நினைந்து வழிபாடு செய்யும் அடியார்கள் பிறவி நோய் தீரப் பெறுவர். இத்தகைய அடியார்களை, வணங்கினால், அவ்வணக்கம் இறைவனுக்கே போய்ச் சேரும். இவர்களுடைய நெஞ்சகத்தில் இறைவனையும் காண முடியும். "எவரேனும் தாமாக விலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டாலுள்கி ... ஈசன் திறமே பேணிக், கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே" என்பது அப்பர் பெருமான் திருவாக்கு.

பிறவியாகிய பிணி நீங்க, அதற்குரிய மணி, மந்திர ஔடதமாகியசாதனங்களை மேற்கொண்டும், சாதனங்களை மேற்கொண்ட பெரியோர்களை வாழ்த்தியும் வணங்கியும் திராப்பிணியாகிய பிறவி நோய்க்கு முடிவு காண்போமாக.

நலம் பெறு சிவத்தை நாடொறும் நினைந்தால்
சிலம்பொலிப் பாதம் சேர்தலுமாகுமே.


செட்டிநாடு
டுடோரியல் காலேஜ்.

C. T. C.

123, முத்துப்பட்டணம் மூன்ரும் தெரு,
காரைக்குடி.
கிளை: 14, சிலம்பணி வடக்குத்தெரு,
தேவகோட்டை.

S.S.L.C., P.U.C., B.A., B.Sc, மெட்ரிக்.
பயிற்சி! வெற்றி உறுதி!!
குறைந்த கட்டணம்! ஆஸ்டல் உள்ளது.
1-6-72 முதல் வகுப்புத் தொடக்கம்.

முதல்வர் :
கவிஞர் அரு. சோமசுந்தரன் M.A., B.T.,

ஆதரவாளர்:
பொன்முடிப் பதிப்பகம்
&
செல்லப்பா அண் கோ.,
151, செக்காலை ரோடு, காரைக்குடி.

# பள்ளிப் புரவலர்.

## பண்பாளர் இராமசாமி!

(புலவர்:— இராம. வீரப்பன்)

1. கொஞ்சம் படித்திருந்தேன்
   கூடப் படிப்பதற்கு
   மிஞ்சு பொருளில்லை
   மேலோர் தொடர்பில்லை
   அஞ்சும் குடும்பத்தில்
   அரசாட்சி வறுமைக்கே.
   தஞ்சமென வேலையினைத்
   தரணியிலே பெறமுயன்றேன்.

2. செல்வத்தால் சிறந்திருந்தால்
   செயலாற்ற வங்கிட்டும்.
   செல்வாக்குப் பெற்றவர்க்கும்
   செயல்புரிய இடமுண்டு.
   கல்விக்கு வேலையில்லை
   கடமைக்கு மதிப்பில்லை.
   பல்வித்தை கற்றுலும்
   பணக்கார உறவுவேண்டும்!

3. சாதி சமயமற்ற
   சன்மார்க்க அரசியலில்,
   சாதியினுல் உயர்வுசொல்லி
   சமவாய்ப்பு வேலையில்லை.
   நீதியா? என்பதனை
   நேர்மையாய்ச் சிந்தியுங்கள்.
   வாதிக்க வரவில்லை
   வேதனையில் உண்மைசொன்னேன்.

4. எங்குசெல்வோம் என்றெண்ணி
ஏங்குகின்ற நேரத்தில்,
சங்கத்தின் நற்றொண்டர்
சோலையப்ப நன்மனத்தான்
பங்கமில் வள்ளலிடம்
பதவிபெற அழைத்திட்டான்.
தங்கநிகர் இராமசாமி
தந்துவைத்த பதவியிது.

5. பயிற்சிபெறாத் தன்மையினால்
பலகாலம் அரசியலார்
உயிர்போன்ற மானியத்தை
உடன்வழங்க மறுத்துவிட்டார்.
பைப்பணத்தை ஈந்ததாகப்
படம்போட்டே ஏய்க்குநாளில்
கைப்பணத்தை எனக்கிந்து
கண்ணியத்தைக் காத்ததெய்வம்!

6. விருப்போடென் குடும்பத்தில்
விளக்கேற்றி மகிழ்ந்திட்டாய்.
இருபதாண் டானாலும்
இளமையாய் என்நெஞ்சில்
பெருமையாய் வேருன்றி
புலவனென வளர்ந்துவிட்டேன்.
உருவாக்கும் உம்குடும்பம்
உயரட்டும் மலைபோல!!

7. ஏற்றிவைத்த நல்விளக்கு
எழிலோடு பொலிவூட்ட,
போற்றிப் புகழ்ந்திடுவேன்
பொன்னடியைத் தொழுதிடுவேன்.
ஊற்றாக நானிருந்தால்
உம்மடியில் நீர்சுரப்பேன்
சாற்றும் கவிஞனுக்கு
செந்தமிழே புகலிடமாம்.

8 எட்டுமுழ வேட்டிக்கே
எழில்தந்த நல்லுருவம்!
பொட்டுவைத்த நல்நெற்றி
பூமணக்கும் பொய்கையாகும்.
வெட்டிவைத்த பாளையென
வேலைமிக்க கண்ணாடி.
சட்டைநிறம் தந்தமென்றால்
துப்பட்டா துதிக்கைதானோ?

9 உள்ளத்தால் உயர்ந்தவனும்,
ஊருணியாய் நிறைந்தவனும்.
பள்ளிக்கு வாழ்வளிக்கப்
பயன்மரமாய்ப் பழுத்தவனும்.
வெள்ளம்போல் துன்பத்தை
மருந்தாகித் தீர்த்திடுவான்.
அள்ளிக் கொடுத்திடுவான்,
ஆர்ப்பாட்டம் செய்தறியான்.

10. பொன்தோற்கும் உடலழகில்.
பூத்தோற்கும் உள்ளமென்மை.
வின்தோற்கும் வன்கரங்கள்
வெடிதோற்கும் பெருஞ்சிரிப்பு.
மண்தோற்கும் பொறையுடைமை
மதிதோற்கும் முகமலரில்.
பண்தோற்கும் மழலைமொழி
பகையறியா இராமசாமி!

★

# நெல் உணர்த்தும் நெறி.

திரு. வி. குமாரசாமி ஐயர்

முதல்வர், சி,பா.சு.த. கல்லூரி. மயிலம்.

தமிழ் நாட்டினர்க்கு நெல் ஒரு சிறந்த உணவுப்பொருள் "நெல்லுக்குப் பின்னர் நேர்ந்தவெல்லாம் புல்" என்ற பழமொழியும் வழங்குதலை நாம் அறிவோம். இத்தகு உயரிய உணவுப்பொருளை உழவர்கள் எங்ஙனம் உண்டாக்குகின்றனர் முதலில் விதைக்கென்று சேமித்து வைத்த நெல்லை நன்கு பண்படுத்திய நாற்றங்காலில் விதைப்பர். விதைக்கப்பெற்ற நெல் முளையிட்டு மரகதக் கொழுந்தென வளரா நிற்கும். அங்ஙனமுள்ள நாற்றைப் பல்கால் உழுது எருவிட்டுச் செம்மைப்படுத்திய நன்செய் நிலத்தில் பெயர்த்து நடுவர். நீர் பாய்ச்சுவர்; களையெடுப்பர்; பாதுகாப்பர்; நெற்பயிர் நன்கு வளரும். வளர்ந்து கதிர் ஈனத்தொடங்கும் பசுங்கதிர் தோன்றிய காலத்து நிமிர்ந்து அழகுற நிற்கும். கதிர் முற்றின் தலை சாயும். நெற்றுள் முற்றிய நெற்கதிரின் பாரந்தாங்க முடியாமல்தளரும். இங்ஙனம்வளரா நின்றநெற்பயிரின் ஒவ்வொரு பருவமும் பார்ப்பதற்கு மிக அழகாயிருக்கும். நெல் வயலின் தோற்றம் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கும் அதனாலன்றோ "நெல்லுங் கரும்பும் நிலத்திற்கு அணி' என்றனர். இங்ஙனம் வளரா நின்ற நெற்பயிரைப் புலவர்கள் கண்டு அதன் அழகை அனுபவியாமலிருப்பாரா? அதன் தன்மையை உள்ளத்திற்கொண்டு அதன் வாயிலாகத் தம் உளத்துதித்தநெறியை உலகிற்கு உணர்த்தாமலிருப்பாரா? உணர்த்துவர் அன்றோ! அங்ஙனம் தாம் கண்ட நுண்ணிய கருத்தைச் சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கத்தேவர் நமக்கு அறிவிக்கிறார்.

அது:

"சொல் அருஞ்சூல் பசும்பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று, மேலலார்
செல்வமே போல் தலைநிறுவித், தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே"

(சொல்—நெற்பயிர்கள், இறைஞ்சி—வளைந்து காய்த்த—விளைத்தன)

இப்பாட்டில் தேவர் நெற்பயிரின் மூன்று பருவ நிலையை அழகுற அறிவிக்கின்றார். ஒன்று நெற்பயிர் கதிர் விடுவதற்கு முன்னர் உள்ள பருவம், அஃதாவது கருக்கொண்ட நிலை அதனைக் கண்ட தேவர் அதன் தோற்றத்தைப் பச்சைப்பாம்பு சூல் கொண்டிருந்தால் எங்ஙனம் காணப்படுமோ அவ்வா றுள்ளதென்று அந்நிலையயை அழகிய உளங்கவர் உவமையால் புலப்படுத்துகின்றார். இரண்டாவதாகக் கதிர்விட்டுத் தலை நிமிர்ந்து நிற்கும் நிலையைக்காண்கின்றார். அதைக் காணுங்கால் உலகிலுள்ள சிலருடைய இயல்பு அவருளத்திற்கு வருகின்றது. இப்பயிர் இங்ஙனம் தலைநிமிர்ந்து நிற்கின்றதே! கீழ்மக்கள் புதிதாகச் செல்வம் பெறுவாராயின் எவர்க்கும் பணிவின்றி உலகில் தலைநிமிர்ந்து நடப்பர். இஃது அங்ஙனம் உள்ளதே என்று அக்கீழோர் இயல்பினை அறிவிக்கின்றார். மூன்றாவதாக நெற்கதிர் நாளடைவில் முற்றித் தலைவளைந்து நிற்கிறது. அந் நிலையைக் கண்டு மெய்ந்நூல்களைக் கற்றுணர்ந்தோர் தம் சால் புடைமையால் யாவர்க்கும் பணிவுடையவராய் ஒழுகக்காண் கிறோமல்லவா! அங்ஙனம் தலைவணங்கி நிற்கிறது இப்பயிர் என்று சால்புடையார் இயல்பை உவமை வாயிலாக உணர்த்து கின்றார்.

இங்ஙனம் கீழோர் செல்வம் பெற்றதால் செருக்குறும் நிலையையும் மேலோர்கற்றுணர்ந்து சால்புடையவராய்ப் பணிந் தொழுகும் பண்பினையும் இயற்கைப்பொருளாகிய நெற்பயிரிற் கண்டு உலகிற்கு உணர்த்தும் கவி. முறை என்னென்பது.

மற்று, புலவர் திலகராகிய சிவப்பிரகாச அடிகளார் நெல்லாகிய தானியத்தைக்கண்டு அதன் மூலமாக ஒரு சிறந்த கருத்தை அறிவிக்கும் திறத்தையும் ஈண்டுக் காண்போம்.

நெல்லிலிருந்துதான் நெற்பயிர் உண்டாகிறது. நெல்முளை தோன்றிப் பயிராவதற்கு மூலமாகவுள்ளது நெல்லின் உள்ளீடாகிய அரிசியே. அரிசியைப் பாதுகாப்பது அதன் மேலுள்ள உமி. உமியைச் சிறந்த பொருளாக மதிப்பதில்லை. ஆயினும் உமியைச் சிறிது நீக்கி மீண்டும் அத்துடன் பொருத்தி விதைத்தால் அந்நெல் முளைவிட்டுத் தோன்றுமா? தோன்ரு. இதனைப் பலரும் அறிவர். ஆயினும் இதனுல் நாம் அறியத்தக்க செய்தி ஒன்றுண்டென்று எவரும் கருதியதில்லை. சிவப்பிரகாச அடிகளார் இதனைத் தம் புலமைக்கண்கொண்டு நோக்குகிறுர். எண்ணுகிறுர். நெல், உமி விலகுதலின்றி இருப்பின் அதை விதைத்தால் முளைதோன்றிப் பயிராகும் வன்மையைப் பெறுகிறது. உமி சிறிது நீக்கப்பெற்றுப் பின்னர் கூடினுலும் முளைக்கும் வன்மையை இழந்து விடுகிறது. இதனை ஒப்பதே நட்பின் இயல்பு. நீக்கமின்றி ஒன்று கூடி இணைந்து வாழ்ந்த நண்பர் இருவர் ஏதோ ஒரு காரணத்தால் விலகி மீண்டும் கூடினுலும் முன்னிருந்த நட்பின் வலிமையிராது, அவர் பெருமை அற்பமாம் என்ற கருத்தை உள்ளத்திற் கொண்டு நமக்கு நன்னெறியாக நவில்கின்றுர்.

அது,

> "நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
> நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்–பூக்குழலாய்!
> நெல்லின் உமி சிறிது நீங்கிப் பழமைபோல்
> புல்லினும் தின்மை நிலை போம்"

இங்ஙனம் நம் அருந் தமிழ்ப் புலவர்கள் இயற்கைப் பொருள்களின் இயல்புகளைத் தம் புலமை நோக்கால் உற்றறிந்து ஒழுக்க நெறிகளை உலகிற்கு உணர்த்தும் மாண்பு பெரிதும் போற்றத்தக்கதாம்.

# பெருங்குணத்துக் காதலாள்.

(பேராசிரியர் அ. சிவலிங்கனார், மயிலம்.)

இளங்கோவடிகள் தமது சிலம்புநூலின் கதைத் தலைவர்களான கண்ணகி, கோவலன் ஆகியவர்களை முதலில் மங்கல வாழ்த்துப் பாடலில் அறிமுகம்செய்து வைக்கிறார் கண்ணகியைப் பற்றி.

“ ............ புகார் நகரது தன்னில்
மாகவான் நிகர் வண்கை மாநாய்க்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண்டகவையாள்
அவளுந்தான்,
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள் பெயர்மன்னும் கண்ணகியென் பாள்மன்னோ”

என அறிமுகப்படுத்தினார். மாநாய்க்கன் மகள்—பொற் கொடி போல்வாள் பதினாறு வயதினள்—திருமகள் ஒப்ப வள்—வடமீன் திறமுடையவள் என்றெல்லாம் கூறியது கண்ணகியின் சிறப்புகளை அறிவிப்பனவே. இப்படிப் பெண் களை அறிவிப்பது கவிகளுக்குள்ள பொதுமரபே. ஆனால் பெருங்குணத்துக் காதலாள் என்று கூறியதுதான் கண்ணகிக்கேயுரிய சிறப்பாகும்.

“பெருங்குணத்துக் காதலாள்” என்பதற்கு பெரிய குணங்களை விரும்பியவள் என்பது பொருள். விருப்பம் என்பது ஒரு பொருளைக் கண்டபோது தோன்றுவது. காதல் என்பது அப்பொருள் கிடைத்தேயாகவேண்டும் என்ற முடிவில் நிற்பது. அன்றியும் அப்பொருள் கிடைத்

தாலும் அதனிடத்துப் பதிந்து கிடப்பது. எனவே குணங்களைக் காதலித்தவள் என்றால் குணங்களை விடாமல் பற்றுதலோடு விரும்புபவள் என்பதாகும்.

ஒரு பெண்ணுக்கு இயல்பாக இருக்கவேண்டிய குணங்கள், நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. இயல்பாகவே இவைகள் இருந்தும் இவற்றை விரும்பி நிலையாகக் கொண்டவள் கண்ணகி.

நாணமாவதுயாது என்ற வினவுக்கு இன்னதுதான் என்று இலக்கணம் சொல்லிவிடமுடியாது. பழிபாவச் செயல்களுக்குப் பின்வாங்குவதும் நாணம். தன்குற்றம் வெளிப்படுத்தப்படும் போது வருவதும் நாணம். பிறர் தன்னைப் புகழுமிடத்து உண்டாவதும் அது. இப்படிப் பல இலக்கணம் சொல்லலாம்.

மதுரைக்கு ஏகும் வழியில் தெய்வம் உற்றசாலினி என்பவள் கண்ணகியைப் பற்றி யாவரும் கேட்கும்படி,

> " இவளோ, கொங்கச் செல்வி குடமலையாட்டி
> தென் தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
> ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
> திருமாமணி " ( சில. 12: 47—50)

என்று கூறியபோது கண்ணகி, தன் கணவன் முன்னர்த் தன்னை இவ்வாறு தெய்வமாக்கிக் கூறியதற்கு நாணிக் கோவலன் பின் மறைந்து மயக்கத்தால் கூறுகிறாள் இவள் என்றாள். இச்செயல் கண்ணகியின் நாணத்தைக்காட்டும்.

மடம் என்பது தெரிந்த ஒன்றைத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளாதிருத்தல் என்று சொல்லுவார்கள். உள்ளத்து உணர்ச்சி வெளியில் தெரியாதபடி நடந்து கொள்வது. கோவலன் தன்னைவிட்டு மாதவிபால் பிரிந்து சென்ற வருத்தம் இருக்கவும், அவ்வருத்தம் தன் மாமன் மாமியார்க்குத் தெரியாதபடி மறைத்துப் புன்முறுவலுடன்

நடந்து கொண்டாள். இதனைக் கோவலனிடமே மாதிரி வீட்டில் அவன் தன்னைப் பாராட்டியபோது கூறியுள்ளாள் கண்ணகி. இச்செயல் மடம் என்ற குணத்தைக்காட்டும்.

அச்சம் என்பது அஞ்சத்தக்க கொடிய—தீய விலங்கு முதலியவற்றைக் கண்டபோது தோன்றுவது. அத்தகைய சொற்களைக் கேட்டபோதும் உண்டாவது. கவுந்தியடிகளுடன் மதுரை நோக்கி வந்தபோது காவிரித் தென் கரையில் இருந்த ஒரு பொழிலில் தங்கினர். அங்கு ஆணும் பெண்ணும் ஆன பரத்தர் இருவர் கவுந்தியடிகளிடம் கோவலன் கண்ணகியைச் சுட்டி யார் இவர்? எனக் கேட்டனர். கவுந்தி என்மக்கள் என்றனர். ஒரு வயிற்றில் கணவன் மனைவியாகவே பிறப்பதுண்டோ" என இகழ்ந்தனர். இச்சொல் கேட்டுக் கண்ணகி அஞ்சிக் கோவலன் பின் சென்று நடுங்கி நின்றாள். இது அச்சத்துக் குரியது.

பயிர்ப்பு என்பது முன்பின் பார்த்தறியாத ஒன்றைப் பார்க்க நேர்ந்தபோது தோன்றும் அருவருப்பு. இதற்கு நிகழ்ச்சி சிலம்பில் இல்லையென்றாலும் அச்சத்துக்குக் கூறிய விடமர் செயலையே காட்டலாம்.

கோவலன் மாதவி வீட்டில் உணவருந்திய பின்னர்த் தான் சிலம்பு விற்றுவரப் போவதைத் தெரிவிப்பவன் கண்ணகியைப்பாரட்டிய போது.

" நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக"

உடன் வந்தாள் என்றான்.

இவற்றை யெல்லாம் கொண்டு பார்க்கும்போது பெருங்குணங்களைக் காதலித்தவள் கண்ணகி என்பது புலப்படும்.

பெருங்குணத்துக் காதலாள் என்பதற்குப் "பெரிய குணங்களைக் காதலித்தவள்" என்பதோடு பெரிய குணங்களால் காதலிக்கப்பட்டவள் என்பது பொருளாகக் கொள்ளலாம். முதற் பொருளால் கண்ணகி தன்வழியில் குணங்களைக் கொண்டுவந்தாள் என்பது புலப்படும். இரண்டாவது பொருளால் குணங்கள் தம் வழியில் கண்ணகியைக் கொண்டு சென்றன என்பது புலப்படும். இதுவரையும் குணங்களை தன்விருப்பப்படி ஆண்டுவந்தத் கண்ணகி, கோவலன் கொலைப்பட்டது கேட்டபோது குணங்களின் வழியில் அதாவது குணங்களால் தான் ஆளப்படும் வகையில் அடங்கி விட்டாள் என்னலாம்.

கோயிற் சிலம்பு கொண்ட கள்வன் என்று கோவலனைக் கொன்றனர் என்ற செய்தி கேட்டுப்பொங்கி எழுந்தாள் கண்ணகி. சீற்றம் அவளை ஆட்கொண்டது. அதற்கு அடங்கி விட்டாள். சிந்திக்கும் செயலிழந்தாள். சீற்றத்தின் வழியே சிந்தனை சென்றது. மதுரையைச் சுற்றிக் கற்புடைப் பெண்டிர், சான்றோர், தெய்வம் ஆகியோரை விளித்துப் புலம்பினாள். "காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்" என்று சென்றாள். "தீ வேந்தனைக்கண்டு இத்திறம் கேட்பன்" என்று எழுந்தாள். இச்செய்கையெல்லாம் நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்பன இவளை விட்டகன்றன என்பதைக்காட்டும். இவள் வழிவந்த நாண் முதலியன இவளுக் கடங்காமல் இவளை விட்டகன்றன. நாண் அழிபூசல்' தொடங்கி விட்டாள் என்றார் அடியார்க்கு நல்லார். அச்சமின்றி அரசனிடம் வாதிட்டாள்.

"பட்டாங்கில் யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோடு மதுரையும் ஒழிப்பேன்"

என்றாள். சீற்றமும் அதன் வழி ஆண்மைக் குணமும் இவளை ஆட்கொண்டன. இச்சீற்றம் நல்லதா என்றால் தீயதுதான் எனலாம். தங்களை இகழ்ந்த வப்பபரத்தர்க்குச் சாபவிடை

தரும்படிக் கவுந்தியடிகளிடம் வேண்டிய கண்ணகி அந்த அருள் உள்ளத்தை விட்டு மதுரையை எரிக்க எண்ணினாள். இச்சீற்றம் தீயதுதான் என்றாலும் நீதியை நிலை நாட்டவும் கற்புத்தன்மையைக் காட்டவும் எழுந்த சீற்றம் ஆதலின் ஒரு வகையில் நல்லதாகவே கொள்ளப்படும். அதனால் தான் " வயங்கிய பெருங்குணம் " (விளங்கிய நல்ல குணம்) என்றார் அடிகள்.

எனவே கண்ணகி வயங்கிய பெருங்குணங்களைக் காதலித்தவளாக இருந்தாலும் அவற்றைவிட்டுச் சீற்றம் என்ற குணத்தால் ஆட்கொள்ளப்பட்டுத்தன் கற்பு மாண்பினை வெளிப்படுத்திய காரணத்தால், " குணத்தைக்காதலிப்பவள் என்பதற்கும், ' குணத்தால் காதலிக்கப்பட்டவள் " என்பதற்கும் பொதுவாகப்" பெருங்குணத்துக் காதலாள் என்றார் அடிகள். அதனால் கண்ணகிபற்றிய அறிமுகத்தில் " பெருங்குணத்துக் காதலாள் " என்பதே சிறக்கும் என்னலாம்.



# புதிய சொற்கள்.

செஞ்சொற் கொண்டல்வித்வான்
சொ. சிங்காரவேலன் M. A. Dip, Ling.,
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

## புதிய சொற்கள் புகுதல்:

எந்த மொழியிலும் புதிய புதிய சொற்கள் வந்து கலந்தவாறே இருக்கும். அவ்வாறு வந்து கலக்தும் புதிய சொற்களை யாரும் வெறுத்து ஒதுக்கிடவும் முடியாது. விரும்பி வழக்கில் நிற்கும்நிலையை எய்துவிக்கவும் முடியாது. வருகின்ற புதிய சொற்கள் வாழ்வு பெறுவதும், வீழ்வதும் அவற்றின் திறத்தைப் பொறுத்து அமைவது. வருகின்ற புதிய சொற்கள் உறுதியம் பொருளாழமும் உடையவையாய் இருப்பின் அவை மொழி பேசுவாரால் விரும்பி யேற்றுக்கொண்டு வாழ்வு பெறும். அவற்றில் பொருளாழமோ உறுதியோ இல்லாவிட்டால் விரும்பியேற்றுக் கொள்ளப்பட மாட்டா, வீழ்ந்துபடும்.

## தொல்காப்பியர் ஆணை:

தமிழ் மொழியிலும் நூற்றுண்டுகள் தோறும் சொற்கள் புதியனவாக வந்து சேர்ந்துள்ளன. அவற்றைப் பல காரணங்களின் அடிப்படையில் பிரித்துப்பாகுபாடு செய்யலாம் சமயம், அரசியல் செல்வாக்கு முதலிய பலகாரணங்கள் புதிய சொற்கள் பல கலத்தற்குக் கூறப்படும். இவ்வாறு புதிய சொற்கள்—காலந்தோறும் வந்து கலப்பனவற்றை நீக்கக் கூடாது என்று தொல்காப்பியரும் கூறியுள்ளார்.

'கடிசொல் இல்லைக் காலத்துப்படினே'
(எச்சவியல் 56)

''தோன்று தொட்டனவல்ல வென்று கடியப்படும் சொல் இல்லை; அவ்வக்காலத்துத் தோன்றி வழங்கப்படுமாயின்'' என்பர் சேனவரையர்.

இவவாறு கூறுவது எழுவகைவழுவைமதியுடன்ஒன்ரு காது; ஒரு பாதுகாவல் ஆனமையால், கிளவியாக்கத்திற் கூருது எச்சவியலிற் கூறப்பட்டது என்பர் சேனுவரையர்

மற்றுமோர் மரபு:

சேனுவரையர் இதற்த மேலும் தொடர்ந்து சிந்திக் கின்ருர், புதிய சொற்கள் வந்து தோன்றுவது தொடர்ந்து சிந்திக்கின்ருர். புதிய சொற்கள் வந்து தோன்துவது மொழி யுலகில் ஒரு பகுதி; இவ்வாறே பழைய சொற்கள் வழக்கு வீழ்வதும் மற்ருெரு பகுதி. அவற்றைப் பற்றி ஆசிரியர் கூருது போயினமை அவரைச் சிந்திக்கத்தூண்டுகிறது. "இனி நன்றென முடித்தலார் புதியன தோன்றினுற்போல பழையன கெடுவன உளவெனக் கோள்க, அவை அழான், புழான் முதலியனவும் எழுத்திற்புணர்ந்த சொற்கள். இக்காலத்து வழங்காதனவுமாம்'' (மேற்கண்ட நூற்பா — சேனுவரையர் உரை) தொல்காப்பியர் காலத்திற்குப் பின் வழக்கு வீழ்ந்த சொற்கள் பல, அவ்வாறே வத்து கலந்தனவும் பல. பிற் காலத்து வந்த நன்னூலார், இவ்விரண்டையுமே "பழையன கழிதலும் பதியன புததலும் வழுவல கால வகையினுனே'' என்ற நூற்பாவினுல் தழுவியுரைத்தார்.

வழக்கு வீழ்ந்தவை:

தொல்காப்பியர் கூறிய சுட்டுச்சினை நீடிய ஐகார வீற்றுப்பெயர் (எழுத்தொகை மரபு-17) அவர் காலத்து வழங்கியது. இளம்பூரணர் காலத்தில் வழக்கு வீழ்ந்துவிட்டது "என்ருன் ஆசிரியன், அக்காலத்து அவையுண்மையான்; இப் பொழுது அவற்றிற்கு உதாரணமில்லை'' (சொல்-எச்ச-56— இளம்பூரணர் உரை) என்று எழுதினர் அவ்வுரையாசிரியர். சேனுவரையர், சம்பு,சன்னை,சட்டி,சமழ்ப்பு என்பனவற்றைக் காட்டினர். 'சகரக்கிளவியும் அவற்ருேரற்றே அ ஐ ஔ வெனு மூன்றலங்கடையே'' (எழுத்-62) என்பதனுன், இவை தோன்று தோட்டு வந்தனவல்ல என்பதும் "அவை பிற் காலத்துத் தோன்றிய சொல்லேயாம்'' என்பதும் சேனுவரை

யர் உரையால் விளங்குகின்றன. ஆதலின் சகரமுதன் மொழி களாக உள்ளவை யெல்லாம் தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னே தோன்றியவை என்பது சேனாவரையர் கருத்தாதலை உணரலாம், இனி, சம்பு, சன்னை முதலிய சொற்கள் புதிய சொற்கள் அல்ல என்றும், அவை தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே வழங்கிவரும் பழைய சொற்களே ஆம் என்றும், 'சகரக் கிளவியும் அவற்றோரற்றே' என்னும் நூற்பா பிற் காலத்து இடைச் செருகலாகவோ, பாட வேறுபாடு உள்ள தாகவோ இருத்தல் வேண்டும் என்றும் கருதுவர் பண்டித கந்தசாமியார். (தொல்காப்பியம்— சொல்லதிகாரம்—சேனாவரையர் உரை —கழகப்பதிப்பு- (1966) பக். 240 அடிக்குறிப்பு) அதோனி, இதோனி, உதோனி என்ற மூன்று சொற்கள் மிக்க பழங்காலத்தில் வழங்கி வந்த சுட்டுச்சொற்கள். பேராசிரியர் உரையால் இவை தொல்காப்பியத்திற் சுட்டப்பட்டன வேனும், கடைச்சங்க காலத்தேயே வழக்கு வீழ்ந்துவிட்டன என்று அறியலாம், இவ்வாறே 'மன' என்னும் ஈற்றையுடைய வினைச்சொல் ஒன்று தொல்காப்பியரால் சுட்டப்பட்டது. 'மனவெனிறுதிச்சொல் அக்காலம் வழங்கியதாகலின்' என்ற நச்சினார்க்கினியர் உரைப்பகுதியால் அவர்காலத்துக்கு முன்னேயே வழக்கு வீழ்ந்து விட்டது. அவ்வினைச் சொல் என்று விளங்கிக் கொள்ளலாம். தான், பேன், கோன் என்பனவும் அக்காலத்து வழங்கிய சில இயற்பெயர்கள். நச்சினார்க்கினியர், 'பேன், கோன் என்பன முற்காலத்து வழக்கு' என்று எழுதுவதால், தொல்காப்பியர் காலத்து வழக்குப் பெற்றிருந்த அச் சொற்கள் நச்சினார்க்கினியர் காலத்திற்கு முன்பே வழக்கு வீழ்ந்துவிட்டன என்பது தெளிவு.

'ஊ' என்பது ஓரெழுத்து மொழி, அது தசையைக் குறிக்க வழங்கி வந்தது. தமிழில் அதனைக்கண்டு தொல்காப்பியனார் கூறினார். ஆனால் அவர்காலத்திற்குப் பின் அச்சொல் அவ்வாறு வழங்கவில்லை. இதனைநச்சினார்க்கினியார் நுட்பமாக உணர்ந்து தம் உரையில் எழுதியுள்ளார். 'ஊ' என்பது தசையை உணர்த்தி நின்ற வழக்கு, ஆசிரியர் நூல் செய்த காலத்துவழக்கு,. இவ்வாறு தொல்காப்பிய உரையாசிரியர்கள்

விளக்கியவற்றால் தொல்காப்பியர் காலத்தின் பின் பல சொற்கள் வழக்கு வீழ்ந்தன என்பது இனிது புலனாகக் காணலாம். (பார்க்க. மு. இராகவையங்கார், 'தமிழ் ஆராய்ச்சித் தொகுதி' — தொல்காப்பியத்துக்கண்ட பழைய வழக்குகள்)

எவற்றால் சகர முதன் மொழி பற்றிய வேறுபட்ட கருத்துக்கள் உண்டாயின என்றும், ஏன் பல வழக்கு வீழ்ந்தன என்றும் ஆராய்வதைவிட இவற்றால் விளங்கும் ஒரு நல்ல உண்மையைச் சுட்டுதல் பெரிதும் நலம்பயக்கும். காலந்தோறும் பழைய பல சொற்கள் வழக்கு வீழ்வதுடன் புதிய புதிய சொற்கள் ஒரு செம்மொழியில் தோன்றிக் கொண்டேயிருக்கும் என்பதே அது.

ஆளும் முறை:

புதிய சொற்கள் மொழியிற் கலக்கும் போது, அந்தந்த மொழியின் அடிப்படை இயல்பிற்கு மாறாக அவற்றை எடுத்தாளுதல் முறையாகாது. எடுத்துக்காட்டாக மகிழ்ச்சி என்ற சொல் இருக்கும் போதே 'சந்தோஷம்' என்ற சொல் இப்போது வழங்கிவருகின்றது. அதனைத்தமிழ்ப்படுத்தி, 'சந்தோசம்' என்றோ, 'சந்தோடம்', என்றோ ஆளலாமே தவிர. தமிழ் எழுத்திற்கு மாறுபட்ட 'ஷ' 'ஹ' போன்ற எழுத்து வடிவத்துடன் எடுத்தாளுதல் விருப்பத்தக்கது அன்று என்று உணர்தல் வேண்டும்.

"வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ எழுத்தொடு
புணர்ந்த சொல்லாகும்மே"

(தொல் – சொல் – எச்ச – 5)

புதியசொற்கள் தமிழிற் கலக்கும் போது அவை பெரும்பாலும் தமிழ்க்கோலங்கொண்டு கலத்தலே அறிஞர்களால் விரும்பத்தக்கதாகும். இக்கால அறிவியல் வளர்ச்சியும் முன்னேற்றமும் பல அறிவியற் சொற்கள் தமிழிற் கலக்கக் காரணமாயுள்ளன. அவற்றைப் படைக்கும் கலைச்சொல்லாக்கம் வல்லோர் இவற்றை மொழிப்படுத்துங்கால் மிக்க விழிப்புடன் இருத்தல்

வேண்டும். அவ்வாறு விழிப்புடன் இருந்தால்தான் மொழி மரபு காப்பாற்றப்படும். ஒரு வகையான பாதுகாவலாகவும் அது அமையும்.

**தேவைக்குக் கொள்ளல்:**

புதிய சொற்களைப் படைக்க வேண்டிய சூழ்நிலையும், கலக்க வேண்டிய சூழ்நிலையும் இருந்தால் ஒழிய அவற்றைப் படைக்கவோ, கலக்கவோ அறிஞர் முனைந்திடலாகாது. பழைய சொற்கள் வாழ்வு பெற்றிருக்கும் போதே அவற்றிற்கு ஈட்டுச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அந்த புதிய சொற்களைக் கையாள வேண்டிய இடர்ப்பாடு இல்லை. தேவை ஏற்படும்போது, புதிய சொற்களைத் தேர்ந்தெடுப்போம்; பயன்படுத்துவோம். அப்போதுதான் புதுமைக்கு மதிப்பு; பயனும் அப்போதுதான் விளையும். இல்லையேல் புதிய சொற்களுக்கு மதிப்பு இல்லை; பயனும் இல்லை.

—◇—


பரீதா ஸ்டோர்ஸ்,

ஜெனரல் மெர்ச்சண்டஸ்,

247, பெரிய கடைவீதி, திண்டுக்கல்.

எங்களிடம் எல்லாவிதமான கண்ணாடி சாமான்களும், சைக்கிள், பெட்ரோ மாக்ஸ், ஸ்டவ், கிராமபோன், டார்ச் லைட் ஸ்பேர் பார்ட்ஸ்கள்யாவும் மொத்த மாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

உ

சிவமயம்

# சோழர் காலத்துத் தேவாரப்பணி.

(கல்வெட்டில் கண்டவை)

வித்துவான். திரு. மு. கோவிந்தராசன்,
க. செ. கல்லூரி, மேலைச்சிவபுரி.

"சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளும் தொழுவோமே"

தேவாரம் என்ற சொல்லை முற்காலக் கல்வெட்டுக்கள் 'திருப்பதிகம்' என்றும், பிற்காலக் கல்வெட்டுக்கள் 'திருமுறை' என்றும் குறிப்பிடுகின்றன. 10-ம் நூற்றுண்டு முதல் 13-ம் நூற்றுண்டுவரை தமிழகத்தில் செங்கோல் செலுத்திய சோழமன்னர்கள் தங்கள் ஆட்சியை எவ்வளவு ஊக்கமும் எழுச்சியும் கொண்டு பரப்பினர்களோ அதினினும் மேலாகச் சைவ சமயத்தையும் வளர்த்து பரப்பினர்கள் என்பது எள்ளளவும் மிகையாகாது. அவர்கள் மேற்கொண்ட சைவசமய வளர்ச்சிக்கான பணிகள் பலவகைப்படும். அவற்றுள் மிக மிகச் சிறந்தது மூவர் திருப்பதிகங்களை விண்ணப்பித்து வழிபடும் பணியைத் தமிழகமெங்கும் எல்லாச் சோழர்களும் ஊக்கத்துடனும், உணர்வுடனும் பரப்பியது ஆகும். திருப்பதிகங்களைத் திருக்கோயில்களில் விண்ணப்பிக்க விளைநிலம், நெல் முதலியவற்றைத் தானமாக சோழமன்னர்களும், செல்வர்களும் வழங்கியுள்ளமையைப் பின்வரும் கல்வெட்டுச் செய்திகள் பலவற்ருல் அறியலாம்.

(1) கி. பி. 1073-ல் அதிராசேந்திர சோழர் காலத்தில் கும்பகோணம், குகூர் ஆம்ரவனேசுவர கோயிலில் அதிராசேந்திர சோழதேவனது உடல்நோய் நீங்கி நலம்

பெறுவதற்காகத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்பவர் களுக்கு ஊதியத்திற்காக விளைநிலம் தானமாக வழங்கப் பட்ட செய்தியைக் கல்வெட்டுக் கூறுகிறது.

(2) கி. பி. 1075-ல் முதலாம் குலோத்துங்க சோழர் காலத்தில் தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் கோயிலில் மூவர் திருப்பதிங்களை விண்ணப்பிக்க முதற்குலோத்துங்க சோழர் உரிமையை வழங்கினார் என்று கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

(3) கி. பி. 1243-ல் மூன்றும் இராசராச சோழர் காலத்தில் தஞ்சை மாவட்டம் திருக்காறவாயிலின் திருக்கைக்கொட்டிலில் திருமுறை விண்ணப்பிக்கும் ஓதுவார்களுக்கு உணவு அளிக்கும் செலவிற்காக விளை நிலம் தானமாக விடப்பட்ட செய்தியைக் கல்வெட்டில் காணலாம்.

கி. பி. 1207-ல் மூன்றும் குலோத்துங்க சோழர் காலத்தில் மாயூரம் வட்டம் குறுக்கை வீரட்டானேசுவரர் திருக்கோயிலில் திருநாவுக்கரையதேவரது திருத் தாண்டகம் விண்ணப்பிக்க, தனிமுறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தாகக் கல்வெட்டு கூறுகிறது. இதனால் திருத் தாண்டகத்தின் சிறப்பும், தாண்டகவேந்தர் சிறப்பும் நன்கு உணரப் பட்டிருந்தமை நினைந்து போற்றுதற்குரியதாகும்.

(5) திரு வெண்ணைநல்லூரில் திருக்கோயில் திருவிழா நாட்களில் திரு வீதிவுலாவின் போது தேவாரம் விண்ணப்பம் செய்யும் பழக்கம் இருந்தது என்று கல்வெட்டால் தெரிகிறது.

மேற்கண்டவாறு சோழ நாட்டில் நிகழ்ந்தன போல பாண்டிய மன்னர்களும், பாண்டிய நாட்டிலும் திருப்பதிகங்களை விண்ணப்பிக்கும்படி ஊக்கம் அளித்துள்ளனர். பின்வரும் செய்திகளால் அவை அறிய வரும்.

(6) கி. பி. 1225-ல் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் திருநெல்வேலி கல்லிடைக்குறிச்சி நாகேசுவரமுடையார் கோவிலில் தேவாரத்திருமுறை விண்ணப்பம் செய்ய தானம் வழங்கிய செய்தியைக் கல்வெட்டில் காணலாம்.

(7) கி. பி. 1285-ல் சடையவர்மன் சுந்திரபாண்டியன் காலத்தில் தஞ்சை மாவட்டம் திருவீழிமிழலை வீழிநாத சுவாமி கோவிலில் நரசிங்கத்தேவன் கட்டினத் திருக்கைக் கொட்டிலில் திருமுறை விண்ணப்பம் செய்ய விளைநிலம் தானமாக வழங்கிய செய்தியைக் கல்வெட்டில் காணலாம்.

(8) குலசேகர பாண்டியன் காலத்தில் இராமநாதபுரம் மாவட்டம் திருத்தளி சுரமுடையார் திருக்கோயிலில் திருத்தனி நாயனூர் ஆலயத்தில் திருப்பதிகம் பாட ஒருவரை நியமித்த செய்தியைக் கல்வெட்டு கூறுகிறது.

மேற்காட்டியவை சுருக்கமாகக் கூறப்பட்டவையேயாகும்: விளக்கமான இரண்டு கல்வெட்டுச் செய்திகளை மேலே தருகின்றோம்,

(9) திருக்கோவில்களில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்யும் இயக்கத்தைச் சிறப்பாக நிகழ்த்திய மன்னன் முதல் இராசராச மன்னனுவான். அதற்கு அவன் தஞ்சை கோவில் ஏற்படுத்தியிருந்த "திருப்பதியம்" என்ற கல்வெட்டுச் செய்திகள் ஒன்றே தெற்றன விளக்கும் சான்ருக விளங்குவது. அக் கல்வெட்டுப் பகுதியைக் கீழே தருகின்றோம்.

கி. பி. 1014-ல் கோ. இராசகேசரிவன்மரான ஸ்ரீ ராஜராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீ ராஜராஜச்சுர முடையார்க்குத் பதிகம் விண்ணப்பம் செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜ

தேவர் கொடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர்களிலே நிலையாய் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவனும். உடுக்கை வாசிப்பான் ஒருவனுமாக ஐம்பதின்மருக்குப் பேரால் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் இராசகேசரி யோடொக்கும் ஆட வல்லான் என்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும். இவர்களிலே செத்தார்க்கும் அநுதேசம் போனார்க்கும் தலைமாறு அவ்வவர்க்கு அடுத்த முறை கூடவார் தாம் தாம் யோக்கியராய் இருப்பாரைத் ஆளிட்டுத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்வித்து அந்நெல்லுப் பெறவும், அவ்வவர்க்கு அடுத்த முறை கடவாரின்றி ஒளியில் அந்நியாயத்தாரே யோக்கியராய் இருப்பாரைத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய இட்டு இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப்பெறவும். ஆக இப்படி உடையார் ஸ்ரீ ராஜராஜதேவர் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது.

ஐம்பதின்மர் பெயர்கள் முழுமையும் குறிக்காமல் இருவர் பெயர்மட்டும் ஈண்டுத் தருகின்றேன்.

(1) பாலன் திருவாஞ்சியத்தடிகளான இராசராசப் பிச்சனுன சதாசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி.

(2) திருவெண்ணுவல் செம்பொற் ஜோதியான தட்சன மேருவிடங்கப்பிச்சனுன ஞானசிவனுக்கு நிசதம் நெல்லு முக்குறுணி.

இங்கு எடுத்துக்காட்டிய பெயர்களைப் போலவே ஏனைய நாற்பத்தெட்டு பேர்களும் கல்வெட்டுப்பகுதியில் காணப்படுகின்றன. திருப்பதிகம் விண்ணப்பிப்பவர்களின் இப்பெயர்களிருந்து மூன்று சிறப்புக்களை அவர்கள் பெற்றிருந்தனர் என்பது விளங்குகின்றது.

ஒன்று சிவபெருமான் பெயரையோ நாயன்மார்கள் பெயரையோ இயற் பெயராகக் கொண்டிருந்தமை.

இரண்டு: சோழ மன்னனால் அளிக்கப்பெற்ற சிறப்புப் பெயர்களைக் கொண்டிருந்தமை.

மூன்று: சதா சிவன், ஞான சிவன் என்பன போன்ற விசேட தீட்சை பெற்றமையைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டிருந்தமை மேலும் இக் கல்வெட்டிலுள்ள நயங்களைப் பயின்று உணர்க.

இதனினும் இரண்டாம் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுச் செய்திகள் வியக்கவும், போற்றவும் உரியதாக உள்ளன. அதனைக் கீழே தருகின்றோம்.

(10) கி.பி. 1125-ல் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு இரண்டாவது இராசராச வளநாட்டு பனையூர் நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானம் திருவாமாத்தூர் ஆளுடைய அழகிய கோவிலில் திருப்பதிகம் பாடிவரும் குருடர்களைத் தவிர நம் தேவாரத்துத் திருப்பதிகம் பாடும் பொய்யாத தேவர் கணநாதனான இராசராசப் பிச்சனுக்கும், இவன் வர்க்கத்தார்க்கும் இக்கோவில் திருப்பதிகக் காணியான இவ்வூர் முதல் காணியாகக்கொடுத்தோம் இவன் வர்க்கத்தாரையும் மெய்இட்டுத் திருப்பதிகம் பாடு வித்துக்கொண்டு குருடர்களுக்கு விட்டு வரும் நிவந்தப்படி இவர்களுக்கும் விட்டுக்கல் வெட்டுக என்று தில்வாய் மொழிந்து திருமுகம் பிரசாதம் செய்து வந்தமையின் இக்குருடர் முன் பிலாண்டு அநுபவத்தின் படிப் பாடிவரும் குருடர்பேர் பதினறுவரும் இவர்களுக்கும் கண் காட்டுவார் இருவருமாகப் பதினெண்மருக்குப் பேரால் நெல்லுப் பதக்காக நாளொன்று முக்கலமாக நாள் முந்நூற்றறுபதுக்கு நெல் ஆயிரத்து தெண் கலமும் புடவை (வேட்டி) முதலுக்குப் பேரால் காசு ஒன்றாகக் காசு பதினெட்டுக்குக் காசு ஒன்றுக்கு நெல்லு ஆயிரத்து நானூற்று நாற்பதின் கலத்துக்கு வேலி ஒன்றுக்கு நெல்லு நூற்றிருபதின் கலமாக இத்தேவர் தேவதானம் கடுவனூரில் விட்ட நிலம் பன்னிரு வேலியும் காணியாக இவ்வூர் நிலம் நீங்கலாகாதபடியேகைக்கொண் இத்திருப்பதிகம் பாடுவார்

பேர் பதினெண்மரும் மூன்று சந்தியும் வந்து திருப்பதிகம் விண்ணப்பம் செய்து முன்பிலாண்டுகள் இக் குருடர்கள் நிலம் கைக்கொண்டு செய்து வரும்படியே இத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்வாறும் செய்து வரக்கடவர்களாக. இப் பொய்யாத சேவடியார் கணநாதனான இராசராசப் பிச்சனுக்கும் இவன் வர்க்கத்தார்க்கும் காணியாகக் கொடுத்தோம் என்று கல்வெட்டுக் கூறுகின்றது.

இதனால் திருவாமாத்தூர் கோவிலில் திருப்பதிகம் ஓதிய சிறப்புடன் நிகழ்ந்த சமூகத் தொண்டும் போற்றுதற்குரியது. நாட்டில் வாழ்விழந்த குருடர்களை அழைத்துத் திருப்பதிகம் பாடும் அளவுக்குச் செவிவழியாக அவர்களுக்கு ஓதுவித்துப் பிறகு அவர்களையே திருக்கோவில் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய நியமித்து நெல், உடை முதலியன அளிக்க நிலம் காணியாகக் கொடுத்தது என்றென்றும் எண்ணி மகிழ்தற்குரிய தாகும். பதினாறு குருடர்களுக்குக் கண் காட்டுவார் இருவரை நியமித்து அவர்களுக்கும் நெல்லும் உடையும் அளித்ததும் போற்றற்குரிய சமுதாயப்பணியாகும். இச் செய்தியால் சோழ மன்னர்கள் சைவப்பணி வேறு, சமுதாயப்பணி வேறு என எண்ணாமல் ஒன்றாகவே கருதி தம் ஆட்சியைச் சிறப்புறச் செய்தனர் என நன்கு தெளியலாம்.



# புறப்பாட்டில் புதுமை ஒளி

புலவர். திரு. இரா. செல்வக்கணபதி
தமிழ்ப்பேராசிரியர், ஆதீனப்பல்கலைக் கல்லூரி
தருமபுரம்.

திருவள்ளுவர்க்கு ஒப்புக்சொல்லவேறுயார் இருக்கிறார்கள்? இனங்காணமாட்டாத மனிதமன உணர்வுகள்; புரிந்துகொள்ள முடியாத சமுதாய எண்ணங்கள்; ஆழங்காண இயலா வாழ்வியல் தத்துவங்கள் இவற்றை அவர் போலே யாராலே விளக்க முடிந்தது? சுருங்கச் சொல்லுதல் அழகு என்பது மட்டுமில்லை; அது தேவையுங்கூட என்ற கருத்தை வள்ளுவரைப்போல் சொல்லாமல் சொன்னவர் யார்? சில கருத்துக்களை, சில ஆழமான உண்மைகளை — குறிப்பாக்கிப்போகும் அவர்போக்கில், எல்லார்க்கும் எல்லாவற்றையும் விரித்து வைக்க வேண்டுமென்பதில்லை என்ற ஆழ் நெஞ்சினை இனங்கண்டு கொள்ளமுடிகிறது. எனவேதான், தண்டமிழில் அது இலக்கியமாயினும், இலக்கணமெனப் போற்றிப் பொதிந்து கொள்ளப்பட்டது. வள்ளுவத்தின் ஆழமான கருத்துக்கள் சில, சங்க இலக்கிய கடலிலே முத்தென முகிழ்த்துத் தோன்றிச் சுவையூட்டக்காண்கிறோம்!

பொறுப்புணர்ச்சியற்று — சமுதாயத்தில் மகிழ்ந்து சிறகடித்துப் பறக்கும் தனிமனிதனைப் பிடித்து, இல்வாழ்க்கை கட்டி சமுதாய மனிதனாக்கி மகிழும் வள்ளுவர், இல்லறக்கடமைகளை வரையறுத்துத்தருகிறார். இல்வாழ்க்கை சுவைதான்; அது தரும் இன்பத்திற்கீடேது! உண்மைதான்! ஆனால், எப்போது? என்ற வினாவை முன்னிறுத்திக்கொண்டு. 'நல்ல துணை அமையும்போது' என வாழ்க்கைத்துணை நலம் பேசுகிறார். எத்தனையோ இலக்கணங்கள் - துணையின் தன்மையும் — பண்பும் — பன்னிப் பன்னிப் பேசுகிறார்.

ஏதோ ஒரு பெருமிதம் - இனங்காணாத ஒரு கருத்து ஒளி, வினாத்தொடுக்கிறார். 'இல்லதென் இல்லவள் மாண்பானால்?'' அவர் வினாவின் உட்பொருள் தெரிகிறது! துணைவி மாட்சிமை மிக்கவளானால் வாழ்க்கையிலே மனிதனுக்கு இல்லாததென்ன இருக்கிறது? எடுத்துக்கொண்ட கருத்தினை இமயம் போல் கூறும் வள்ளுவர் வழக்கம் என்று இதனைத் தள்ளிவிடுவதா? நாம் வியக்கிறோம்! மீண்டும் முன்னே விளைவகையில் மனைச்சிறப்புரைத்தவர், அடுத்தும் ஒரு வினாத் தொடுத்து அதனையே வியக்கிறார். 'மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனை மாட்சித் தாயினும் என்' அதே கருத்து மீண்டும் வேறு வகையில் வலியுறுத்தப்படுகிறது. 'துணைவி சரியாக அமைய வில்லை என்றால்?', என்ற வினாவிற்குச் சீறிக்கொண்டு விடை வருகிறது நாம் நிமிர்ந்து கொள்ளுகிறோம். 'மனை மாட்சியானால் என்ன இல்லை? அவள் மாட்சியற்றால் என்ன இருக்கிறது? 'இது தானே வள்ளுவர் சித்திரம். சிந்தனை சுழல்கிறது. பல்வேறு கூறுபாடுகளால்; எண்ணங்களால், மனிதர்களால் உருவாக்கப்படுவது தனி மனித வாழ்க்கை என்று நம்பியிருக்கிறோம். வள்ளுவரோ இல்லை; இல்லை மனைவியால்தான் வரையறுக்கப்படுகிறது என்கிறார்; எண்ணங்கள் வள்ளுவத்தை புரிந்துகொள்ள எங்கெங்கோ பறக்கிறது!

ஈன்றெடுத்த, மக்களது போக்கில் வெறுப்புற்று வடக்கிருந்து உயிர்துறக்கத் துணிந்த கோப்பெருஞ்சோழனை, கண்ணால் காணாது கருத்தால் கண்டிருந்த பாண்டிய நாட்டுத் தண்டமிழ்ச்சான்றோர் பிசிராந்தையார் அவனைக் காண வருகிறார். "வருவன் என்ற கோனது பெருமைரும் –அது பழுதின்றி வந்தவன் அறிவும்'' வியந்து நின்றனர் ஒரு சாரார். வேறு சில நரை மூதாளர்க்கு வியப்பு வேறு வகையாயிற்று. நம் இளமை தொட்டே இச்சான்றோர் பெருமை அறிவோமே! நம்மினும் ஆண்டில் முதிர்ந்து நரை திரை மூப்பொடு தண்டூன்றித் தளர் நடையினராய் இருப்பர் என்றெல்லாம் எண்ணிக்கிடந்தோமே!

இஃதென்ன புதுமை! இளைய தோற்றம்–இடை எழுந்த நரை தோன்றாக் கரியகுஞ்சி! மிடுக்கு நடை! சால்புத் திருமுகம்!

வியப்பு வினாவாகிறது; மன்னனுக்கு உற்ற துயரும் மறந்தனராய், விளங்கி எழுந்த வியப்பில், 'மூப்பின் வருவது நரை' என்ற முடிந்த எண்ணம் முகிழ்த்தவராய், வயது கடந்தும் நரை தோன்றாத புதுமைக்கு வினாத் தொடுக்கின்றனர்.

அவர்கள் நினைத்திருக்கிறார்கள் நரை முதிர்விற்கு அடையாள மென்று.

பிசிராந்தையார், ஈன்றெடுத்த மக்களை தந்த துயரத்தால் இனங்காணமாட்டா வெறுப்புற்று, உள்ளம் வெதும்பிக்கிடந்த கோப்பெருஞ்சோழனை உள்ளத்தில் நினைக்கிறார். எண்ணங்கள் கவிதையாக மலர்கின்றன.

சிலகருத்துக்கள்; அவை எழுந்த சூழ்நிலையை அறிந்து கொள்ள மாட்டாமையால் விளங்காது போவதுண்டு. அறிவு நலமிக்க சான்றோர்கள் தம்பாடல் அல்லது, கவிதை எழுதற்குரிய சூழலை முன்னிறுத்திக்கொண்டு தொடங்குவதைச் சங்க கால மரபென்று கருதமுடியும். அவற்றுள், வினாவை முன்னிறுத்திக்கொண்டு விடை கூறுவான்போலே கவிதை தருவதும் ஓர் மரபு. 'வாய்மை எனப்படுவது யாதெனின்' என வினாவை முன்னிறுத்தும் திருவள்ளுவரைப்போலே, புறப்பாட்டுக்காரர்களும் இந்நெறி மேற்கொண்டிருந்தனர். வினாவொடு, வினா எழுந்த சூழ்நிலையையும் ஒருசேரவிரிக்கும் பாங்கு புறத்திற்கே தனிச்சிறப்பு. 'சிற்றில் நற்றூண்பற்றி, நின் மகன்யாண்டுளனோ என வினவுதியாயின்' என வினாவெடுத்து விடை கூறும் மூதாட்டியை அங்கே சந்திக்கிறோம்.

கேட்ட வினாவிற்கு விடை கூற விரும்பிய பிசிராந்தையார் வினாவை முன்னிறுத்திக் கொண்டு விடைபேச வருகிறார். அது நெறி என்பது மட்டும்மல்ல; அங்ஙனம் வினா முன்னிறுத்தப்பட வில்லை என்றால், அப்பாடல் கவிதைக்குரிய முழுமை நயமே பெறாது போய்விடுமென்பது தெளிவாகிறது. இஃதோர் அருமைப்பாடு.

தெரிந்த கவிதைதான். கருத்துக்களிலும் ஒன்றும் குழப்பம் கிடையாது. ஆண்டு முதிர்ந்தும் நரை தோன்றாமைக்குக் காரணங்களைக் கூறுவதுபோலக் கவிதை தெரிகிறது. அந்தக் காரணங்களை ஒன்றுபடுத்திக் கொள்ளாது, வேறு பிரித்து நிறுத்தி, பொதுக்காரணங்களைக் விளக்கி, சிறப்புக்காரணத்தைக் கண்டு, அது வள்ளுவத்தின் ஆணித்தரமான கருத்திற்கு வலியூட்டுவதை இங்கே காண வருகிறோம்.

'யாண்டு பலவாக' என்று தொடங்கும் புகழ்மிக்க புறப்பட்டு நெஞ்சத்தில் விரிகிறது.

தண்டமிழ்ச் சான்றோர் பிசிராந்தையார் நரை தோன்றாமைக்குக் கவலையின்மையே காரணம் என விளக்க வருகிறார் வருபவர், ஒரு வாழும் தனிமனிதனுக்கு எவ்வெவ் வகையில் கவலை தோன்றக் கூடுமென ஆராய்கிறார். அவ்வாய்வின் முடிவில் ஐந்து காரணங்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அக வாழ்வும், புற வாழ்வுமாய சமுதாயத்தில் மனிதர்களை வாழவும் தாழவும் செய்யும் காரணங்கள் கவிதையில் ஒருசேர விளக்கப்படுகின்றன. நரை தோன்றாமைக்கு அஃதாவது கவலை இன்மைக்கு அவர் கூறும் காரணங்களை இப்படி வரிசைப்படுத்தலாம்,

1. மாட்சிமை மிக்க மனைவி
2. அறிவு நிரம்பிய புதல்வர்கள்
3. குறிப்பறிந்தொழுகும் ஏவலாளர்
4. செங்கோல் வேந்தன்
5. நிரம்பிய ஒழுக்கம் வல்ல சான்றோர்கள்

இவர்கள் யாவரும் என் தனிவாழ்வில் எனக்குக் கிடைக் கப் பெற்றனர். எனவே, கவலைக்குரிய கூறுகள் ஏதுமில்லை அதனுல் நரை தோன்ருமை பெற்றேன் என்கிறது பிசிராந்தையார் கவிதை.

பிசிராந்தையார் பாடல் எடுத்துக்காட்டும் ஐந்து காரணங்களில் எது வலிமை பெற்று நிற்கிறது என்பதனைப் புதிய கோணத்தில் சிந்தித்துப் பார்ப்பது சுவை பயக்க வல்லது. அவர் விளக்கும் செய்திகளை முதலிலிருந்து தொடங்குவதை விடுத்து இறுதியிலிருந்து எடுத்துக் கொண்டு பார்ப்பது வேண்டத்தக்கதாகிறது.

பாண்டி நாட்டிலிருந்து சோழநாட்டுக்குப் பிசிராந்தையார் ஒருவர்தான் வந்தனர் என்று கருதுவதற்கில்லை. எத்தனையோ முதியவர்கள் பாண்டி நாட்டிலிருந்தும், பிசிராந்தையார் வாழ்ந்த ஊரிலிருந்தும் பலகாலும் சோழநாடு வந்திருத்தல் கூடுமென்பதிலே மறுப்பிருப்பதற் கில்லை. அப்படி வந்த முதியவர்கள் நரை, திரை தோன்றப் பெற்றே இலங்கியிருத்தல் வேண்டுமென்பது, பிசிராந்தை யாரை வியந்தமை ஒன்ருலேயே பெறப்படுகிறது,

பிசிராந்தையார் ஐந்தாவதாகச் சொல்லும் காரணம் ''ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்சான்ரேர்-பலர்யான் வாழு மூரே'' என்பது. என் ஊரில் கற்பன கற்றுப் புலனடக்கம் வல்ல ஒழுக்கமிகு சான்ரேர் பலர் வாழ் கின்றனர் என்பது குறிப்பாகிறது. இந்தக் குறிப்பினை நோக்குகின்ரேம். புதிய எண்ணங்கள் பிறக்கின்றன. பிசிராந்தையார் வாழ்ந்த ஊர் எதுவாயினும், 'பலர்வாழும் ஊர்' என்ற குறிப்பால், அவர் மட்டும்மல்லாது நூற்றுக் கணக்கானவர் அங்கே வாழ்ந்தனர்என்பது பெறப்படுகிறது. பிசிராந்தையாரைப் பொறுத்தவரை நரை தோன்ருமைக்கு இதுவும் ஒரு காரணமென்ருலும் இதனைச் சிறப்பாகக் கொள்ளுதற்கில்லை. காரணம், சான்ரேர் வாழ்வதே நரை தோன்ருமைக்குக் காரணமென்ருல் பிசிராந்தையார்

ஊரில் வாழ்ந்தார் யாவரும் ஒப்ப முதுமையிலும் நரை தோன்ருது இளமைச் செவ்விபெற்று இலங்கிருத்தல் வேண்டும். பிறிதொன்றும் உண்டு; சான்ருேர் சூழ வாழ்தல் வேண்டுமென்ருல் ஒருவன் தன் இருப்பிடத்தை அதற்குத்தக மாற்றி அமைத்துக்கொள்ளவும் கூடும். எனவே பிசிராந்தையார் கூறிய ஐந்தாவது காரணம் வலிமை பெற்றிருக்கவில்லை.

'வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்' என்ற நான்காவது காரணம் 'எம் மன்னன் செங்கோல் நெறியினன்' என்ற எண்ண எழுச்சியை விளக்க வருகிறது. இதிலே சிறப்பிற்கு இடமே இல்லை. காரணம், செங்கோல் வேந்தன் நாட்டில் பிசிராந்தையார் மட்டுமில்லை; ஆயிரக் கணக்கானவர் வாழ்ந்திருந்தனர், அவர்களெல்லாம் வியப்புக்குரியராக இல்லை. எனவே மன்னன் செங்கோல் ஆட்சி என் நரை தோன்ருமைக்குக் காரணம் என்ற பிசிராந்தையார் எண்ணம் பொதுத்தன்மையுடையதாக நின்று வலிமையிழக்கிறது.

ஒரு நிகழ்ச்சி, அல்லது செயலுக்குக் காரணங்கள் பலபோல தோன்றக்கூடும். ஆனல், உண்மைக்காரணம் ஒன்ருக இருப்பதை நுண்ணறிவின் ஆயவல்லார் கண்டு தெளிவர் இந்த எண்ண வளத்தின்மேல் நின்று மூன்ருவது காரணத்தை நினைகிருேம். அதுவும் வளமை குன்றிவிடுகிறது.

'யான் கண்டனையர் என்னிளையரும்' எனப் பேசி, குறிப்பறிந்தொழுகும் ஏவலாளர் வாய்க்கப்பெறுவதும் ஒரு காரணம் எனக் காட்ட முயலும் முயற்சியை வியக்கிருேம். குறிப்பறிந்தொழுகவல்ல 'இளையர்' கிடைக்கப்பெறுவது அருமையாயினும், அது கிடைக்க இயலாத தொன்றன்று. தன் எண்ணவழி ஒழுகா ஏவலரை விரைந்து மாற்றி, தக்காரொருவரை அமைத்துக் கொள்வதும் இயலாத தொன்றன்று. அத்தொடும் கூட பிசிராந்தையார் சுட்டும்

ஏவலாளர் பலர். அவருள் சிலரை வேறு சிலரும் ஏவலாள ராகப் பெற்றிருக்கவும்—அல்லது பெற்றுக்கொள்ளவும் இயன் றிருக்கும். எனவே இவ்வகையிலும் நரை தோன்ருமைக் குப் பிசிராந்தையார் சுட்டும் காரணம் சிறப்புடையதாக அமையாது துணைக் காரணங்களுள் ஒன்ருகவே அமை கிறது.

இதற்கு மேலே சற்று நிதானித்து எண்ணுகிரேம், எஞ்சிய இரண்டு காரணங்களை எண்ணிக்கைக்காக இரண்டு என்று எடுத்துக்கொண்டாலும், ஆசிரியர் அவற்றைக் கூறும் முறை வேறுபடுத்திப் பார்க்கத்தக்கதாக இல்லை, கடைசி மூன்றையும் தனித் தனிக்கூறுவர் இவற்றை ஒன்றுபடுத்திக் காட்டுகிருர் அவை அங்ஙனம் காட்டத்தக் கனவென்பதால்.

'மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்' எனப்பேசினும் இருகாரணங்களுக்குள்ளும் ஓர் இணைப் பைக் குறிப்பாக்குகிருர். 'ஒடு' என்ற மூன்ரும் வேற்றுமை உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் வரக்காண்கிரேம். 'ஒடு என உருபு உயர்பின் வழித்தே' என்ற தொல்காப்பிய மும் நினைவுக்குவருகிறது. ஆசிரியனெடு மாணுக்கன் வந்தான் என்பது மரபு. ஆசிரியனெடு இணைத்தமை மாணுக்கன் என்ற சிறப்பினை இளைஞன் பெறக்காரண மாயிற்று எனக்காணமுடிகிறது. 'தாயைப் போலப்பிள்ளை' என்ற பழமொழியை நினைவு கூர்கிரேம். பிசிராந்தையார் மக்கள் அறிவு நிரம்பப்பெற்றனர் என்ருலும் அது தாய்வழி வந்த சிறப்பெனக் குறிக்கப்படுவதுதெரிகிறது. அத்தொடு மக்களும் என்பதன்கண் வந்த இறந்தது தழீஇய எச்ச உம்மை மனைவியும் குணநலன்களால் நிரம்பப்பெற்றனள் எனத் தழுவப்பட்டு மனைவிக்குச் சிறப்பேற்றுதலை விளக்கி நிற்கிறது. வேந்தனெடு வேடனும் வந்தான் என்பதின் உம்மைபோல இந்தத் தொடரைப் பொருள் கொண்டு மகிழ முடிகிறது.

எனவே, மக்கள் அறிவு நிரம்பப் பெற்றதற்கும், அவர்தம் செயற்பாடுகட்கும் தாய் நலம் இன்றியமையாதது என்பதும் உம்மையால் வலியுறுத்த வருவது சிறப்பாக மக்கள் நலமன்று என்பதும் குறிப்பின் விளக்கப்படுகுறது,

எனவே, சான்றேரும், மன்னனும், இளையரும், புதல் வரும் என்னும் நால்வரது நலன்களும் ஒருவனது செம்மை சான்ற நிறைந்த வாழ்விற்குக் காரணமென்றாலும் இவற்றுள் மூன்று பலர்க்கும் எளிதில் அமைவதால் பொதுத்தன்மை யுடையதாய் நின்று வலிமை இழந்துவிடுவதைக்காண்கிறோம்.

எஞ்சிக் கிடக்கும் ஒரே காரணம், மாண்ட என் மனைவி: 'நிரம்பிய மனைவி' யாய் நின்று என் அகவாழ்வில் ஏற்றிய ஒளியே என் மகிழ்விற்குப், முதுமை தோன்றா என் எழிலுக் கும் காரணம் என்பதனைப் பிசிராந்தையார் சிறப்பிக்கும் அருமைப் பாட்டில் இருக்கிறது.

மக்கட் சிறப்பும் மனைவியால் ஆக்கமுறுவது என்பத னாலும் ஊழ்வகையால் அமைந்து, பின்னே நினைந்தாலும் மாற்றிக்கொள்ள முடியா மரபு வழிபட்ட சமுதாய அமைப் பாலும், எத்துணைப் புறக்காரணங்கள் அமைந்தன என்றாலும் அக வாழ்வில் ஏற்படும் ஊனம் மனிதனைப் பெரிதும் தாக்கித்தகர்த்து விடுமென்பதனாலும், அறிவாற்றல் களால் மிக்கு, சமுதாய நடைமுறைகளை இனங்கண்டு, அதற்குத்தகத் தம்மைமாற்றி அமைத்துக்கொள்ளும் மன வலிபடைத்த வல்லாளர்கட்கும் அகவாழ்வின் தளர்வு ஊக்கஞ்சிதைத்துவிடு மென்பதனாலும் பிசிராந்தையாரால் குறிப்பாக விளக்கப்படுவது மனைச்சிறப்பே என்பதனை இச் சிறந்த புறப்பாட்டின் உயிர் நாடியாகக் கண்டு மகிழ்வதிலே என்ன தவறிருக்க முடியும்?

தாரமும்–குருவும் தலைவிதி வசத்தால்' என்ற இத்தமிழ் மண்ணின் பழமொழி இங்கே சிந்தனையைத் தொடுகிறது.

சில வாழ்வியல் உண்மைகளை வெளிப்படையாகச் சொல்லி விடுவது விரும்பத்தக்கதல்ல என்று கருதிய கருத்தால், வேறு சில காரணங்களையும் உடன் இணைத்துக் கொண்டு ஆசிரியர் பிசிராந்தையார் இப்பாடலை விளக்கினும் அதன் உயிர்நாடிச் சிறப்பு மனைச்சிறப்பிலேயே தேங்கி நிற்கிறது என்பது புலப்படாது போதற்கில்லை.

இங்கே திருவள்ளுவரை மீண்டும் நினைக்கின்றோம். மனைமாட்சி இல்லாள் கண் இல்லாயின் வாழ்க்கை எனை மாட்சித்தாயினும் ஏன்? என்ற குறளின் பொருள் இங்கே மறைமுகமாக விரித்துரைக்கப்படுகிறது. அதன் முடிவில் 'இல்லதென் இல்லவள் மாண்பானால்' என்ற தொடரின் உட்பொருள் விளங்கித்தோன்ற, பிசிராந்தையார்பாடலில் மனைச்சிறப்பின் பெருமை பேணப்படுவதும், அது சிறவாக்கால் 'உள்ளதென் இல்லவள் மாணாக்கடை' என்றதனால் எஞ்சிய புறக்காரணங்கள் யாவும் மனைச்சிறப்பில் வழி பயன்படா என்பதும் வலியுறுத்தப்படுவது சிந்தனைக்கு விருந்தாகிச் சிறக்கிறது.

நன்றி—ஞானசம்பந்தம்

---

உ

கீழ்க்கண்டவர்கள் பெயர்களை அவ்வவ் இடங்களில் இணைத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

1 பக் 7ல்: அங்கத்தினர்களில்
திரு. மு வீர. சிதம்பரம் செட்டியார் அவர்கள்

2 பக் 14ல்: கலைமகள் விழா நன்கொடையாளர்
திரு. பெரி. வீரப்பன் அவர்கள்

3 பக் 19ல் குழந்தைகள் நிகழ்ச்சிச் சிறப்புப் பரிசு
திரு. அரு. சோமசுந்தரம் அவர்கள்

---

உ

வேலுமயிலுந்துணை.

# தெய்வந் தொழா அள்

ஞானத்தமிழாகரர்

**வை. இரத்தினசபாபதி, B. O. L. M. A.,**
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**சிந்தனைக்குரிய குறள்**

தெய்வப் புலமைத் திருவள்ளுவர் இல்லறவியலில் வாழ்க்கைத் துணைவியின் இயல்புகளைப் பத்துக்குறள்களில் இயம்பியுள்ளார். அவற்றுள் ஒரு குறள் இன்றைத் தமிழக மக்களின் சிந்தனைக்கு மிகவும் வேண்டிய ஒன்று.

தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சியின் பயனாகச் சிந்தனையிலும் புதிய வளர்ச்சி உண்டாகியிருக்கிறது. மழை பெய்வதற்குச்செல்வவளம் மிகுந்த நாடுகளில் விஞ்ஞான முறையை அடிப்படையாகக்கொண்டு பல முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. வெற்றியும் கிட்டியிருக்கிறது. தமிழகச் சிந்தனை வளர்ச்சி முறையில் மழை பெய்வதற்கு உரிய காரணங்களில் ஒன்று மங்கையர்களின் கற்பு நிலை.

கற்பு நிலையைப் பற்றித் திருவள்ளுவர் பல இடங்களிற் பேசுகின்றாரெனினும் வாழ்க்கைத் துணைநலம் என்னும் அதிகாரத்தில் 'கற்பென்னும் திண்ணம்' என்று உருவகப் படுத்துவதன் மூலம் அதன் இலக்கணத்தை வரையறுத்து விடுகிறார்.

**ஆய்வாளர் மத்தியிலே**

'கற்பென்னும் திண்மை' என்பதற்கு விரிவுரை கூறுவார் போல அடுத்த குறளிலேயே 'தெய்வந் தொழாஅள், கொழுநன் தொழுதெழுவாள்' என்று கூறுகிறார். இக் குறளின் பிற்பகுதியாகிய 'பெய்யெனப் பெய்யும் மழை' என்ற தொடர் அறிஞர்களால் பலவகையாலும் ஆராய்ச்சி செய்யப் பெற்றது. 'பெய்' என்று சொன்ன அவ்வளவில் மழை பெய்யுமா? என்ற ஐயம்கொண்ட உரையாசிரியர்கள் அந்த ஐயம் காரணமாகப் பல்வேறு வகைகளில் விரிவுரை கூறிச் சால்புறுத்திய உரையாசிரியர்கள் 'தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்' என்ற முற்பகுதிக் குறளில் ஐயம் கொண்டு ஆராய்ந்ததாகத் தோன்றவில்லை.

'தெய்வத்தைத் தொழாமற் கணவனையே தொழுதல்' என்ற ஒன்றே கற்புடைமைக்குரிய வழி என்பது குறளுக்கு முன்னோர்கள் கண்ட உரை.

'பிற தெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கொழுநனைத் தொழா நின்று துயிலெழுவாள்' என்று பொருள் கூறி, தெய்வந் தொழுதற்கு மனந்தெளிவது துயிலெழுங் காலத்தாதலின் 'தொழுதெழுவா' ளென்றார்' என்று விரிவுரை கூறினார் பரிமேலழகர்.

பிற தெய்வம் தொழாது தன் தெய்வமாகிய கணவனைத் தொழுதல் என்பதே கற்புடைமைக்குச் சிறந்த அடிப்படைச் செயல் என்று கருதுங்கருத்தை யாரும் ஐயப்பட்டதாகத் தோன்றவில்லை. இருபதாம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு சிந்தனையாளன் இப்படிப்பட்டதொரு வினாவை எழுப்பலாம்! இருபதாம் நூற்றாண்டில் பாதியும், ஏன் பாதிக்கும் மேற்பட்ட சமுதாயமாகிய பெண்மையானது, திருமணம் செய்துகொண்ட காரணத்தால் கோயிலுக்குச் செல்லவோ இறைநலஞ் சான்ற தெய்வத்திருமேனிகளை வணங்கவோ உரிமையற்றதாக ஆகிவிடுகின்றது. இக்கருத்துக்கும் மேலே

ஒருபடி சென்று, கோயிலுக்குச் செல்லும் பெண்கள் கற்பு இல்லாதவர்கள் என்று முடிவு செய்வதையும் காண்கிறோம். திருவள்ளுவர் கூறும் இக்கருத்து இக்காலத்துக்கு ஒவ்வாத கருத்து என்று கூறப்பெறுவதையும் நம்மால் முற்றாகப் புறக்கணிக்க இயலவில்லை.

## இரட்டைக் காப்பியப் பணி

திருவள்ளுவரின் இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு இருபெரும் நிகழ்ச்சிகளை உருவாக்கிக் காட்டி, இக்கருத்தை மேலும் சிந்திக்கவொட்டாமற் செய்துவிட்ட பெருமை இரட்டைக் காப்பியங்கள் என வழங்கப்பெறும் சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்கும் உண்டு.

பிற தெய்வத்தை வணங்கமறுத்ததாகக் கண்ணகியை யும், திருக்கோவில் திருவிழாக் காணச்சென்றது தவறு என்ற கருத்தை உருவாக்கும் பாத்திரமாக மருதியையும் எடுத்துக்காட்டி இக்கருத்தை வலிவு பெறச் செய்தவை சிலப்பதிகாரமும் மணிமேகலையும்.

## சிலம்புக் காட்சி

கோவலன் மாதவியிடத்தானை, தேவந்தி என்னும் பார்ப்பனத் தோழியானவள் கண்ணகியின் தனிமை வாழ் வைக்கண்டு இரங்கி, சோமகுண்டம், சூரிய குண்டம் துறைமூழ்கிக் காமவேள் கோட்டம் தொழுதால் கணவனோடு வாழும் இன்பத்தை இவ்வுலகிலும், போக பூமியிற் பிறந்து இன்பந் துய்க்கும் பேற்றை மறுபிறப்பிலும் பெறலாம் என்றாள். அப்போது கண்ணகி இது எமக்குப் 'பெருமை அன்று' என்று கூறிவிட்டாள். கணவனோடு பெறும் சிற்றின்பம் காரணமாகப் பிற தெய்வத்தை வணங்குதல் பொருந்தாது என்ற அளவுக்கு அவள் கூறுவதாகக்கொள்ளலாமேயன்றிப்பிறதெய்வம் எதையுமே வணங்கக்கூடாது என்று கூறுவதாகக் கொள்ள இடமில்லை பெருமை தராத செயல் என்று கூறினாளேயன்றி தவறான செயல் எனக் கூறவில்லை. இவ்விடத்திற் சில அறிஞர்கள்

கூறுவதையும் நாம் கவனிக்கவேண்டும். மழைவளந் தரூஉம் கற்பாயின் பிறதெய்வம் வணங்கலாகாது;சாதாரண கற்பாயின் பிறதெய்வம் வணங்கலாம் என்றுகூறுவர். கற்பிலும்—ஒழுக்கத்திலும் நாற்பது விழுக்காடு ஐம்பது விழுக்காடு என்று ஆய்வு செய்வது பொருந்துவதன்று. ஒழுக்கம்; அதில் தவறுதல் இழுக்கம் என்ற இரண்டைத் தவிர இடைநிலை ஏதும் இருப்பதாகக் கொள்ளுதல் பொருந்துவதன்று.

### மணிமேகலையின் மதிப்பீடு

இளங்கோவடிகள் இவ்வாறு அமைக்க, சாத்தனார் அமைத்த மருதியின் வரலாறும் இங்கே கவனிக்கத்தக்கது

மருதி என்பவள் பார்ப்பனி. அவள் ஒருநாள் காவிரியில் நீராடித் திரும்பும்போது 'சுகந்தன், என்ற அரசனின் மக்களுள் இளையவன் பக்கத்தில் யாரும் இல்லாமையால், காவற்காரர்களால் காக்கப்பெறும் உறுதிப்பாடு இல்லாதவள் எனக்கொண்டு 'நீ வா' என மருதியைக் காமம் கருதி அழைத்தான். உடனே அவள் இந்நிலவுலகில்வேண்டுங்கால் மழையைப் பெய்ய வைக்கும் கற்புடை மகளிராயின் பிறர் நெஞ்சு புகுதல் இலர், யானோ இவ்வயலான் நெஞ்சிற் புகுந்தேன். இனி முந்நூலணிந்த மார்பினையுடைய அந்தணனது முத்தீயைக் காக்கும் தகுதி எனக்கில்லை' என்று துன்புற்றாள். பின் அவள் வீடு செல்லாமல், பூதம் நிற்கும் நாற்சந்தியை அடைந்தாள். அப்பூதமோ கற்பிழந்தவர்களை உடனே அடித்துக்கொன்று தின்னும் வேலைக்காக அமைக்கப்பெற்றது. அப்பூதத்தை விளித்து, யான் கற்பொழுக்கத்தில் தவறு செய்ததாகத் தெரியவில்லை. எனினும் அயலான் ஒருவன் மனத்தில் புகும் இழிநிலையை அடைந்துவிட்டேன்! நீ கற்பிழந்தவர்களைக் கொல்லும் செயலுடையை; ஏன் என்னைக் கொன்று உண்ணவில்லை; எனக் கேட்டாள். அப்பூதம் கீழ்கண்டவாறு கூறுகிறது. தெய்வந் தொழாஅள்கொழுநன் தொழுதெழுவாள்,பெய்யெனப் பெய்யும் பெருமழை என்று கூறிய தெய்வப்புலவர் தெளிவுரையை உளங்கொள்ளாதவளாய், பொய்மொழி

களையும் நகைப்பிற்கிடமான கதைகளையும் கேட்கும் விருப்பம் கொண்டிருந்தாய். மேலும், திருவிழாக்காண விரும்பிச் சென்ற நீ வேறு கடவுளை வணங்கும் தன்மையையும் மேற்கொண்டாய். ஆனால் மழைவளந்தரும் உயர்ந்த கற்பில் தவறிவிட்டாய். ஆனால் உன்போன்றவர்களைக் கொன்று தின்பது என் பணி அன்று. மனம்போனவாறு ஒழுகிக் கற்பிழக்கும் பெண்களையே என்னுடைய பாசக் கயிறு பிணிக்கும்''

மேலே கூறப்பெற்ற கண்ணகி, மருதி ஆகியோர் நிகழ்ச்சி களிலிருந்து நாம் அறியலாகும் கற்பு இருவகை. (1) தெய்வத்தை ஏவல் கொள்ளும் ஆற்றலுடைய கற்பு ஒருவகை. இது இயற்கையின் நியதியையும் மாற்றும் ஆற்றல் வாய்ந்தது. வேண்டும்போது மழையையும் பெய்விக்க வல்லது. (2) சாதாரணக் கற்பு. இது மழையைப் பெய்விக்கக் கூடிய ஆற்றல் இல்லாதது. ஆனால் இது குற்றம் தரக்கூடிய ஒன்றன்று.

எனவே, கணவனைத்தவிர வேறு யாரையும் வணங்காமை ஒன்றே மழைவளந்தரு கற்புடையாவதற்கு விதி என்று நாம் எண்ணும் முறையில் நிகழ்ச்சிகள் அமைகின்றன. இதை வைத்து இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனையாளன் தொடுத்த வினாவிற்கு விடை கூறி விடலாம். வேண்டும்போது மழையையும் பெய்விக்கக் கூடிய ஆற்றலை ஒரு பெண் பெறமுடியும்; அதுவே உயர்ந்த கற்பு: அதனைப் பெற வேண்டுமாயின் பிற தெய்வம் வணங்காது, கணவனையே வணங்க வேண்டும் என்பதே.

**மணிமேகலையில் முரண்.**

ஆனால் தொல்காப்பியக்காலம் முதல் இரட்டைக்காப்பியங்கள் காலம் வரை உள்ள கால அளவையில் "கணவனையன்றிப் பிறதெய்வம் எதையும் வணங்கலாகாது" என்ற கற்புக் கொள்கை எத்துணையளவு வலிமைபெற்றதாக இருந்தது என்பதை முறையே ஆராயலாம். ஆயின் இக்

கட்டுரை நீளும், மணிமேகலையிலேயே இக்கருத்து மறுக்கப்பெறுகிறது.

ஆதிரை என்பவளின் கணவன் சாதுவன். பொருள் வேண்டிக் கடல் வழி மூலம் வணிகம் போற்றி அயல்நாடு சென்றான். திரும்பி வரும்போது இறந்தான் எனச் சிலர் கூறக் கேட்ட ஆதிரை தீப்பாய்ந்தாள். தீ அவளைச் சுடாமல், உன் கணவன் உயிரோடுள்ளான், விரைவில் வருவான் எனக் கூறியது. அவள் பின்னர் இல்லம் சென்று, கண்மணி அனையான் (கணவன்) கடிது இங்கே வரவேண்டும் என்பதைப் பயனாக வைத்து அறம்பல புரிந்தாள். அத்தகைய ஆதிரை, "பொழிமழை தரூஉம் அரும்பெறல் மரபிற் பத்தினிப் பெண்டிரும், விரும்பினர் தொழூஉம் வியப்பினள் ஆயினாள்" என்பது சாத்தனார் வாக்கு. இங்கே, மழைவளந் தரும் மாண்புடைக் கற்பு நலன் சான்ற பெண்கள் ஆதிரையை வணங்கினார்களா? இல்லையா? என்ற அளவுக்கு நம்முடை ஆராய்ச்சியை உயர்த்த வேண்டாம். அத்தகைப் பெண்களும் வணங்கும் தகுதியை ஆதிரை பெற்றிருந்தாள் எனக் கொள்வதில் தவறில்லை. அவ்வாறாயின், மழைவளந் தரூஉம் கற்பு நலம் சான்ற பத்தினிப் பெண்கள் கணவரைத் தவிரப் பிற தெய்வங்களை வணங்கலாம் என்ற கருத்து ஆசிரியருக்கு உடன்பாடு என்றே தெரிகிறது.

### வள்ளுவர் நெஞ்சம்

இந்நிகழ்ச்சிகளின் மூலம் நமக்கு வருகின்ற ஐயம் ஒன்றே! ஒரு குலத்துக்கு ஒரு நீதி எனப் பேசாமல் மனித இனத்தை முற்றாக நினைத்து, இணைத்த நிலையில் ஒருமைப் பாட்டுக்குரிய நீதியை உலகத்துக்கே அறிவுறுத்திய தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் இத்தகையதொரு நீதியை வழங்கியிருப்பாரா? இத்திருக்குறளை மீண்டும் சிந்தித்தல் வேண்டுவதாகின்றது. இக்குறளில் திருவள்ளுவர் நெஞ்சை நமக்கு அறிவுறுத்தும் சொல் ஒன்றே. அதை எழுவாள் என்பதே, இரண்டாவது, நம்முடைய சிந்தனையை

எளிமையாக ஓட்டாமல் தடுத்து நிறுத்தி, 'நின்று சிந்திக்க' என்று அறிவுறுத்துவது, 'தொழா அள்' என்ற அளபெடைச்சொல்.

(அளபெடை ஓசையை நிறைக்க வருவதன்று; கவிஞன் படிப்பவனின் சிந்தனையோட்டத்தைத் தடுத்து நிறுத்தி, இங்கே அரும் பெருங் கருத்துக் கருவூலம் உளது நின்று சிந்திக்க எனக் காட்டுவதற்குக் கையாளப்பெறும் ஓசைக் குறிப்பே என்பதை இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்து முதல் கருத்தரங்கில் ஆய்வுக்காகிய என்னுடைய 'அளபெடை' என்ற கட்டுரையைக் கண்டு தெளிக.)

மேலே குறிப்பிட்ட இரண்டு சொற்களின் இணைப்பைக் கொண்டு நமக்குக் கிடைக்கும் செய்திகள் இரண்டு.

(1) பெண்ணானவள் காலையில் உறக்கத்திலிருந்து எழும் போது செய்யவேண்டிய செயலை இக்குறள் குறிக்கிறது.

(2) காலையில் எழுந்திருக்கும்போது பிற தெய்வத்தையும் தொழாதவளாகிக் கணவனைத் தொழுது எழுதல் வேண்டும்.

இக்கருத்தை குழப்பம் இல்லாமலேயே கூறலாமே! கணவனையே வணங்குவர்; பிற தெய்வம் வணங்கார்; என்று கூறியிருக்கலாம். தெய்வம் தொழாதவளாகக் கணவனைத்தொழுது எழுந்திருப்பாள் எனக் கூறுவதன் நோக்கம், காலையில் எழுந்திருக்கும்போது தெய்வத்தைத் தொழாமல், கணவனைத் தொழுதல் வேண்டும் என்பதாக அமைகிறது. பிற தெய்வத்தைத் தொழாதிருப்பதையும், கணவனைத் தொழுவதையும் காலத்தோடு இணைத்துக் கூறுவானேன்? திருவள்ளுவர் நெஞ்சம் ஒரு முறை மாற்றத்தை வலியுத்துகிறது என்பது வெளிப்படை. காலையில் எழுந்திருக்கும்போது தெய்வத்தைத் தொழாமல் கணவனைத் தொழுது எழுதல் வேண்டும் என்பதே அம் மரபு மாற்றம். திருவள்ளுவர் தெய்வத்தையே பெண்கள்

வணங்குதல் கூடாது எனக் கூறவில்லை, காலையில் எழும் போது எல்லாரும் தத்தம் வழிபடு தெய்வத்தை வணங்கியே எழுதல் வேண்டும் என்பது பொது நீதி. ஆனால் கற்புடைப் பெண்கள் அப்பொது நீதியின் வண்ணம் காலையில் எழும் போது தன் வழிபடு தெய்வத்தை வணங்காமல் கணவனையே தொழுது எழுதல் வேண்டும் என்ற சிறப்பு நீதியைக் கடைப் பிடித்தல்வேண்டும் என்பதே. எப்போதுமேபிற தெய்த்தைவ வணங்குதல் கூடாது எனின், சுருங்கவும் தெளியவும் கூறும் திருக்குறளில் 'தொழுவாள்' என்று மட்டுமே கூறியிருக் கலாம்; 'எழுவாள்' என்ற ஒரு சொல்லை இணைத்துக் கூறவேண்டியதில்லை.

முடிவுரை.

எனவே, காலையில் எழுந்திருக்கும் போது கடவுளை வணங்கவேண்டும் என்ற நீதியில், பெண்கள் கணவனையே தெய்வமாக வணங்கவேண்டும் என்ற அளவில் ஒருமாற்றத்தை வகுக்கிறார் திருவள்ளுவர். பிற அமையங்களில் தெய்வந் தொழுவதை வள்ளுவர் தம் நீதி மறுக்கவில்லை என்பதே முடிவு. மணிமேகலையாசிரியர் இக்குறளைப் பிறழவுணர்ந்தே அமைக்கிறார் என்று கூறுவதிலும் தவறில்லை என்றே தோன்றுகிறது.



ஸ்ரீ சரசுவதி
வித்தியாசாலையின்
சிறப்பிற்கோர் எடுத்துக்காட்டு



சாக்கோட்டை
வட்டாரப் பள்ளிகளில் அரசினரால்
நடத்தப்பெற்ற எட்டாம் வகுப்புத் தேர்வில்

முதல் மாணவனுகத் தேறிய

**M. K. அடைக்கன்**

# எம்மை வளர்த்த சங்கமேடை

கவிஞர் கோ அரு. சோமசுந்தரன் M.A.B.T.
(முதல்வர், C. T. C. காரைக்குடி.)

—●—

மேடையெனில் எல்லாமே மேடை தானு?
    மேய்ச்சல் நிலம் நஞ்சைக்குச் சமமா கும்மா?
ஓடையெலாம் கங்கைமுன் ஒன்ரு கும்மா?
    உதிரமுடன் தண்ணீரும் உட்கா ரும்மா?
ஆடையெலாம் பொன்னுடை ஆவ துண்டோ?
    ஆட்டமெலாம் தோகைமயில் ஆட்ட மாமோ?
சாடையெலாம் மாமியார் சாடை ஆமோ?
    சரசுவதியின் மேடையிது! சமமும் உண்டோ?


கப்பலோட்டும் சிதம்பரனர் அந்தக் காலம்
    கர்ச்சித்த மேடையிது! கவிஞர் கோமான்
செப்பரிய கவிமணியின் தமிழால் அன்று
    சிறப்புற்ற மேடையிது! சேதுப் பிள்ளை
ஒப்பற்ற திரு. வி. க., டி. கே, சி. யும்,
    உயர்சோம சுந்தரபா ரதியும், மற்றும்
இப்புவியில் இணையில்லா கா. சு. பிள்ளை
    எல்லாரும் தமிழ்வளர்த்த மேடை யிது!

அறிவியலின் முன்னோடி கே. எஸ். கிருஷ்ணன்,
    அருந்தமிழன் எழுத்தாளன் கல்கி, மற்றும்
விரிவுரையில் வல்லவராம் ம. பொ. சி.யும்
    வெற்றிமிகு பண்டிதர்க்கு மணியும், மேலும்
திரிகூட சுந்தரரும், ராய. சொ.வும்
    தேன்தமிழின் கி.ஆ.பெ., சா.க ணேசன்
உரிமைமிகும் முருகப்பா, உமாம கேசன்
    உலவியதால் புகழுற்ற மேடை யிது!

கடலென்றே மேடையினை உவமிப் பேனு?
    கருத்துடைய முழக்கங்கள் கடலுக் கில்லை.
உடலென்றே மேடையினை உவமிப் பேனு?
    உயிரென்றும் உடலினிலே இருப்ப தில்லை,
புடம்போட்ட தங்கமெனப் புகலு வேனு?
    பொன் என்றும் அனைவர்க்கும் பொதுவாய் இல்லை.
படமாடும் கடவுளெனப் பாடு வேனு?
    பக்தர்க்கே இறை வருவான். உவமை இல்லை!

இயல் இசையும் நாடகமும் இயல்பாய் ஆக்கி
    இன் தமிழை வளர்க்கின்ற மேடை யீது!
வயலாகி இருப்பதனுல் இந்த மேடை
    வளமாகி வந்தவர்கள் பாடு கின்ரேம்.
புயலோடு தென்றலுமே வீசு மிங்கு!
    புதுமையுடன் பழமையுமே கொலுவி ருக்கும்!
நயமான உயிருள்ள மேடை யீது!
    நற்றமிழின் சாருலே அமைந்த மேடை!

தாலாட்டுப் பாடுவதைக் கேட்டுக் கேட்டுத்
    தலையாட்டும் சிறுமியெலாம் மேடை ஏறிக்
கோலாட்டம் நிகழ்த்துகிருர்; அதனைக் கண்டு
    குதியாட்டம் போடுதடா பெற்ரேர் உள்ளம்!
வாலாட்டும் தீமையெதும் இல்லா வாறு
    வழிகாட்டும் மேடையிது! பாய்ந்து பாய்ந்து
சேலாட்டம் போடுபுது வயலில் சங்கம்
    சீராட்டும் மேடையிது! சிறந்து வாழ்க!



உ

சிவமயம்

## பொன் விழாவிற்கு நன்கொடை தந்தவர்களின் விபரம்

| | | |
|---|---|---|
| பெ. மு. | புதுவயல் | 300 |
| பெரி சித இராமசாமி செட்டியார் | ,, | 201 |
| அள. பெரி. வீர. ராம. குடும்பத்தார் | ,, | 136 |
| எ. பெரி. வீர. குடும்பத்தார் | ,, | 101 |
| சு. ராம. வீர. ராமசாமி செட்டியார் | ,, | 101 |
| V. வீரப்பன் (சி, வீர. சி.) | ,, | 101 |
| வயி. ராம. கி. ராமசாமி செட்டியார் | அரியக்குடி | 101 |
| VR. நாகப்ப செட்டியார் (சுயமபட்டா எஸ்டேட்) பாலிபட்டா, மைசூர் ஸ்டேட். | | 101 |
| சாத்தப்பா சுப்பிரமணியம் | புதுவயல் | 51 |
| N. பார்வதி ஆச்சி | கோட்டையூர் | 51 |
| C.T. சுப்பிரமணியஞ் செட்டியார் பெரம்புக்கூலி எஸ்டேட் | சிட்டாலி மைசூர் ஸ்டேட் | 51 |
| ப. பெ. அரு. ராம. பழ. ராம. அருணாசலம் செட்டியார் | புதுவயல் | 50 |
| சித. வயி. வயிரவன் செட்டியார் | ,, | 50 |
| சித. வயி. சிதம்பரஞ் செட்டியார் | ,, | 50 |
| AR. அண்ணாமலை | திருச்சி | 50 |
| மெ. செ. மெ. மெ. சொ. சிகப்பி ஆச்சி | காரைக்குடி | 50 |
| P.V. AL. வயிரவன் செட்டியார் | ராயவரம் | 50 |
| வீர. பழ. விஜைதீர்த்தன் செட்டியார் | புதுவயல் | 31 |
| ராம. உடையப்ப செட்டியார் | ,, | 25 |
| V. D. வயிரவன் | திருச்சி | 25 |
| PS. ராமசுப்பிரமணியம் | ,, | 25 |
| V. S. V. நாதன் | ,, | 25 |
| S. குருநாதன் செட்டியார் | ,, | 25 |
| வளநாடு சீனி பிலிப்ஸ் | ,, | 25 |
| சிதம்பரஞ் செட்டியார் | ,, | 25 |
| AR. காசி (சுப்பிரமணியா எஸ்டேட்) | மெற்கரா | 21 |
| VR. S. சோலச்சி ஆச்சி | புதுவயல் | 20 |
| VR. சிதம்பரம் | பள்ளத்தூர் | 20 |
| SP. உண்ணாமலை ஆச்சி | ராயவரம் | 20 |
| S. நாச்சியப்பன் M. A., | விராமதி | 20 |
| | | 1902 |

| | | |
|---|---|---|
| | முன்பக்கப்படி ரூ. | 1902 |
| AN. SP. அண்ணாமலை B. Sc., D.M.I.T. | கோட்டையூர் | 20 |
| V. பழனியப்பன் M. A., B. T. | புதுவயல் | 16 |
| சித. கயி. ராம. மீனாட்சி ஆச்சி | காரைக்குடி | 16 |
| VR. கருப்பாயி ஆச்சி | பள்ளத்தூர் | 16 |
| ஆ.த. லெ. சித சொக்கலிங்கஞ் செட்டியார் | காரைக்குடி | 15 |
| AR. அண்ணாமலை செட்டியார் | ,, | 15 |
| கண. கண்ணப்பன் | ,, | 15 |
| பழ. கோவிந்தன் | புதுவயல் | 13 |
| அழ த. வீரப்பன் | ,, | 11 |
| வயி. ரெங்கநாதன் | ,, | 11 |
| S. சிகப்பி ஆச்சி | ,, | 11 |
| ராம. சித. ராமசாமி செட்டியார் | ,, | 11 |
| VR. VR. வீரப்பன் | ,, | 11 |
| PL. மெய்யம்மை ஆச்சி | கண்டனூர் | 11 |
| சிங்காரஞ் செட்டியார் (பாலக்காடு எஸ்டேட்) சுண்டிக்குப்பா | | 11 |
| கதிரேசன் (வால்னூர் எஸ்டேட்) | கூட்லூர் சிட்டாலி | 11 |
| S. சின்னக்கவுண்டர் | —— | 11 |
| V. RM. வீரப்ப செட்டியார் | புதுவயல் | 10 |
| VR பழமலை | ,, | 10 |
| RM. விஸ்வநாதன் | ,, | 10 |
| கதி. வீர. கதிரேசன் செட்டியார் | ,, | 10 |
| பெரி விசாலாட்சி ஆச்சி | ,, | 10 |
| பழ. முத்துப்பழநியப்பன் | ,, | 10 |
| பெ ப வி வீர பழ விருத்தகிரி செட்டியார் | ,, | 10 |
| அ சு பள சோம சுப்பையா செட்டியார் | ,, | 10 |
| AN. முத்து | ,, | 10 |
| இராம. சிதம்பரஞ் செட்டியார் | ,, | 10 |
| N. SP. செல்லப்பன் | ,, | 10 |
| மெ. சிதம்பரஞ் செட்டியார் | ,, | 10 |
| SP VR. சுப்பிரமணியஞ் செட்டியார் | ,, | 10 |
| மு. பெரி. சின்னக்கருப்பஞ் செட்டியார் | ,, | 10 |
| சி. முத்தையா செட்டியார் | ,, | 10 |
| பெ. ப. வி, சித. வினைதீர்த்தான் செட்டியார் | ,, | 10 |
| AN SP. அடைக்கம்மை, w/o S. ராமநாதன் செட்டியார் | காரைக்குடி | 10 |
| பள. ப. ப. வீரப்ப செட்டியார் | புதுவயல் | 10 |
| மெ. சித. மெய்யப்ப செட்டியார் | ,, | 10 |
| VR. அருணா | ,, | 10 |
| | ரூ. | 2327 |

| | | |
|---|---|---|
| | முன்பக்கப்படி ரூ. | 2327 |
| சே. பழனியப்ப செட்டியார் | ,, | 10 |
| தீ. க. வெ. ராம. ராம. ராம. முத்தாயி ஆச்சி கண்டனூர் | | 10 |
| சி. ராம. கருப்பஞ் செட்டியார் | ,, | 10 |
| நா. சுப்பிரமணியஞ் செட்டியார் | ,, | 10 |
| வெ. நா வெ. சீதை ஆச்சி | கோட்டையூர் | 10 |
| AM. வள்ளியம்மை ஆச்சி | பள்ளத்தூர் | 10 |
| அண. சிவகாமி ஆச்சி | ,, | 10 |
| மெ. சிகப்பி ஆச்சி | செச்காலை | 10 |
| V மீனாட்சி ஆச்சி | காரைக்குடி | 10 |
| கவிஞர் அரு. சோமசுந்தரம் M. A., B. T. | ,, | 10 |
| ராம. கைலாசம் செட்டியார் | ,, | 10 |
| S. சுலோசனு | ஆருவயல் | 10 |
| PL பார்வதி ஆச்சி | கல்லுப்பட்டி | 10 |
| சத்தியா பிலிம்ஸ் | திருச்சி | 10 |
| ஜெயம் அண்கோ | ,, | 10 |
| A. முத்துக்குமரன் | ,, | 10 |
| K R S மாரீஸ் | ,, | 10 |
| ஜெயா எண்டர் டயமெண்டு | ,, | 10 |
| குணசேகர் பிலிம்ஸ் | ,, | 10 |
| V சுந்தரம் | ,, | 10 |
| D தேவராயன் | மதுரை | 10 |
| AR மாணிக்கம் | சென்னை | 10 |
| முரு ராஜகோபால் | ,, | 10 |
| PL சிவகாமி ஆச்சி | —— | 10 |
| VR மெய்யப்பன் | —— | 10 |
| பெரி வடு வீர வடுகநாதன் செட்டியார் | புதுவயல் | 8 |
| அரு ஏகப்பன் | ,, | 7 |
| சுப நாராயணன் செட்டியார் | ,, | 7 |
| அ சு பழ சு பழ வீர பழனியப்பன் | ,, | 5 |
| S V செல்லப்பன் | ,, | 5 |
| VR சுந்தரேசன் | ,, | 5 |
| VR விநாதீர்த்தான் செட்டியார் | ,, | 5 |
| அண மு அண அருணாசலம் செட்டியார் | ,, | 5 |
| VR சோமசுந்தரம் | ,, | 5 |
| கா வீரப்ப செட்டியார் | ,, | 5 |
| சுப சோமசுந்தரம் | ,, | 5 |
| ச ராமசாமி | ,, | 5 |
| சுப நா சுப்பிரமணியஞ் செட்டியார் | ,, | 5 |
| KP சோமசுந்தரம் | ,, | 5 |
| | ரூ. | 2654 |

| | | |
|---|---|---|
| | முன்பக்கப்படி ரூ. | 2654 |
| N வடிவேல் | புதுவயல் | 5 |
| VR சுப்பிரமணியஞ் செட்டியார் | ,, | 5 |
| பெரி நா வெ நாராயணஞ் செட்டியார் | ,, | 5 |
| K பழனியப்பன் | ,, | 5 |
| CT இலக்குமணன் | ,, | 5 |
| V P L வீரப்ப செட்டியார் | ,, | 5 |
| பெ. ப. வி. பழ. அண்ணாமலை செட்டியார் | ,, | 5 |
| பெ. ப. வி பழ விருத்தகிரி செட்டியார் | ,, | 5 |
| கும ரெங்கநாதன் செட்டியார் | ,, | 5 |
| M தெய்வானை | ,, | 5 |
| KR கணேசன் | ,, | 5 |
| வீர சுப நாராயணன் | ,, | 5 |
| சிதம்பரம் உமையாள் | ,, | 5 |
| சோம மு வள்ளியம்மை ஆச்சி | ,, | 5 |
| N விசாலாட்சி ஆச்சி | கண்டனூர் | 5 |
| N PL ஜானகி ஆச்சி | ,, | 5 |
| AL ரெங்கநாயகி ஆச்சி | ,, | 5 |
| சுப நாச்சம்மை ஆச்சி | ,, | 5 |
| பழ சாரதாள் ஆச்சி | ,, | 5 |
| கும சுப்பிரமணியம் | ,, | 5 |
| நா அருணாசலம் | ,, | 5 |
| வெ மு வெ சா வெள்ளையஞ் செட்டியார் | ,, | 5 |
| அரு உமையாள் ஆச்சி | அழகாபுரி | 5 |
| மு தெ அ தே தே தெய்வானை ஆச்சி | கோட்டையூர் | 5 |
| ராம நா நா நா உமையாள் ஆச்சி | பள்ளத்தூர் | 5 |
| லெ உமையாள் ஆச்சி | ,, | 5 |
| VR வள்ளியம்மை ஆச்சி | ,, | 5 |
| VR வீரசேகரன் | ,, | 5 |
| சோம இராமநாதன் | ,, | 5 |
| M ஏகாம்பாள் | ,, | 5 |
| PR உமையாள் ஆச்சி | ,, | 5 |
| கோ கருப்பஞ் செட்டியார் | கானாடுகாத்தான் | 5 |
| வள்ளியம்மை இராமசாமி | ,, | 5 |
| ரா சி ராம ராமசாமி செட்டியார் | நேமத்தான்பட்டி | 5 |
| ராம வள்ளியம்மை ஆச்சி | காரைக்குடி | 5 |
| சுப விசாலாட்சி ஆச்சி | ,, | 5 |
| ஷண்முகம் பேப்பர் ஸ்டோர் | ,, | 5 |
| விஜயதேனு விலாஸ் | ,, | 5 |
| SP ராமு | ,, | 5 |
| | ரூ. | 2849 |

| | | |
|---|---|---|
| | முன்பக்கப்படி ரூ. | 2849 |
| ராம. அழகப்மை ஆச்சி | அரியக்குடி | 5 |
| அ. முத்தப்பன் | தேவகோட்டை | 5 |
| S. வள்ளியம்மை | கல்லுப்பட்டி | 5 |
| சுப. சிதாலெட்சுமி ஆச்சி | அரிமளம் | 5 |
| RM. PL. பழனியப்ப செட்டியார் | கொத்தமங்கலம் | 5 |
| உமையாள் அருணசலம் | ஓ சிறுவயல் | 5 |
| A. பாஸ்கரன் & M. நடராஜன் | அறந்தாங்கி | 5 |
| V. ஜெயா | ,, | 5 |
| V. செல்வி | , | 5 |
| V. ராஜேஸ்வரி அம்மாள் | ,, | 5 |
| மெ. காசிவிஸ்வநாதன் | திருச்சி | 5 |
| V. கிருஷ்ணமூர்த்தி | , | 5 |
| L. மீனுட்சி ஆச்சி | மதுரை | 5 |
| S கெஜபதி செயின் & யூனியன் டிரேடர்ஸ், சென்னை | | 5 |
| M செல்லம்மாள் | மேலக்காசிப்பாளையம் | 5 |
| S புல்லியன் | மயிலம் | 5 |
| செல்வகருணநிதி | , | 5 |
| N சோலேயப்பன் | சென்னை | 5 |
| S வசந்தாள் | ... | 5 |
| R லெட்சுமி அம்மாள் | — | 5 |
| S வள்ளியம்மை | — | 5 |
| M உமையாள் | — | 5 |
| N. நாச்சம்மை | — | 5 |
| AL சாத்தப்ப செட்டியார் | — | 5 |
| AL. S. சாத்தப்பன் | — | 5 |
| P A ஜெகன்னதன் | — | 5 |
| S கணேசன் | — | 5 |
| S ஷண்முகவடிவேலு | — | 5 |
| L வள்ளியப்பன் | — | 5 |
| L செந்தில்நாதன் | — | 5 |
| V. சங்கரன் | ,, | 5 |
| PL. சாத்தப்பன் | ,, | 5 |
| CT. நாராயணன் | ,, | 5 |
| VP. ராமசாமி | ,, | 5 |
| S. சுப்பிரமணியன் | ,, | 5 |
| L. நாராயணன் | ,, | 5 |
| V முருகப்பன் | ,, | 5 |
| RM. நாராயணன் | ,, | 5 |
| S. நாச்சியப்பன் | ,, | 5 |
| | ரூ. | 3044 |

| | | |
|---|---|---|
| முன்பக்கப்படி | ரூ. | 3044 |
| அழகப்பன் (அண்ணாமலையார் எஸ்டேட்) | ,, | 5 |
| பாலாஜி எஸ்டேட் | ,, | 5 |
| லெட்சுமணன் உட்ளண்டு எஸ்டேட் | ,, | 5 |
| தியாகராஜன் ஸ்ரீ தேவி எஸ்டேட் | ,, | 5 |
| நாகப்ப செட்டியார், கோட்டைக்காடு செயின்காடு எஸ்டேட் | ,, | 5 |
| M. K. சுப்பையா செட்டியார் கெவ்ரிபட்டா எஸ்டேட் | ,, | 5 |
| C. G. பூனச்சா | ,, | 5 |
| வே. சாத்தப்பன் பீச்லாண்டு எஸ்டேட் | ,, | 5 |
| டியூப்ரே எஸ்டேட் | ,, | 5 |
| கோபால்புரம் எஸ்டேட் | ,, | 5 |
| SP. வள்ளியம்மை | ,, | 5 |
| AR. உமையாள் ஆச்சி | ,, | 5 |
| C. நடேசன் | ,, | 5 |
| K. A. முருகேசன் | ,, | 5 |
| N. சுப்பையா | ,, | 5 |
| வெங்கிட்டரங்கன் | ,, | 5 |
| அஜிஸ் | ,, | 5 |
| இளங்கோ | ,, | 5 |
| குப்தா | ,, | 5 |
| செல்வகுமார் | ,, | 5 |
| D. கோவிந்தசாமி | ,, | 5 |
| சந்திரசேகரன் | ,, | 5 |
| அப்ரஹாம் | ,, | 5 |
| நாச்சியப்பன் | ,, | 5 |
| பழனி | ,, | 5 |
| K. P. K. | ,, | 5 |
| சேது | ,, | 5 |
| N. P. P. L. | ,, | 5 |
| V. பழனியப்பன் | ,, | 5 |
| க. வி. இராமனுதன் | ,, | 5 |
| ராம. சொக்கலிங்கம் | ,, | 5 |
| பெரி. முத்தப்பன் | ,, | 5 |
| ST. ராமய்யா | ,, | 5 |
| S. சிகப்பி ஆச்சி | ,, | 5 |
| N. கண்ணன் & கிருஷ்ணன் | ,, | 5 |
| K. S. சரோஜா | ,, | 5 |
| SP. லெட்சுமி | ,, | 5 |
| | ரூ. | 3229 |

| | | |
|---|---|---|
| | முன்பக்கப்படி ரூ. | 3229 |
| L. வள்ளியப்மை | ,, | 5 |
| சித. ரெ. உமையாள் ஆச்சி | ,, | 5 |
| மு. பழ. அலமேலு ஆச்சி | ,, | 5 |
| சோம. ராம மீனாள் ஆச்சி | ,, | 5 |
| A. விஜயகௌரி | ,, | 5 |
| N. பழனியப்பன் | ,, | 5 |
| AL. ராமய்யா கயமபட்டா எஸ்டேட் | , | 5 |
| VR. சோமசுந்தரம் | புதுவயல் | 3 |
| வ. விஸ்வநாதன் | ,, | 3 |
| RM. சோமசுந்தரம் | ,, | 3 |
| M. சிதம்பரம் | ,, | 3 |
| VR. சுப்பிரமணியம் | ,, | 3 |
| KR. சரஸ்வதி | ,, | 3 |
| A. பாலாம்பாள் | ,, | 3 |
| சித. உண்ணாமலை ஆச்சி | கானாடுகாத்தான் | 3 |
| சுலோசனா | பள்ளத்தூர் | 3 |
| கரு. காந்திமதி ஆச்சி | காரைக்குடி | 3 |
| அருணாள் பொடஸ் | ,, | 3 |
| மெ. வீணாதீர்த்தான் செட்டியார் | ,, | 3 |
| P. கருப்பையா | மதுரை | 3 |
| சு. நடராஜன் | மயிலம் | 3 |
| S. ராமதாஸ் | ,, | 3 |
| ராம. உமையாள் | ,, | 3 |
| V. பழனியப்பன் | ,, | 3 |
| C. மீனாட்சிசுந்தரம் | ,, | 3 |
| A. D. ராமகிருஷ்ணன் | ,, | 3 |
| T. சேஷாத்திரி | ,, | 3 |
| ST. அரசு | ,, | 3 |
| சீதாராமய்யர் | ,, | 3 |
| A. வீரப்பன் | ,, | 3 |
| சா. இந்திராள் | புதுவயல் | 2 |
| பெ. ப. வி. சித. நல்லபெருமாள் | ,, | 2 |
| அள. குப. சுப. வீரப்ப செட்டியார் | ,, | 2 |
| இ ராஜமாணிக்கம் | ,, | 2 |
| RM. V. அண்ணாமலை மணி | கண்டனூர் | 2 |
| A. இராமசாமி | ,, | 2 |
| J. S. பால்ராஜ் | கொத்தமங்கலம் | 2 |
| J. S. செல்வராஜ் | திருத்தங்கூர் | 2 |
| S. SP. உமையாள் | கானாடுகாத்தான் | 2 |
| | ரூ. | 3351 |

| | | | |
|---|---|---|---|
| | | முன்பக்கப்படி. ரூ. | 3351 |
| KP. A. உண்ணுமலை ஆச்சி | | ,, | 2 |
| S. முத்து | இந்தியன் பாங்கு | காரைக்குடி. | 2 |
| N. நாராயணன் | ,, | ,, | 2 |
| Y. ஏகப்பன் | , | , | 2 |
| சுப்பிரமணியன் | , | , | 2 |
| மா. ஸ்ரீநிவாஸன் | , | , | 2 |
| R. ஜெகன்னுதன் | , | , | 2 |
| P. அழகுசுந்தரம் | , | , | 2 |
| S. லெட்சுமிநாராயணன் | , | , | 2 |
| KL. வெங்கடாஜலம் | | , | 2 |
| M. D. காந்தி | , | , | 2 |
| நா. கமலா | | மயிலம் | 2 |
| நா. பிரேமவல்லி | | , | 2 |
| க. மலர்க்கொடி | | , | 2 |
| முல்லிதா | | , | 2 |
| ந. தேமொழி | | , | 2 |
| அ. சிவம்மாள் | | , | 2 |
| எ. ஹேமலதா | | , | 2 |
| ம. சுந்தரமூர்த்தி | | | 2 |
| கோ. வஜ்ரவேலு | | , | 2 |
| மு. கோவிந்தராஜு | | , | 2 |
| க. சிற்றரசு | | ; | 2 |
| S. கஸ்தூரிபாய் | | , | 2 |
| T. S. இன்பரசி | | , | 2 |
| கு. பரிமளா | | , | 2 |
| M. கனகவல்லி | | , | 2 |
| V. ஜெயந்தி | | , | 2 |
| M. வெள்ளைச்சாமி | | , | 2 |
| வீரராகவன் சாமுண்டி எஸ்டேட் | | , | 2 |
| சுப்பிரமணியன் தேவி எஸ்டேட் | | , | 2 |
| K. T. P. பழனியாண்டி ஒற்றைக்காடு எஸ்டேட் | | ; | 2 |
| CT. கருப்பையா எமகுண்டி எஸ்டேட் | | , | 2 |
| ந. மு. சொ. ராம சோ. உமையாள் ஆச்சி | | , | 2 |
| VR. அண்ணுமலை | | கண்டனூர் | 1 |
| வி. இ. நாராயணன் | | , | 1 |
| A. M. K. R. முத்தையா அம்பலம் | | பாகிலயூர் | 1 |
| RM. விரப்பன | | தேவகோட்டை | 1 |
| ப. நல்லசிவன் | இந்தியன் பாங்கு | காரைக்குடி. | 1 |
| MR. செல்லியான் | , | , | 1 |
| | | ரூ. | 3423 |

முன்பக்கப்படி ரூ. 3423

| | | |
|---|---|---|
| S. கணபதி | , | 1 |
| KM. பழனிச்சாமி | . | 1 |
| கே. அண்ணாமலை | . | 1 |
| வி. ஜி. பாலகிருஷ்ணன் | , | 1 |
| எஸ். பி. பெருமாள் | . | 1 |
| எஸ். இராமசாமி | . | 1 |
| எஸ். கருப்பையா | . | 1 |
| ப. தியாகராஜன் | பூங்குடி | 1 |
| M. முத்து | உசிலங்குடி | 1 |
| வி. சரோஜா | சிவபுரி | 1 |
| வி. சுப்பிரமணியன் | சிவபுரி | 1 |
| வி. பழனியப்பன் | , | 1 |
| M. முருகப்பன் | கண்டனூர் | 1 |
| RM. உலகப்பன் | , | 1 |
| S. பழனியப்பன் | சென்னை | 1 |
| அரு. அண்ணாமலை | . | 1 |
| R T. வெங்கிடசுப்பிரமணியன் | , | 1 |
| S. அன்பழகன் | ; | 1 |
| S. சுந்தரேசன் | | 1 |
| V. அண்ணாமலை | , | 1 |
| M S விசாலாட்சி | , | 1 |
| G | — | 1 |
| R | — | 1 |
| R | — | 1 |
| RM | — | 1 |
| K RM | — | 1 |
| S | — | 1 |
| KR. காசி | - | 1 |
| AL சொக்கலிங்கம் | — | 1 |
| AL முத்தையா | — | 1 |
| சுழ உடையப்பசெட்டியார் திருச்சியிலிருந்து நன்கொடை வசூல் செய்து தந்தது | | 250 |
| பழ ஏகப்பன் லக்னோவில் நன்கொடை வசூல் செய்து தந்தது ரூ | | 101 |
| (சி வீர சி ) V வீரப்பன் தண்ணீர் பந்தலுக்காக தந்தது ரூ | | 30 |
| | | 3834 |

## வள்ளுவம்போல் வாழ்க.

[கவிஞர்கோ. வித்துவான் பூ. அமிர்தலிங்கன் எம். ஏ.,]

★

பூமணக்கும் தேமாவிற் புகுந்த தென்றல்
  பொன்கதலிக் குலேயசைத்துப் பலாவிற் சேரும்
காமணக்கும் புதுவயலில் சான்ருேர் கண்ட
  கலேவளர்க்கும் சரசுவதிச் சங்கம், இன்று
நாமணக்கும் பொன்விழா நடத்தல் கண்டு
  நாவலரும் பாவலரும் நயந்து கூடி
வாய்மணக்க வாழ்த்துகின்ருர்! வளம்பெற் ருேங்கி
  வள்ளுவம்போல் பல்லாண்டு வாழ்க! நன்றே!

சங்கத்தார் கண்டுவைத்த கல்விச் சாலே;
  சரசுவதிப் பெயர்க்கொத்த வித்யா சாலே;
எங்கள்அரும் பேராசான், இனிய பண்பன்;
  ஈடில்லா முத்தூசிவன் இருந்த சாலே;
பொங்குதமிழ்ப் புதுவயலில் நாற்ப தாண்டாய்ப்
  பொலிந்தோங்கி வளர்ந்துவரும் புனிதச் சாலே;
கங்கையைப்போல் காவிரிபோல் பயன்கள் தந்து
  கம்பனருட் கவிதையெனக் கனிந்து வாழ்க!

பொன்விழாக் காணும் புதுவயலின் நற்சங்கம்
  மென்மேல் புகழ்பெற்று மேலோங்கித்—
                                        தன்னிகரில்
சங்கத் தமிழைப்போல், சைவத் திருமுறைபோல்
  பொங்குகவே என்றும் பொலிந்து.

—பூ. அமிர்தலிங்கன்